வீட்டெலிகள்

கோவைகிழார்

கோவை நிலையப் பதிப்பகம்

வீட்டெலிகள்

கோவைகிழார்

கோவை நிலையப் பதிப்பகம்
திருச்சிப்பாதை, கோவை

விலை ரூ. 1-4-0

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை

பொருள் அடக்கம்

பதிப்புரை

விரைவு, வேகம் என்ற சொற்கள் தற்போது எல்லா மக்களின் வாயிலிருந்தும் வருகின்றவை. எல்லாச் செயல்களிலும் அவற்றையே காண்கிறோம். தாமதம், நிதானம் என்ற சொற்கள் இக்காலத்து மக்களிடம் இல்லை. அவர்கள் செயலிலும் தோன்றுவதே இல்லை. அவைகள் எவரிடமேனும் இருப்பின், அம்மக்கள் இக்காலத்திற்குத் தகுதியுடையவர்கள் அல்லர். மக்கள் மனப்பான்மை இவ்வாறான குறிக்கோளுக்கருகில் சென்றுகொண் டிருப்பதால், படிப்பிலும் அத்தன்மையையே காண்போம் அல்லவா? ஆகவே, சென்ற நூற்றாண்டில் இருந்த தன்மை இந்த நூற்றாண்டில் காண்பது அரிது. ஸ்காட், டூமாஸ், டிக்கின்சு முதலியோர் எழுதிய நூல்களை முழுவதும் வாசிப்பதற்கு இக்காலத்து மாணவர்களுக்குப் பொறுமை இல்லை. அவைகளை வீசம் பங்கு குறுக்கிவிட்டால் வாசிப்பார்கள். அதுதான் பள்ளிப் பாடங்களிலும் ஏற்படுகிறது. எந்த நவீனமும் சிறுகதையாகச் சுருங்கி நின்றால் மாணவர்களும் பெரியவர்களும் படிக்கக்கூடும். புகைவண்டியிலே பயணம் செய்கையில் வாசித்து முடிக்கும் கதை நூல்களுக்கே இந்நாளில் மதிப்பு மிகுதி. பணமும் கிடைக்கும். ஆகவே சிறுகதைகள் எங்கும் வளர்கின்றன.

நானே வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பண்புகளைக் கொண்ட சிறுகதைகளைத் தொகுத்தேன். பின்னால் அவைகளைக் கூறுகூறாகப் பிரித்துத் தொகுத்து வெளியிட்டேன். மக்கள் விரும்பி வாங்கினார்கள். அவைகளிலே சிறுகதைத் திரள், கோயில் பூனை, காட்டெருமை முதலியன சில. தற்போது வெளிவருவது வீட்டெலிகள். கோயில்பூனை

ஆஷாடபூதிகளுடைய கதைகள். காட்டெருமை செருக்கிற் செறிந்த செல்வர்களின் கதைகள். வீட்டெலிகளோ குடும்ப நடவடிக்கைகளைப் பற்றிய கதைகள். இவைகள் ஒரே காலத்தில் ஒரே மனப்பான்மையில் எழுதப்பட்டவைகள் அல்ல. பல காலங்களில் பல நினைவுகளுக்கிடையே எழுதப் பட்டவைகள். ஆகவே, இவைகள் பல நிலைகளை அடிப்படை யாகக் கொண்டிருக்கலாம். ஆனால் அவைகளில் ஊடுருவிப் பாயும் கொள்கை ஒன்றே. நமது தென்னாட்டுக் குடும்பத் தின் இயல்பே அவைகளில் காணலாம். இவைகளைத் தொகுத்து வெளியிட்டதில் மக்கள் சமூகம் ஒரு சிறிது சீர்ப்படின் அதுவே போதும் என்ற எண்ணத்தில் இந்நூல் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது.

சிறிது ஆழ்ந்து பார்க்கின், நமது குடும்பங்களில் வீரர் கள், தியாகிகள், நுண்ணறிவினர்கள், பொறுமையுள்ளவர் கள், பெருமையுள்ளவர்கள், தீரா இடும்பையினவர்கள், வறுமையில் செம்மையினர், ஊழில் வருந்தினவர்கள், உலக அனுபவிகள், நாகரிகப் புழுவினர்கள் முதலிய பலவகை மக்களையும் பார்க்கலாம். இவர்கள் எலிகளில், சிட்டெலி, சுண்டெலி, பெரிய எலி, பழுப்பெலி, வெள்ளெலி, வாலில்லா எலி முதலியவைகளைப் போன்று இருப்பவர்கள். ஆகவே இம்மானிட எலிகளைப்பற்றிய உண்மைச் சரிதைகளைக் கதைகளாகத் திரட்டி வெளியிடப்பட்டன. எலிகளைப் போன்றே சில சுருங்கிய வாழ்வு, சில விரிந்த வாழ்வு முதலி யவைகளைக் காணலாம். ஆகவே, ஒற்றுமைப்பாடு இவை களில் காண்பதரிது. ஆயினும் இவைகளைப் பொதுமக்கள் பொறுமையுடன் படித்துப் பயன் பெறுவார்களாக.

1-12-51 கோவைகிழார்

வீட்டெலிகள்

முன்னுரை

வீட்டெலிகள் நம்வீடுகளில் நம்மோடு உடன் வாழும் படியான சிறு உயிர் வகைகள். அவைகள் நம் வீட்டை விட்டு விலகுவதும் இல்லை. ஆனால் நம்மிடம் நெருங்கிப் பழகுவதும் இல்லை. நம்மைக் காணாதபோது வெகு வேலை களைச் செய்யும். கண்டுவிட்டாலோ ஓடி ஒளிந்துகொள்ளும். நாணம் அச்சம் முதலிய பண்டைப் பெண்களின் குணங் கள் அவைகளுக்கு உண்டுபோலும். நம் வீட்டிலேயே நம்மோடு விலகாமல் உறவாடி வாழும் பிராணிகள் நம் முடன் பழகாமல் ஓடி ஒளிந்துகொள்வது வியப்பல்லவா? நாமாவது வீட்டைவிட்டு ஏதாவது ஒரு காரணத்தினால் வெளி ஏகுவோம். ஆனால் வீட்டெலிகளோ குடியிருக்கும் வீட்டைவிட்டு வெளியே போகவேமாட்டா. அத்தனை வீட்டுப்பற்று அவைகளுக்கு உண்டு. பகைவர்களாகிய பூனை, பாம்பு, காக்கை இவைகள் வந்தால் வளைக்குள் ஓடி ஒளிந்து கொள்ளுமே தவிர அப்போதும் வீட்டை விட்டு அகலா. இவைகளுக்கு இருக்கும் வீட்டுக் குடும்பப் பற்று வேறு எந்த உயிருக்கு உண்டு?

வீட்டு எலிகள் என்ற உடனே காட்டு எலிகள் என்ற ஒரு எதிரிடை உயிர்கள் உண்டோ எனக் கேட்கலாமா? ஆம். அவைகளும் உண்டு. ஆனால் அவைகளின் குணம் வேறு, வீட்டெலிகளைக் காட்டிலும் பெரியவைகளாக

இருக்கும். காடுகளில் பெரிய வளைகளை நிலத்தில் குடைந்து கொண்டு நிலத்தில் உள்ள விளைபொருள்களைத் திருடி உண்டுவிட்டு வாழும். அவைகள் வீட்டில் பிழைப்பதில்லை. யதேச்சையாக மிகுந்த உரிமைகளைக் கொண்டாடிக் கொண்டு காட்டில் வசிப்பன. அவைகளைக் குறித்து நாம் இப்போது ஆராய வேண்டியதில்லை.

மேலும் வீட்டெலி என்ற பிரிவினையே யன்றி வேறுபல வகுப்புக்களும் எலிகளுள் உண்டு. சுண்டெலி, மூஞ்சூறு, பெரிய எலி, பெருச்சாளி முதலியவைகள்; இவைகளும் வீட்டிலேயே பாரம்பரையாகக் குடி கொண்டிருந்து நம் சொத்துக்களில் உரிமை பாராட்டிப் பங்கு பெற்றுக் கொள்ளுபவை. சுண்டெலி மிகச் சிறியது. ஆகவே பார்வைக்கு அழகாக இருக்கும். குட்டிகள் மிக நன்றாக இருக்கும். நமது பிள்ளைகள் கையில் அவைகள் அகப்பட்டு விட்டால் அவைகளை ஆட்டிவைக்கும் ஆட்டங்களுக்கு அளவே இல்லை. மூஞ்சூறோ கண்ணுக்கு வெகுவாக அகப்படுவதில்லை. கீச்சென்ற ஒலியும் அதன் வரவைக் காட்டும் ஒரு நல்ல வாசனையுமே வருவதுண்டென்பர்.

பெரிய எலிகள்தான் மிகவும் தீங்கு விளைவிக்கும் ஆனால் பெருச்சாளியோ குடித்தனக்காரரின் உயிரை வாங்கி விடும். இவைகளுக்கென்றே ஒரு தனிப் பழமொழியும் உண்டு. பெரும் பெருச்சாளியைக் கண்டால் எவரும் அஞ்ச வேண்டியதுதான். யானைமுகக் கடவுளையே சுமந்து செல்லும் என்றால் இது எதைக்கண்டு அஞ்சும்? நமது நாட்டிலும் வீட்டிலும் வெகு பழம் பெருச்சாளிகள் இருக்கின்றன. நாம் வருந்திச் சம்பாதித்த பொருள்களைத் தயை தாட்சிணியம் இன்றி அவைகளை எடுத்துச் சென்று அனுபவிக்கின்றன. எப்படிப்பட்ட பொறிகளை வைத்தாலும் அவைகள் சிக்குவதில்லை.

இவ்வகைகளே யன்றி, எலிவம்சங்களில், வெள்ளை எலி, கருப்பெலி, பழுப்பெலி, நீர்எலி, வாலில்லா எலி முதலிய வைகளும் உண்டு. வெள்ளை எலிகளை வேடிக்கைப் பொருள்களாகச் சில பிரபுக்கள் வளர்ப்பதுண்டு. ஆனால் அவர்கள் சம்பாத்தியத்தில் பெரும்பான்மையை அவைகள் தீர்த்துவிடும். ஒரு தடவை வெள்ளை எலிகள் நமது பண்ணை வீட்டில் புகுந்து விட்டால் அவைகளை அகற்ற எமதருமனாலும் முடியாது. நமக்கு சுயஅரசு இருந்தாலும் அவைகளுக்கு நாம் அடிமை ஆகிவிடுவோம். நீர்எலிகள் நமது நாட்டில் இல்லை. ஆறுகளில் வளைகளும் வாராவதிகளும் அதிசயமாகக் கட்டிக்கொண்டு வாழும். அவைகள் நமது நாட்டுக்கு வராமல் இருக்கும் மட்டும் நன்மையே.

எலிகளோ உலகமெங்கும் வாழும் பிராணிகள். எலி என்ற சொல் தமிழில் இடுகுறிப் பெயராதலாலும் சங்கத்து நூல்களிலும் கூறப்பட்டுள்ளதாலும் அவைகள் தமிழ் நாட்டிலுள்ள ஒரு தனிப் பிராணி என்று சிலர் எண்ணலாம். அது சரியன்று. அது எல்லா நாடுகளிலும் உண்டு. ஒவ்வொரு மொழியிலும் தனித்தனியாக அதற்கு ஒரு பெயர் உண்டு. பழைய கண்டமே யன்றிப் புது கண்டங்களிலும் உண்டு. அமரர் நாட்டிலும் உண்டு. அங்கு யானை முகக் கடவுளுக்கு ஒப்பற்ற ஊர்தியாகவும் உள்ளதால் அதன் வியாபகத் தன்மையைப் பற்றி விவரிக்கவேண்டியதேயில்லை. மேலும் நம் தென்னாட்டில் நாம் அதனைப் பலவிதங்களிலும் பயன்படுத்திக் கொள்ளா அறிவீனர்களாக இருந்தபோதிலும், வேறு நாடுகளில் அதன் பல உறுப்புக்களையும் தங்கள் வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்ளுவார்கள். வெள்ளையர் நாடுகளில் அதன் தோலைக் கையுறைகளாக அமைத்துக் கொள்வார்கள். உயிர் வதை செய்யக்கூடாது என்ற கொல்லா (அகிம்சா) விரதம் நிலைநாட்டின புத்த

பகவான் சீடர்களான சீனர்கள் அதன் இனிய நிணத்தைத் தம் உடற் பெருக்குக்குப் பயன்படுத்தி வருகிறார்கள். இனி அதிகம் சொல்லுவானேன். நம்நாட்டிலும் சங்கத்தார் நாளில் அதனுடைய மயிரினால் பட்டுப் புடவைகளை ஆக்கி அணிந்து வந்தார்களாம்.

'எலிப்பூம் போர்வை யொருமயிர்ப் படம்விரித்து'
—பெருங்கதை : 1 - 179

'செந்நெ ருப்புணுஞ் செவ்வெ லிம்மயிர்
அந்நெ ருப்பள வாய்ப்பொற் கம்பலம்'
—சிந்தாமணி : 2686

'மயிரெலியின் போர்வை' — ஷை : 1874

'எலிமயிர்ப் போர்வை' — ஷை : 2473

என்பவைகளில் காணும் அத்தனைப் பெருமை எலிக்கு நாம் தருவதில்லை.

இனி, எலி வகைளில் கூறிய மற்ற வகைகளைப் பற்றி நாம் மிகுதியாக ஆராய்ச்சி செய்யவேண்டியதில்லை. நம் நாட்டு வீட்டெலிகளைப் பற்றி மட்டும் ஆராய்வோம். நம் வீட்டிற்குள் புகுந்து கொண்டு நம் அனுமதியின்றி வளைகளை இயற்றிக் கொண்டு நம் பண்டங்களில் பங்கு எடுத்துக் கொண்டு பரம்பரையாக வாழும் இச்சிறு பிராணிகள், நம்மோடு பழகாமல் தனிக்குடும்ப வாழ்க்கை நடத்திவரும் என்று உணர்ந்தோம். நேரில் துரத்தினாலும் போவதில்லை. பொறிகள் வைத்தாலும் அகப்படுவதில்லை. பூனையை விட்டு மிரட்டினாலும் ஒழிவதில்லை. அத்தனை பிடிவாதத்துடன் வாழும் இவ்வுயிர்கள் நாம் சேமித்து வைத்திருக்கும் தானியங்கள் தின்பண்டங்கள் இவைகளில் எல்லாம் ஒப்பற்ற ஒரு பெரும் பங்குக்கு உரிமை பாராட்டி எடுத்துக்கொள்

ளும். இவைகள் ஏன் நம்மிடம் பழகி அனுமதியின் பேரில் பங்கு எடுத்துக் கொள்ளக்கூடாது என்று கேட்போம். அது இயலாது. 'எங்கள் குல இயற்கை' என்று அவைகள் கூறிவிடும். இத்தனை ஒத்துழையாமை கொண்ட இச் சிறு உயிர்களுக்குப் புத்தி போதிப்பதற்காகத்தான் அவைகளின் பகைவர்களாகிய பூனைகளை அனுப்புவதுண்டு. பொறிகளாகிய சிறைச்சாலைகளை வைத்து மரண தண்டனை விதிப்பதுண்டு. ஆனால் அவைகள் இந்த முறைகளுக்குச் சிறிதும் அஞ்சுவதில்லை. குடும்பங்களைப் பன்முறை பெருக்கும் வளர்ச்சி பெற்று சுகசீவிகளாக நமது வீட்டைவிட்டு அகலாத முறையில் வளர்கின்றன.

எலிகள் பண்டைக்காலம் முதற்கொண்டு நம்மோடு வாழும் பிராணிகள். ஆதலினால் அவைகளின் குணாதிசயங்களை நாம் நன்றாக அறிந்து அவைகளை நமது வழக்கப் பேச்சிலும் போற்றிவந்திருக்கிறோம். 'பூனைக்குக் கொண்டாட்டம் எலிக்குத் திண்டாட்டம்' என்பது நமது ஆன்றோர் மொழி. பூனை இல்லாதபோது எலி கூத்தாடுமாம். எப்போதும் இன்புற வேண்டுமென்று நினைத்த எலிகள் தம் பகைவர் வருவதை முன்னே அறியவேண்டி அதற்கு ஒரு கண்டாமணி கட்டவும் எண்ணினவாம். ஆனால் யார் கட்டுவது என்ற கேள்வி வரவே அவைகளின் அறிவு அதன் மேல் ஓடவில்லையாம். பிறர் பொருளையே உண்ணும் எலி வெகு தந்திரமாகத் திருடும். ஒருநாள் ஒரு நாட்டுப்புறத் தெலி உறவு கொண்டாடி வரவே அதற்குச் சற்று இடங் கொடுத்ததினால் அது தந்திரமாகத் திருடத் தெரியாத வகையிலே வெளிப்படையாகத் திருடவே வீட்டெலியும் அதனுடன் பிடிபட்ட கதையை யாவரும் அறிவார். ஆனால் பிறர்க்கு உதவி செய்வதிலும் நன்றி மறவாமையிலும் எலியும் சிறந்ததாம். சித்திராங்கிதன் என்ற புருவாசனுக்கு

ஒரு எலியன்றோ வேடன் வலையிலிருந்து கண்ணிகளை அறுத்துச் சிறைமீட்டிற்று. மேலும் தன்னுயிரைக் காப்பாற்றின சிங்கம் வேடனால் பிடிபட அச்சிங்கம் சிக்கின கயிற்று வலையைக் கடித்து அதனை அது தப்புவிக்கவில்லையா? இவ்விதக் கதைகளைப் படித்து நமது இளைஞர்கள் மகிழ்வதில்லையா? யாவற்றிலும் சிறந்த ஒரு கதையை ஓர் ஆங்கிலக் கவிஞன் உண்டுபண்ணியிருக்கிறான். ஒரு ஊரில் எலிகள் கட்டுக்கடங்காமல் பாண்டியநாட்டு நரிகளைப்போலப் பெருகி ஊரெல்லாம் அழிக்கத் தொடங்கிற்றாம். ஊராண்மைக் கழகத்தார் இன்னது செய்வதென்றறியாமல் திகைத்த போது ஒரு குழலூதி தோன்றிக் குழலை ஊதி எலிகளையெல்லாம் ஆற்றில் இறக்கிவிட்டானாம். அவைகள் நசித்துப் போக அவ்வூரார் அதற்குரிய பரிசைக் குழலாளிக்குத் தரவில்லை. மறுபடி அக்குழலோன் குழலை ஊதி அவ்வூர் இளைஞர்களை வசீகரித்து ஒரு குகைக்குள் அடைத்துவிட்டான். அறிவு பெற்ற ஊரார் குழலோனைக் கெஞ்சிக் கூத்தாடிப் பரிசுகொடுத்து மீட்டினதாக ஒரு அழகிய கதை ஆங்கிலத்தில் உண்டு. நம் சிறுவர்கள் படித்து மகிழ்வார்களாக.

எலி உபத்திரவம் ஆங்கில நாட்டு ஹாமலின் நகரத்தில் மட்டும் அல்ல, நமது தென்னாட்டுக் கோவையிலும் உண்டு. பலதடவைகளிலும் அவை மிகப் பெருகி படு சுரத்தைக் கொடுத்து வந்தது. அது கண்டு ஊராண்மையார் எலி வர்க்கத்தின் மீது போர் தொடங்கினார்கள். ஆனால் அப்போரில் யார் தோற்றார்கள்? சிலநாள் எலிகள் கொல்லப் படும். மறுபடியும் அவை பெருகிவிடும். இரத்தபீஜன் பெற்றிருந்த வரத்தை எலிகள்பெற்றிருப்பதாகக் கூறலாம். ஆனால் அவ்வெலிகளால் உலக மக்களுக்கு ஏற்படும் ஒரு பெரிய நன்மையைக் கூறாமல் இருக்கமுடியாது. தான் இறந்த போதிலும் பிறருக்கு உதவிபுரியும் குணம் கொண்டுள்ளது.

"சாந்தனையும் தீயனவே செய்திடினும், தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்"

என்ற ஔவைப் பிராட்டியார் வாக்கிற்கு ஒரு சிறந்த உதாரணம் எலியாகும். நச்சுச்சுரம் முதலில் எலிக்கு வரும். அது இறந்து நிலத்தில் விழும். அதை அறிந்து மக்கள் வீட்டை விட்டு ஓடிவிடுவார்கள். எலி விழாவிட்டால் மக்கள் நிலைமை அதோ கதிதான். ஆகவே தான் இறந்தும் பிறர்க்கு உதவிபுரியும் அல்லவா? "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாக" எலிகள் வாழுகின்றன. ஆகவே, அவைகள் நம்மோடு உறவாடி வாழ்வதினால் நமக்கும் பயன் உண்டல்லவா?

நாடகங்களில் கதா நாயகர்களாகச் சிறந்த பிறவிகளைத் தான் கவிவாணர்கள் கொள்ளுவார்கள். இழிந்த பிராணிகள் என்று மக்களால் கருதப்படும் எலிகளையும் கொள்வதுண்டோ? லில்லிபுட் சரிதம் எழுதிய ஆங்கிலக் கவி ஸ்விப்டும் எலிகளைக் கதாநாயகர்களாகக் கொள்ளவில்லையல்லவா? ஆனால் தற்கால விஞ்ஞானக் கலை உயர்ந்தோங்கும் இந்நாளில் சினிமா என்னும் ஒலி ஒளிப்பட நாடகங்களில் எலிகளைக் கதாநாயகர்களாக எடுத்தாண்டிருக்கிறார்கள். இலட்சக்கணக்கான பொன்களைச் செலவழித்து உண்டாக்கிய நாடகப்படம் மிக்கி மௌஸ் (Miky Mouse) என்ற அதிசயப் படமே ஆகும். அதில் ஒரு சுண்டெலி செய்த சாகசச் செயல்களை உலகில் மானிடரில் யாரே செய்யவல்லார். அதைப் பார்த்த இளைஞர் மனம் அதன் குணாதிசயங்களில் எவ்வாறேனும் ஈடுபடும். மேலும் சில ஆண்டுகளாக சென்னையில் சிறந்த ஆங்கில தினசரி ஒன்றில் வரிசையாக ஒரு தொடர்ச்சிப் படக்கதை வருகிறது.

அதிலும் ஒரு கதாநாயகி ஒரு எலிதான் (Curly Wee). ஒரு மக்கட் பாடசாலையில் ஒரு எலி செல்ல அதனைச் சேர்த்துக்கொள்ள மறுத்துவிட்டார்கள். தெய்வாதீனத்தால் ஒரு சிறந்த குணவந்தரின் பாடசாலை அணுகி அது சேர்ந்து வாசித்தது. வாசிப்பு முடிந்ததும் ஒரு தனிப்பாடசாலை அது ஏற்படுத்தித் தன் வருக்கத்தாருக்கு இலவசச் சம்பளமும் இலவச உணவும் தந்து அது கல்விச் சேவை செய்து எலிவர்க்கத்திற்கே கல்வித் திட்டம் அமைத்து நாகரீகர்களாக்கிவிட்டதாம். இப்படத்தின் கீழ் செய்யுள்களை எழுதி விளக்கின வெளியீடுகளை நாம் பார்த்துப் படித்து மகிழ்வோமாக. ஆகவே எலிகளும் கதாநாயக கதாநாயகிப் பாத்திரங்களுக்கு ஏற்றவையாகும்.

நாம் பொதுவாகப் பார்த்திருப்பது நான்கு காலும் ஒரு வாலும் உள்ள எலிதான். ஆனால் இரண்டு காலும் வாலில்லாததுமான எலிகளும் உண்டென்பர். அவ்விதமான பிராணிகள் உண்மையாக இருக்குமா என்பது கேள்வி. அவைகளுக்குக் கால்கள்தான் இரண்டே ஒழிய குணங்களோ எலிக்குள்ள எல்லாக் குணங்களும் உண்டாம். வருந்தாமல் திருடிப் பிழைப்பது, பிறர் பொருளைத் தம் பொருளாகப் பாவிப்பது, தம் குற்றம் பிறர் அறியாதபடி ஒளிந்து கொள்வது, எதிரிகள் இல்லாதபோது கூத்தாடுவது, எதிரிகள் வாராதபடி தடுக்க உபாயம் தேடுவது முதலியவை ஒருவித குணாதிசயம். குடும்பத்தோடு ஒத்துவாழ்வது, குடிகளுக்கு அபாயம் வராதபடி காப்பாற்றுவது, குடும்பத்தின் மீதும் குடியிருப்பின் மீதும் அளவற்ற பற்று, வீட்டைப் புறக்கணிக்காது வீட்டிலேயே இருப்பது, வெளி விவகாரங்களில் தலையிடாதது, இவை இரண்டாம்தாக் குணாதிசயம். தன்னுயிர்க்குக் கேடுவந்தாலும் பிறரைக் காப்பாற்றுவது, பரோபகாரமே சிரிய அறமாக நடப்பது முத

லியவை மூன்றும் குணாதிசயங்கள். இப்படிப் படிப்படியாக உயர்ந்து செல்லும் குணங்களை இரண்டுகால் எலிகளும் கொண்டிருக்குமாம். அந்தப் பெயர்களின் சரிதங்களை ஒரு கிழட்டெலி ஒருநாள் கூறிற்று. அவைகளை இனி விளக்கு வோமாக. அவ்வெலிகளின் பெயர்கள் முதலியவை அக் கிழட்டெலியின் வாக்கேயன்றி உண்மை என்று எனக்குத் தெரியாது. மேலும் இவ்வெலிகளுக்குள்ளே கருப்பெலி, பழுப்பு எலி, வெள்ளை எலி, சுண்டெலி, பெருச்சாளி முதலியவை உண்டென்று சொன்னோம். இரண்டு கால் எலிகளிலும் இப்பாகுபாடு இருக்கின்றனவாம். அவைகளி லும் சில எலிகள் பண்டைய வரலாறுகளைப் பெற்றிருக்கின் றனவாம். அவ்வரலாறுகளை இடம் இருந்தால் எலி சொன்ன முறையில் எழுதுவோமாக.

நாம் அடைந்துவரும் உலக அனுபவத்தில் நான்கு கால் எலிகளுக்குள் நடைபெறும் குடும்பக் காட்சிகளில் சிலவற்றை நேரில் கண்டு அதிசயத்துள்ளோம். அவைகள் இரண்டுகால் எலிகளுக்குள்ளும் இருக்கும் என உத்தேசித் திருக்கிறேன். கால்களின் எண்ணம்தான் மாறுபடுமே அன்றி குணவிசேஷம் மாறுமா ?

ஒருநாள் நான் இராயலுசீமையில் புகைவண்டி வழியாக ஒரு நிலையத்திலிருந்து மற்றொரு நிலையத்திற்குச் சென்று கொண்டிருந்தேன். நான் ஏறியிருந்த வண்டியில் இருவர் இளைய வயதினர் இருகுழந்தைகளுடன் இருந்தனர். தம்பதி கள் என்று ஊகித்துக் கொண்டேன். அவ்வண்டியில் எதி ரெதிரே இரண்டு மெத்தைப் பலகைகள் இருந்தன. ஆடவர் ஒரு பலகையின் கடைசியிலும், பெண்பால் இரு குழந்தை களுடன் மற்றப் பலகையின் எதிர் நுனியிலும் உட்கார்ந் திருந்தார்கள். ஆடவர் தற்காலத்து நாகரீகச் சட்டையில் விளங்கினர். ஓர் ஆங்கில தினசரியால் தம் முகத்தை

மறைத்துக்கொண்டு அதிலேயே கவனம் செலுத்திக் கொண்டு வந்தார். பெண்பாலோ பண்டை உடையில் திகழ்ந்தாள். சிறிது கருத்த மேனியினள். குழந்தைகளோ இரண்டும் பெண்மயம். அழகு அவ்வளவாக இல்லை. தாய் அவர்களுக்குச் சிறிது தின்பண்டம் கொடுத்து அவர்கள் உண்ட பிறகு கைவாய் கழுவித் துடைத்தாள். சிறிது நேரம் கழித்து மறுபடியும் அவர்கள் கத்தினார்கள். இன்னும் சில பண்டம் கொடுத்துவிட்டுத் தொந்தரவு செய்ததினால் அவர்களை அதட்டினாள். 'பெருந்திண்டிகள்' என வைதுவிட்டு நொறுக்கினாள். ஒரு குழந்தை அழுது கொண்டு மூலையில் படுத்துக்கொண்டது. மற்றொன்று வேறுபுறம் படுத்துக்கொண்டது. இந்தக்கூத்து முழுவதை யும் பாராதவர் போல் ஆடவர் தினசரியில் மூழ்கி இருந்தார். நானும் மூன்று மணிநேரம் அதே வண்டியில் இருந்தேன். இருவருக்குள் ஒரு பேச்சும் நடைபெறவில்லை. அவர்கள் வடநாட்டிலிருந்து வந்து கொண்டிருக்கிறார்கள் என்று ஊகித்தேன். ரேணுகுண்டாவில் இறங்கினதினால் குழந்தை களுக்கு முடிவாங்குவதற்குத் திருப்பதிக்குச் செல்ல அவர் களுக்கு உத்தேசம் என ஊகித்தேன். ரேணுகுண்டா வந்ததும் ஒரு பேச்சும் பேசாமல் ஆடவர் இறங்கிவிட்டார். பெண்பாலோ தன் குழந்தைகளை இட்டுக்கொண்டு இறங்கி னாள். பிறகு இரயில் நிலையத்தில் தனியே ஒருபுறம் ஒதுங்கி நின்றாள். இரயிலில் இருந்த சாமானைக் குறித்துச் சிறிதே னும் கவனம் செலுத்தினாள் இல்லை. ஆடவர் ஒரு கூலி யாளைக் கூப்பிட்டுச் சாமானை எடுக்கும்படிக் கட்டளையிட் டார். என் வண்டியும் புறப்பட்டது. அக்காட்சி எனது மனக் கண்ணைவிட்டு வெகு நேரம் விலகவே இல்லை. இவ் விருவருக்குள்ளும் என்ன உணர்ச்சியோ தெரியவில்லை. ஊடலோ அல்லது அன்பில்லா நிலையோ என்னமோ ஊகிக்க

முடியவில்லை. இரண்டாவதாக இருக்கலாம். இத்தகைய அன்பில்லா வாழ்வை வடநாட்டில் தன்னந்தனியே எவ்வாறு நடத்தினர்களோ? நேசிக்காத மனைவியை வைத்துக் கொண்டு ஆடவன் எவ்வாறு பொறுத்திருந்தான். நேசிக்காத கணவனை வைத்துக் கொண்டு பெண் எவ்வாறு வாழ்ந்து வந்தாள்? உலகினர்க்குத் தெரியாதவாறு தாங்கள் இல்லறமும் நடத்திவந்திருக்கலாம். தன் நாகரீகக் கோலத்திற்கு ஒவ்வாத உருவத்தினளைத் தன் மனைவி என்று பிறர் ஊகிக்காதபடி ஆடவர் வாய்திறவாது இருந்தாரோ அறியோம். திருநீலகண்ட நாயனருடைய சரிதம் இவர்கள் வீட்டில் சிறிது மாறி நடைபெற்றதோ எனவும் வியந்தேன்.

மற்றொரு நாள் இதற்கு முற்றும் மாருன காட்சி ஒன்றைக் கண்டேன். அதே இராயலுசீமை இரயில்வண்டியில் சென்று கொண்டிருந்தேன். அதில் யுவனும் யுவதியும் அடுத்தடுத்து வீற்றிருந்தார்கள். இருவரும் தற்காலம் தென்னுட்டில் நாகரீக வாழ்வில் வாழும் வாலிபர்களைப் போல் உடை உடுத்தியிருந்தார்கள். வயதைப் பார்த்தால் சமீபத்தில் தான் திருமணம் ஆகியிருக்க வேணுமென்று ஊகித்தேன். வாலிபன் உடையோ ஆங்கில சட்டை, பெண்பாலோ உயர்ந்த சினிமா உடை. அதற்குத் தகுந்த அணிவகைகள். இருவரில் ஆடவன் பேசிக்கொண்டே இன்பசாகரத்தில் மூழ்கிக்கிடந்தான். பெண்ணே சிறிது நாணமுடையவளாய் வேளைக்கொரு பேச்சுத்தான் பேசுவாள். பேசியது தமிழானுலும் மலையாள உச்சரிப்பு இருந்தது. வடநாட்டில் வேலையிலிருந்து சிறிது விடுதிபெற்றுக் கொண்டு தம் சொந்த ஊருக்குத் திரும்புவதுபோலத் தெரிந்தது. அதே வண்டியில் இரண்டு வெள்ளைப் போர் மாக்கள் எதிர்ப்பலகையில் வீற்றிருந்தார்கள். தம்பதிகளின் வெளிப்படையான சேஷ்டை கலந்த பேச்சு வண்டியில் இருந்த

எங்கள் யாவரையும் இழுத்தது. ஆடவன் அப்பெண்ணை அடிக்கடி தன் அருகில் இழுத்து உட்கார வைப்பான். அவளோ வெட்கி ஒதுங்குவாள். அவள் தலைச்சடைப் பின்னலைக் கையில் எடுத்து அவள் முகத்தில் கவரிபோல வீசுவான். அதனைச் சகிக்காது அவளோ வெறுப்பதாகக் குறிப்பாள். அவள் கன்னத்தில் தன் விரல்களால் முத்தம் இடுவதைப்போல் தொடுவான். அவள் நாணுவாள். பிறர் பார்க்கிறார்கள் என்று அஞ்சுவாள். ஆனால் கண்ணோ அந்தச் சேஷ்டையை அனுமதித்தது என உணர்த்தியது. இச் செயல்களால் அவர்களுடைய அன்யோன்யபாவம் அன்புததும்பும் வகையில் விளங்கியது என்றாலும் பல ஆடவர்கள் இருக்க இவ்வகையாக ஆடவன் செய்தது எங்களுக்கு விபரீதமாகத் தோன்றிற்று. தமிழ் நாட்டில் இது நடக்குமா என வியந்தேன். வெள்ளையர் இவ்வகைக்குப் புறம்பானவர் அல்லர். எனினும் அன்றிருந்தவர்கள் சிறிது வயது சென்ற மக்களாக இருந்ததினால் இக்காட்சியைக் கண்டு வெறுப்படைந்ததாகக் காட்டி முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள். இது என்ன காட்சி! காதல் வெறி கொண்டு விட்டதல்லவா! முன் காட்சிக்கும் இதற்கும் உள்ள தாரதம்மியம் பாருங்கள். இக்காட்சிகளை நடித்துக் காட்டிய பாத்திரங்கள் எப்பேர்ப்பட்ட எலிகள்? முன் காட்சியில் கண்டது பழுப்புநிறஎலி யென்றும், பின் காட்சியில் கண்டது செகப்புநிற எலி என்றும் அறியலாம். முதல் எலி பண்டை நாகரீக எலி. புது நாகரீகம் இன்னம் பழகாத எலி. பின் எலி புது நாகரீகத்தில் நுழைந்து நாணத்திற்கும் அஞ்சாது வாழும் புது உலக எலி என்றும் அறிய வேண்டும். பழைய நாகரீகமும் புது நாகரீகமும் சந்திக்கும் இந்நாளில் இவ்விரு விபரீதக் காட்சிகளையும் காண்பது இயல்பே.

1. பெண்ணின் பொறுமை

நாகம்மாள் ஒரு பணக்காரப் பெண். அழகாக இருப்பாள். இளவயதில் நன்ருக வாசித்தாள். நற்குணம் உடையவள். படிப்பில்லாத தாயார் பேச்சைக் கேட்டுத் தகப்பன் அவள் படிப்பதை நிறுத்திவிட்டான். என்ருலும் வீட்டு வேலைகளை நன்கு கவனித்து வந்தாள். ஏழைக் குடித்தனத்தில் பிறந்த பெண்ணைப் போலவே சமையல் முதலிய வேலைகள் முழுவதும் கற்றிருந்தாள். தக்கவயது வந்தது. பல பணக்காரர்கள் அவளை மணம் செய்துகொள்ள வேண்டும் என்று ஆள் அனுப்பினர்கள். தகப்பனே பார்க்கலாம் என்று கெடு சொல்லி வந்தான். தாயாருக்கோ தன் தமையன் மகனுக்கே அவளைக் கொடுக்கவேண்டும் என்ற விருப்பம். பொன்னப்பனுக்குப் படிப்பும் இல்லை. சொத்தும் இல்லை. அவனுடைய அப்பன் எல்லாம் தொலைத்துவிட்டான். தாயும் இறந்துவிட்டாள். தன்னந் தனியே இந்த அகன்ற உலகில் விடப்பட்டிருந்தான். வயதாகியும் யாதொரு வேலையிலும் அமரவில்லை. ஒரே வீடுமட்டும் மிச்சம் இருந்தது. அதுவும் ஒரு கிராமத்தில். அதனை விலைக்குக் கேட்பார் இல்லை. காலை முதல் சீட்டாடுவதன்றி வேறொன்றும் அவனுக்குத் தெரியாது. சீட்டாட்டத்தில் காசு கிடைத்தால் சாப்பாடு. இல்லாவிட்டால் பட்டினி. இப்படிப்பட்ட மகானுக்கு நாகம்மாளைக் கொடுப்பதாக அவள் தாய் முடிவு செய்துவிட்டாள். தகப்பன் மன்ருடிப் பார்த்தான். அவள் உடும்புப் பிடியாய்ப் பிடித்தாள். 'வீட்டில் துணை இல்லாததால் அவன் கண்டபடி திரிகிருன். வீட்டில் லக்ஷ்மி போல் ஒரு மனைவி வாய்த்துவிட்டால் அவன் இப்படித் திரிவானு? தானுக வேலைசெய்து சம்பாதிப்பான். நாகத்திற்குச் சீதனம் கொடுப்போம். அவளோ புத்திசாலி. கணவனை நல்ல வழிக்

குக் கொண்டுவந்துவிடுவாள். சுகவாழ்க்கை ஏற்படும். மருமகன் ஏழையானுல் சொன்னபடி கேட்பான். பணக்காரன் வீட்டில் கொடுத்துவிட்டால் எப்போதும் போராட்டம்தான். நாம் குழந்தையைக் கிணற்றில் தள்ளிவிட்டதுபோல் ஆகும்' என்று வாதாடினுள்.

இந்தத் தலையணை மந்திரோபதேசம் கேட்ட தகப்பன் அவள் பேச்சுக்குச் சம்மதித்தான். திருமணம் நடைபெற்றது. ஒரு வீடு, ஒரு நிலம், சிறிது தொகை, தட்டுமுட்டுச் சாமான்கள் சீதனமாகக் கொடுக்கப்பட்டன. நாகம்மாள் பொன்னப்பனுடைய வீடு சேர்ந்தாள். கணவன் ஊரோ வேருெரு கிராமம். அங்கே அவனுடைய வீட்டில் குடித்தனம் செய்தாள். கணவன்மீது மிக அன்போடு சமையல் முதலியன தானே செய்து பரிமாறித் தானும் சாப்பிட்டு வந்தாள். குடும்பம் நன்ருக நடந்தது சில மாதங்கள்.

மாமியார் எதிர்பார்த்தபடி பொன்னப்பன் சீர்திருந்தவில்லை. திருமணம் ஆனதும், எப்போதும்போலத் தன் நண்பர்களுடன் சீட்டாட்டம் ஆடுவதிலேயே காலம் கழித்தான். அடிக்கடி தோற்றுப்போவான். நிலங்காணி பார்ப்பதில்லை. வரும்படியும் குறைந்தது. செலவுகளுக்கு அது போதவில்லை. நாகம்மாள் கூடியமட்டும் சிக்கனமாக நடந்துகொண்டாள். வரும்படியில்லாமல் செலவே ஆகிக்கொண்டிருந்தால் அக் குடும்பம் என்னமாக முடியும்? நாளுக்கு நாள் கடன் ஏறிச் சீதனச் சொத்து முழுவதும் தொலேந்தது. அவள் அணிந்திருந்த நகையைக் கேட்டான். அதையும் அவள் பதில் சொல்லாமல் கொடுத்தாள். பதில் பேசியிருந்தாலும், புத்திமதி சொல்லியிருந்தாலும் அவள் கதி என்னவாகும் என்பது அவள் அறிந்தவள். குரங்குக்குப் புத்தி சொன்ன தூக்கணுங்குருவிக் கதிதான் ஆகும். ஆகவே அவள் நகையைக் கழட்டிக் கொடுத்தாள். அவைகள் முழுதும் நாசம் ஆயின.

பிறகு குடியிருந்த வீட்டையும் விற்றுச் சூது ஆடினன். அந்தப் பணம் எத்தனை நாள் நிற்கும். வீட்டை வாங்கின ஆள் வீட்டைக் காலிபண்ணச் சொன்னான். பிறகு இருப்பதற்கு வீடு எங்கே ? ஊருக்கு வெளியே ஒரு சிறு மட்டை வீடு கட்டிக்கொண்டு அதில் வாழ்ந்தார்கள். ஆனாலும் சூது ஆட்டம் நிற்கவில்லை. புகழேந்திப் புலவர் சூதின் கொடுமையை வெகு உருக்கமாகச் சொல்லியிருக்கிறார் அல்லவா ? அது முழுவதும் இக்குடும்பத்தில் தோன்றியது. இத்தனை கஷ்டப்பட்டும் நாகம்மாள் தன் தகப்பனிடம் தன் கணவனுடைய செயல்களைப்பற்றி ஒரு சொல்கூடச் சொல்லவில்லை.

ஒருநாள் வீட்டில் சாப்பாடு இல்லை. சூதாட்டத்திலிருந்து வீடு திரும்பினன் பொன்னப்பன். முகம் கோரமாக இருந்தது. கோபத்தினால் அரக்கனைவிடக் கொடூரமாக இருந்தான். அதைக் கண்டு நாகம்மாள் அஞ்சினாள். வீட்டிலிருந்த சிறிது உணவு மட்டும் தந்தாள். தானோ இரண்டு நாளாக உண்ணக் கிடையாது. அது அவனுக்கு எப்படித் தெரியும் ? தெரிந்தாலும் அதனைப் பொருட்டாக எண்ணமாட்டான். சாப்பிட்டவுடன் ‘போதாது இன்னமும் கொஞ்சம் கொண்டுவா’ என்று கத்தினன். என்ன செய்வாள் நாகம்மாள். தன் கணவன் மற்றொரு மாம்பழம் கொண்டுவரச் சொல்லிக் கேட்டு நடுங்கின புனிதவதியைப் போல் நடுங்கினாள். உள்ளே சென்று எதுவும் இல்லாமல் இருக்க வெளியே வந்து பதில் கூறாமல் சும்மா நின்றாள். ‘எங்கே சாதம் ?’ என்று கர்ச்சித்தான். இறுதியில் வெகு துக்கத்துடனும், அச்சத்துடனும் ‘இருந்ததெல்லாம் படைத்தேன்’ என்றாள். ‘இனி இல்லையா’ என்று உரக்கக் கூவித் தன் தட்டத்தை எறிந்தான். அது அவள் முகத்தில் பட்டுக் காயம் ஆயிற்று. ‘பெருச்சாளிக் கழுதை’ என்று திட்டிவிட்டுக் கை கழுவிவிட்டு வெளியே சென்றான்.

மறுநாள் வீட்டில் ஒன்றும் இல்லை. வெளியே போன வன் திரும்பி வரவே இல்லை. இரண்டுநாள் கழித்து மறுபடியும் வீட்டிற்கு வந்து யாதும் இல்லாதது கண்டு மிகச் சினந்து ‘உன் தகப்பனுர் வீட்டிற்குப் போய் ஏதாவது வாங்கி வா’ என்று கத்தித் துறத்தினுன்.

அவளோ இன்னது செய்வதென்று தெரியாமல் தகப்பனுர் வீடு சென்ருள். தூரத்திலிருந்து பார்த்த தாயார் வெகு அன்போடு கட்டி அணைத்து முத்தம் இட்டுக் ‘கண்ணே இது நாள் வரவில்லையே. நீயும் உன் கணவனும் சௌக்கியமா’ என்று கேட்டாள்.

‘ஆமாம்மா, சௌக்கியம்தான்.’

‘ஏன் இப்படி இளைத்து இருக்கிருய்?’

‘ஏதோ சிறிது பித்த சுரம் வந்துவிட்டது. இப்படி இருக்கிறேன்.’

‘எனக்கு ஒரு வார்த்தை சொல்லி அனுப்பலாகாதா, வைத்தியனை அனுப்பியிருப்பேனே’ என்ருள்.

‘இல்லை, அப்படி ஒன்றும் கெடுதலாக இருக்கவில்லை’ என்ருள்.

‘சரி, சாப்பிடு’ என்று சொல்லிச் சாப்பாடு தந்தாள். இரண்டு மூன்றுநாள் பட்டினியோடு இருந்ததினுல் நன்ருகச் சாப்பிட முடியவில்லை. சிறிது சாப்பிட்டுவிட்டுத் தூங்கினுள். எழுந்தவுடன் அம்மாள் ‘ஒரு நகையும் காணுேமே, எங்கே’ என்ருள்.

‘எங்கள் கிராமத்திலே பயம். ஆகவே அவைகளைப் பாங்கியிலே க்ஷேமமாக கணவர் வைத்திருக்கிருர்’ என்ருள்.

‘ஐயோ, கொஞ்சமாவது போட்டிருக்கக் கூடாதோ’ என்று சொல்லித் தன் கழுத்திலிருந்த மாலையை கழற்றித் தந்தாள்.

'அதனை நீயே வைத்துக் கொள்' என்று சொன்னாள். அது கேட்டு மீத மீறிய அதிர்ஷ்டம் என்று சொல்லி இறைவனைப் பிரார்த்தித்தாள்.

அன்று மாலை தன் ஊருக்குத் திரும்பினாள். கணவன் அன்று இரவு வந்தான். அவன் வாய்திறப்பதற்கு முந்தியே தன் மாலையைக் கழட்டித் தந்தாள். அவனோ நன்றிகூடச் செலுத்தாமல் அதைப் பிடுங்கிக்கொண்டு சென்றுவிட்டான். அதனால் கிடைத்த பணம் ஒரு வாரம்கூட நிற்கவில்லை.

ருசிகண்ட பூனை சும்மா இருக்குமா? மாமியார் வீட்டுக்கு மனைவியைத் துரத்துவதே வேலையாக இருந்தான் பொன்னப்பன்.

இப்படி ஒன்றிரண்டு தடவை நடந்தது. ஆனால் உண்மையை அவளுடைய பெற்றோர்க்குத் தெரிவிக்கவே இல்லை.

மற்றொரு நாள் வீட்டிற்கு இரவில் வந்தான். வந்த போது வீட்டில் உண்பதற்கு எதுவும் இருக்கவில்லை. நாகம்மாளுக்கும் அன்று காலை முதல் பட்டினி. அவனுக்கோ வெகு கோபம் வந்துவிட்டது. அடித்தான். அவளோ தன் விதியை நொந்து சத்தமில்லாமல் கண்ணீர் உகுத்துக் கொண்டு இருந்தாள். அதுகண்டு கழுத்தைப் பிடித்து உந்தி வீட்டிற்கு வெளியே தள்ளிவிட்டு வீட்டைத் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு படுத்துக் கொண்டான்.

நிர்க்கதியாக வெளியே தள்ளப்பட்ட நாகம்மாள் என்ன செய்வாள்? வீட்டுத் திண்ணையிலே பதுங்கிக் கொண்டு கிடந்தாள். துக்கத்தினால் ஒய்ந்து சலித்துத் தூங்கிவிட்டாள். நடுநிசியில் அவன் மீண்டும் எழுந்து வந்து தூங்கிக்கொண்டிருந்த அவளை எழுப்பி தாதரவென்று இழுத்துக்கொண்டு சென்றான். தூக்கத்தினாலும், களைப்பினாலும், பசியாலும் அவளுக்கு நடக்கிற காரியம் தெரிய

வில்லை. வெகு தொலைவு இழுத்துக்கொண்டு போய்த் தாயார் ஊருக்கு வெளியே நிறுத்திவிட்டு, 'இதோ உன் தாயார் வீடு, அங்கே போய்ப் பணம் வாங்கிவா. இல்லாவிடில் என்னிடம் வராதே' என்று மிரட்டிவிட்டுப் போய்விட்டான். இதற்குள் விடிந்துவிட்டது. ஊர்மக்கள் ஒவ்வொருவராக வேலைக்குச் சென்று கொண்டிருந்தார்கள். நாகம்மாள் நடையும், உடையும் அலங்கோலமாக இருந்தன. இந்தக் கோலத்துடன் தாய்வீடு சென்றால் என்ன சொல்லுவதோ என்று நடுங்கி அருகில் இருந்த தோட்டக்கிணற்றண்டை சென்று அங்கே இறைத்துக்கொண்டிருந்த வாய்க்கால் நீரில் கைகால் முகம் கழுவிக்கொண்டு மெதுவாக ஊர் புகுந்தாள். தாயார் கண்டு வெகு அன்புடன் அழைத்தாள்.

'என்ன தனியாக வருகிறாயே. எப்படி இந்த விடியலில் வந்தாய்? உன் உடம்புக்கு என்ன' என்று எல்லாம் கேட்டாள்.

'என் கணவன் அழைத்துவந்தான். அவருக்குச் சில நாள் சோலி வெளி ஊரில் இருக்கிறதாம். அவசரமாகச் செல்லவேண்டுமாம். ஆகவே இங்கு வருவதற்கு நேரமில்லை. என்னைப் போகச் சொன்னார்' என்றாள். அதைக் கேட்ட தாய் வெகு பிரியத்தோடு அவளை அழைத்துச் சென்று தன் வீட்டில் வைத்து ஆதரித்தாள். உடம்பு குணம் ஆயிற்று.

தகப்பனார் அவளுக்கு என்று நகைகள் செய்துவைத்திருந்தார். அவைகளை அவளுக்குக் கொடுத்தாள். அவள் அதை அணிந்து கொண்டு சிலநாள் இருந்தாள்.

அவளை விட்டுப்போன பொன்னப்பன் மீதியிருந்த குடிசை வீட்டையும் விற்றுவிட்டுப் பணம் முழுதும் செலவழித்து விட்டான். இனி எவ்வாறு அவளை மீட்டிக் கொண்டு வருவது என்று யோசித்தான். ஆசை வெட்கம்

அறியாது. அதுபோல் சூது துன்பம் அறியாது. வெட்கம் தான் அறியுமோ?

பொன்னப்பன் ஒரு நாள் மாமனூர் வீட்டிற்கு வந்தான். அதுவரை அழைத்தும் வராத அவன் பலவந்தமாக வந்தால் யார்தான் வரவேற்க மாட்டார்கள். எல்லோருக்கும் ஒரே குதூகலம். பெரிய விருந்து வைத்தார்கள். அவனும் நன்ருகச் சாப்பிட்டான். ஆனுல் நாகம்மாளுக்கோ மிகுந்த பயம். தான் புதிதாக நகை போட்டிருந்ததை அவன் பார்த்திருப்பான். இனி என்ன செய்வானே என்பதுதான் அவளுடைய பயத்தின் காரணம். கழட்டிக் கொடுக்கச் சொன்னுல் கொடுத்துவிடுவாள். ஆனுல் அவைகள் எத்தனை நாளைக்கு ஆகும்? திரும்பியும் அடிதானே என்று எண்ணினுள்.

நான்கு நாள் விருந்து சாப்பிட்டு முடிந்தது. நகை நட்டு துணி கிணியோடு நாகம்மாளை அழைத்துக்கொண்டு பொன்னப்பன் சென்ருன். அவனுக்கும் புது ஆடைகள், மோதிரம் முதலியன கிடைத்தன. இவைகளை எல்லாம் எடுத்துக்கொண்டு வேறொரு ஊருக்குச் சென்ருன். தன் ஊரில் குடிசையும் இல்லை என்பது நாகம்மாளுக்குத் தெரியாது. புது ஊரில் ஒரு குடிசை. அதைக் கூலிக்குப் பெற்று அதில் தங்கினுர்கள். 'பழைய குருடி கதவைத் திறடி' என்ற பழமொழி போலப் பழைய பேய் மீண்டும் அவனை அழைக்கத் தொடங்கியது. ஒருநாள் சூதாட்ட நண்பர்கள் அவனைத் தேடிக்கொண்டு இப்புது ஊருக்கு வந்து அவனைக் கண்டு கொண்டார்கள். அது முதல் இரவெல்லாம் அவனைக் காணவில்லை. சாமான்கள் ஒவ்வொன்ருகச் சென்றன. நகைகளும் மறையத் தொடங்கின. ஒருநாள் அவனுக்குப் பெருத்த தோல்வி. வீட்டிற்கு வந்தான். நாகம்மாளை அடித்து ஒன்றுவிடாமல் உரித்துக்கொண்டு

ஓடிவிட்டான். அழாத அழுகையிலே அவள் கிடந்தாள். பாவம் அவன் அடித்ததிலே இரண்டு மூன்று காயங்களும் பட்டன.

இரவு எல்லாம் தூக்கம் கெட்டுக் காலை எழுந்தாள். வீட்டில் யாரும் இல்லை. தனியே என்ன செய்வாள்? வீட்டுச் சொந்தக்காரனும் வீட்டு வாடகைக்கு வந்து நின்றான். அவனிடம் சாக்கு சொல்லிவிட்டு இருந்த கிழிசல் துணியை உடுத்திக்கொண்டு வெளியே புறப்பட்டாள்.

வெகு தொலைவு, வெகு சிரமப்பட்டு நடந்தாள். ஆயாசத்தினால் பல இடங்களில் உட்காரவேண்டி வந்தது. மாலையில்தான் தாயார் வீடு சேர்ந்தாள்.

'அம்மா, ஏன் இப்படி இருக்கிறாய்? உடம்பிற்கு என்ன, உன் நகைகள் எங்கே' என்றாள் தாயார்.

'அம்மா, கணவர் ஏதோ ஒரு சோலிக்காக வெளியூர் சென்றார். அவர் ஊரில் இல்லாத சமயம் பார்த்து கள்ளர் புகுந்து என்னை அடித்துத் துணிமணி நகை எல்லாம் கொள்ளை அடித்துக்கொண்டு போய்விட்டார்கள். நடந்து வந்தேன்' என்றாள்.

'பாவம், உன் கதி இப்படி ஆக வேண்டுமா? இங்கேயே இரு' என்று சொல்லித் துணி முதலியவை கொடுத்துத் தன் வீட்டில் வைத்து ஆதரித்து வந்தாள்.

சில மாதங்கள் சென்றன. வெளியே ஓடிப்போன பொன்னன் கதி என்ன ஆயிற்று? அவனுடைய நண்பர்கள் அவனை ஏமாற்றி நகைகளைப் பிடுங்கிக்கொண்டார்கள். அவன் எதிர்க்க அவர்கள் நன்றாக அடித்துக் கோவணாண்டியாக்கித் தெருவிலே தள்ளிவிட்டார்கள். அப்போதுதான் 'துஷ்ட சகவாசம் பிராண கஷ்டம்' என்று அறிந்தான். தன் பெண்சாதியை அடித்தது மிகவும் தப்பு என்று அறிந்தான். 'அவளிடம் மீண்டும் எப்படி செல்லுவது? மாமனார்

மாமியார் தன் செய்தி அறிந்திருப்பார்களே! தன்னை எப்படி வரவேற்பார்களோ ' என்று எண்ணிப் பச்சாதாபப் பட்டான்.

இருந்தாலும் ஒரு நாள் ஒரே தைரியத்துடன் மாமனார் வீடு சேர்ந்தான். எதிர்பாராத வரவேற்புக் கிடைத்தது. மனைவியும் மிகுந்த அன்போடு அழைத்தாள். தான்செய்த கொடுமைகளை ஒரு சிறிதும் தன் மனைவி வெளிவிட வில்லை என்று அறிந்தான். ஊரிலும் இவன் கொடுமைகளைப்பற்றி ஒரு பேச்சும் இருக்கவில்லை. தன் மனைவியின் கம்பீர குணமே இதற்குக் காரணம் என்று நினைத்தான். மாமியார் அவனை அங்கேயே இருக்கும்படி வற்புறுத்தினாள். அவனும் சம்மதித்து அங்கே இருந்துவிட்டான். மாமனார் குடித் தனத்தைக் கவனித்தான். முழுவாழ்க்கையே மாறிவிட்டது. நகைகளைத் தான் கொள்ளையடித்தாலும் அதை மாற்றிக் கொள்ளைக்காரர்கள் அடித்தார்கள் என்று சொல்லும் ஒரு மனைவி எப்படிப்பட்ட குணவதி என்று அறிந்தான். சில நாளில் ஒரு மகன் பிறந்தான். வெகு நிம்மதியுடன் புது வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

2. ஆணின் தகைமை

கந்தசாமி பிள்ளை ஒரு செல்வவான். நிரம்ப நிலம் காணி உண்டு. வெகு நன்றாக குடித்தனம் செய்துவந்தார். வெகு சிக்கனமாக விவசாயம் நடத்தி வந்ததினால் எப்போதும் நஷ்டம் என்பது ஏற்படவில்லை. ஊரிலே நல்ல மதிப்பும் இருந்தது. ஏழைகளுக்கு உதவியும் செய்துவந்தார். அவரைக் கண்டால் எல்லோரும் வெகு மரியாதை செய்வார்கள். அக்கம் பக்கத்துக் கிராமங்களிலும் அவருக்கு நல்லபேர் இருந்தது. அவருக்கு மூன்று ஆண்பிள்ளைகள். அவர்களுக்குத் தற்காலப் பள்ளிக்கூடப் படிப்பு இல்லாமல் போன போதிலும் திண்ணைப் பள்ளிக்கூடப் படிப்பாவது இருந்தது. மக்களும் நல்லவர்கள் என்ற பேர் எடுத்து வெகு மரியாதையோடுதான் இருந்தார்கள். அவர்கள் தம் தகப்பனுருக்கு நிலம் கவனிப்பதில் உதவி செய்து கொண்டு வந்தார்கள். தகப்பனுருக்கு வயதும் ஐம்பதுவரை ஆகி விட்டது. மூத்த மகன் ஆறுமுகத்திற்கு நல்ல இடத்தில் திருமணம் ஆகி ஒன்றிரண்டு குழந்தைகளும் பெற்றுக் குடும்பத்திலேயே இருக்கிறுன். இனி இரண்டாம் மகன் முருகனுக்குத் திருமணம் ஆகவேண்டியிருந்தது.

முருகன் தகப்பனைப் போலவே சாது. பொறுமை உள்ளவன். குடும்பத்துச் சொத்துகளைக் கவனிப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தான். கந்தசாமி பிள்ளை அவனுக்குத் திருமணம் செய்யவேண்டும் என்று எண்ணினுர். பலபேர் தங்கள் பெண்களைத் தருவதாக ஆள் அனுப்பினுர்கள். சாதகக் குறிப்புகளும் வந்தன. கந்தசாமிக்கு ஒரு தங்கை இருந்தாள். அவள் பெயர் சின்னம்மாள். அவள் பத்துக்கல் தொலைவில் இருந்த ஒரு குக்

கிராமத்தில் வசிக்கும் பொன்னுசாமி பிள்ளைக்கு வாழ்க்கைப் பட்டிருந்தாள். பொன்னுசாமி பிள்ளை ஏற்கனவே தன் சொத்து முழுவதும் கூடப் போட்டிருந்தான். அடிக்கடி சின்னம்மாள், கந்தசாமி இவர்களிடம் வந்து கை மாற்று வாங்கிச் செல்லுவதுண்டு. அதனைத் திருப்பித் தருவதாக எண்ணமே இல்லை. ஒரு சொத்தும் சின்னம்மாள் பேருக்குச் சீதனமாகக் கொடுக்கப்பட்டிருந்தது. அதுவும் போன இடம் தெரியவில்லை. சின்னம்மாளுக்குக் குட்டியம்மாள் என்ற ஒரே ஒரு மகள் இருந்தாள். படிக்க வைக்கவில்லை. வீட்டு வேலையும் தெரியாது. சிறு வயதிலிருந்தே கிராமப் பெண்களுடன் சேர்ந்து ஆடல் பாடல் கற்றுக்கொண்டு வீண் காலம் போக்கிக்கொண்டிருந்தாள். இப்போது வயது பதினாறு இருக்கும். திருமணம் ஆக வேண்டியிருந்தது. கந்தசாமிக்கோ முருகனுக்கு ஒரு பெரிய மதிப்புள்ள இடத்தில் கல்யாணம் செய்து வைக்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. சின்னம்மாளுக்கோ தன் மகளை அவனுக்குத் தரவேண்டும் என்ற ஆசை. அதனால் தன் ஏழ்மையை ஒருவாறு திருத்திக்கொள்ளலாம் என்பதே அவளுடைய அடிப்படையான எண்ணம். சின்னம்மாளும் அவள் கணவனும் பலவிதங்களிலும் இந்தச் சம்பந்தத்திற்கு முயற்சித்தார்கள். 'முதல் பிள்ளைக்கு உறவு முறையில் கல்யாணம் நடத்தவில்லை. இந்தப் பிள்ளைக்காவது நடத்தவேண்டும். அதுதான் இனத்திற்கு உகந்தது' என்று சொன்னார்கள். கந்தசாமி பிள்ளைக்கு அது பிடிக்கவில்லை. ஆனாலும் இந்த உறவு வைத்துக் கொள்ளாவிட்டால் தாங்கள் எல்லோரும் கிணற்றில் விழுந்து சாவதாகச் சின்னம்மாள் கூறத் தொடங்கினாள். அந்தப் பழி பாவம் கந்தசாமியைச் சேரும் என்றும் ஆணையிட்டாள். இந்த சச்சரவுச் சொற்கள் முருகன் காதில் பட்டன. நம்மால்

ஒருவர் ஏன் உயிர்விடவேண்டும் என்று சொல்லி குட்டி யம்மாளைத் தான் மணம் செய்துகொள்ளச் சம்மதம் என்று தகப்பனிடம் கூறினான். மணம் செய்து கொள்வதாகப் பிள்ளையே கூறும்போது இஷ்டமில்லாத தகப்பனும் ஒத்துக் கொள்ளவேண்டி வந்தது.

திருமணம் குடும்பத்திற்கு ஏற்ற முறையில் நடந்தது. செலவு எல்லாம் கந்தசாமியினுடையதே. பொன்னுசாமி யின் குடும்பம் ஒருமாதமாக அவர் வீட்டிலேயே தங்கி விட்டது. குட்டியம்மாளும் குடும்பத்தில் வந்து சேர்ந்து விட்டாள். முருகனுடைய புது வாழ்க்கை தொடங்கியது. அடுத்த மாதத்தில் சின்னம்மாளும் பொன்னுசாமியும் ஒரு வருடத்திற்கு வேண்டிய சாமான்களுடன் ஊர் போய்ச் சேர்ந்தார்கள். ஆனால் அடிக்கடி உறவு முறை என்று சொல்லிக்கொண்டு சின்னம்மாள் பெரும்பாலும் மக ளிடமே இருக்கத் தொடங்கினாள். குட்டியம்மாள் தன் பெற்றோர்களின் குணத்தில் சிறிதும் குறைந்தவள் அல்ல. எப்போதும் பண்டிகை பம்பம் என்று சொல்லிப் புதுத் துணி, புது நகை, புது சிற்றுண்டி இவைகளை விரும்பிய வண்ணமாகவே இருந்தாள். கந்தசாமியும் முருகனும் கூடிய வரை பார்த்தார்கள். குடித்தனத்தில் செலவுகள் ஏறிக் கொண்டு வந்தன. பெரிய மகனுக்கு இந்த ஏற்பாடு பிடிக்க வில்லை. சின்னம்மாளோ தன் சோலி பார்ப்பதைவிட்டு ஆறுமுகத்தின் மனைவியையும் குறைகூறத் தொடங்கினாள். இது ஒருவருக்கும் பிடிக்கவில்லை. குடும்பத்தில் குட்டிக் கலகங்கள் ஏற்படத் தொடங்கின.

இப்படிப்பட்ட சங்கடநிலை எத்தனை காலம் நடை பெறும்? கந்தசாமி முருகனைக் கூப்பிட்டுத் தனிக் குடும்பம் வைத்தலே நன்று என்று சொன்னார். முருகனுக்கு அது பிடிக்கவில்லை. என்றாலும் ஒத்துக்கொள்ளவேண்டிவந்தது.

இதற்கு சின்னம்மாள் அடிகோலி இருந்தாள். ஆகவே அவள் எண்ணம் நிறைவேறிற்று. திருமணம் ஆகி ஆறு மாதம் ஆகவில்லை. முருகன் தன் பாகமாக நிலங்களும் ஒரு வீடும் பெற்றுக்கொண்டு தனியே குடிபோய் விட்டான்.

பதினைந்துநாட்கள் ஆகின. பொன்னுசாமியும் சின்னம்மாளும் முருகன் வீட்டிற்கே நிரந்தரமாகக் குடிவந்துவிட்டார்கள். தனக்கு வந்த நிலங்களை முருகனே நன்றாகப் பார்க்கக் கூடும். ஆனாலோ பொன்னுசாமி பிள்ளை அந்தக் குடித்தனத்திற்குத் தான் உதவி செய்வதாகச் சொல்லி நிலங்களைத் தானே கவனிக்க முயன்றான். பண்ணை யாட்களை விரட்டுவதும் அடிப்பதுமாகவும் இருந்தான். இந்தத் தோரணையில் சின்னம்மாளும் குறைந்தவள் அல்ல. குட்டியம்மாள் இதில் கைதேர்ந்துவிட்டாள். முருகனுக்கோ இன்னது செய்வது என்று தெரியவில்லை. உறவினர்களை எதிர்க்கவும் முடியவில்லை. தானே சம்மதித்து மணம் செய்து கொண்ட உறவை எவ்வாறு தள்ளுவான்? யானை தன் தலையில் தானே மண்ணை வாரிக் கொட்டிக்கொண்டதுபோல் தன் பிழைப்பைப் பற்றித் தானே நொந்துகொண்டான்.

பொன்னுசாமி பிள்ளை தன் ஊரில் இருந்த உறவினர்களுக்கு அடிக்கடி விருந்து வைப்பான். அவைகளுக்கெல்லாம் முருகனுடைய செலவே ஏற்பட்டது. இந்த ஆடம்பர வாழ்க்கை முருகனுக்குப் பிடிக்கவில்லை. என்றாலும் தன் மனைவியின் பொருட்டுச் செலவு செய்ய வேண்டி வந்தது. அடிக்கடி தீர்த்த யாத்திரை என்று சொல்லிப் பொன்னுசாமி பிள்ளை வெளியே புறப்பட்டு விடுவான். அதன் செலவும் குடும்பத்திலிருந்துதான் போகும். ஒரு முறை அவன் பத்து நாள் வெளியே போய் மதுரை, பழனி முதலிய இடங்களுக்குச் சென்றுவிட்டான். திடீரென்று உடம்பு கெட்டுவிட்டது என்று தந்தி வந்தது. சின்னம்

மாள் மாரடித்துக்கொண்டு அழத் தொடங்கினுள். குட்டி யம்மாள் புலம்பத் தொடங்கினுள். முருகன் எல்லோரை யும் அழைத்துக்கொண்டு பழனி சென்ருன். பொன்னு சாமி பிள்ளை நன்ருக இருந்தான். மகிழ்ந்தார்கள். 'தலை வலித்தது. தந்தியடித்தேன். பழனியாண்டவனை நீங்கள் தரிசிக்கவேண்டாமா? அதற்கு ஒரு வழி கற்பித்தேன்' என்று வெகு சாவதானமாகச் சொன்னுன். உண்மையில் காரணம் வேறு. கையில் இருந்த பணம் தீர்ந்துவிட்டது. அதனை மீண்டும் பெறவே இந்த கோலாகலம் செய்தான் என்பதை முருகன் அறிந்துகொண்டான். ஆனுல் என்ன செய்வது? அந்தச் செயலில் இருநூறு ரூபாய் கரைந்து போய்விட்டது.

இந்த வகையில் சென்று கொண்டிருந்த குடும்பவாழ் வில் கடன் ஏற்படாதோ? கடன் மலைபோல் ஏறத்தொடங் கியது. குடித்தனத்தில் வரும்படியும் குறைந்துவிட்டது. மாடு கன்று விற்ருவது டாம்பீக வாழ்க்கையை நடத்த வேண்டியிருந்தது. விருப்பமில்லாமல் இருந்தும் முருகன் தன் மாமி தன் மனைவி இவர்களைப் புண் படுத்தாமல் இருப்பதற்காக நாளுக்கு நாள் செலவாளியாகிக் கொண்டு வந்தான். இந்தச் சங்கட வாழ்க்கையை யாரிடம் சொல் வது? வெளியே சொல்ல வெட்கம். தகப்பன் தமயனிடம் மூச்சுவிடவும் கூசினுன். முருகன் கதி,பாவம், என்ன என்று சொல்லலாம்? பொன்னுசாமி பிள்ளை கண்டபடி சுற்றிப் பலவித நோய்கள் சம்பாதித்துக் கொண்டான். அவை களுக்கு முருகனே செலவு செய்ய நேரிட்டது. வியாதியி லிருந்து மீளாமல் இறந்தான்.

ஒரு சனி தொலைந்தது என்று சொல்லலாமா? இல்லை. அதற்குள் முக்கால் பங்கு சொத்து தொலைந்தது. பொன்னு சாமிபிள்ளை போனபிறகு சின்னம்மாளுடைய சேஷ்டைகள்

மும்மடங்கு ஆயின. எப்போதும் தன் விதியைப் பற்றி நிந்தித்துக்கொண்டு தன் மருமகன் மகள் இவர்களுடைய உறவாலே இந்த கதி வந்தது எனத் திட்டத் தொடங்கினாள். அந்த வாயை மூடுவதற்கு அடிக்கடி வாய்க்கரிசி இடவேண்டி வந்தது. சில மாதங்களில் அவளும் தொலைந்தாள். அப்போதும் சனியன் போகவில்லை. குட்டியம்மாள் தன் அரசாட்சியைத் தொடங்கினாள். அவளுடைய செலவுகளுக்கு முருகனுடைய பங்கு நிலங்கள் போதவில்லை. கடன்கள் மலையேறிச் சொத்துமுழுதும் தொலைந்தது. நாளாவட்டத்தில் குடியிருந்த வீடும் தொலைந்தது. தொலைவில் ஒரு கிராமத்திற்குக் குடிபோய் அங்கே ஒரு சிறு வீட்டை வாடகைக்குப் பெற்றுக் கஷ்ட சீவனம் செய்துவந்தான். கூலிவேலை செய்யத் தெரியாதவன். கூலிவேலை செய்து பிழைக்கவும் நேரிட்டது. தன் தாயாதியரிடம் சொல்வதற்கும் வாய் எழும்பவில்லை. மானம் போகும் என்ற பெருமை எண்ணம் வந்தது.

இப்படி எல்லாம் நடப்பதற்குள் தகப்பனாரும் இறந்துவிட்டார். ஆனால் அவர் இறப்பதற்கு முன் முருகனுடைய நிலைமையை நன்கு அறிந்து அவர் ஒரு நல்ல நிலம், ஒரு வீடு, சிறிது தொகை இவைகளைத் தன் மூத்த மகனிடம் வைத்துவிட்டு அவன் வந்தால் கொடுக்கும்படி சொல்லிவிட்டு இறந்தார்.

தன் மனைவியின் தூண்டுதலினால் தகப்பனிடம் செல்லாமல் இருந்த முருகனுக்கு இந்தச் செய்தி ஒன்றும் தெரியாது. ஆகவே எப்போதைப் போல கூலிவேலை செய்து கொண்டு தன் மனைவிக்குச் சோறு போட்டுத் தான் கஞ்சி குடித்துக் காலம் தள்ளினான். மிகுந்த டாம்பீகத்தோடு வாழ்ந்துவந்த குட்டியம்மாளுக்கு இந்த வாழ்க்கை பிடிக்கவில்லை. தன் கணவனை சமயம் கிடைத்தபோது எல்லாம்

திட்டிக்கொண்டே இருப்பாள். முருகனே தான் மனம் ஒப்பிச் செய்துகொண்ட மனைவியை எப்படிக் கண்டிப்பது என்று எதிர் வார்த்தை பேசாமல் இருப்பான். பதில் வரா விட்டால் மீண்டும் திட்டுவாள். தன் தலை விதியை எண்ணி எண்ணிக் கிணற்றிலாவது விழுந்து சாகலாம் என்றும் நினைப்பான். ஆனால் அது பாவம் என்று சொல்லி மீண்டும் வேலைக்குச் செல்லுவான்.

'ஏன் இந்த சங்கட வாழ்வு. உன் உடன் பிறந்தார்கள் நன்றாய் இருக்கிறார்களே. அவர்களிடம் சண்டையிட்டுப் பிராது செய்து சொத்து பெறக் கூடாதா' என்று அடிக்கடி ஏசுவாள். அந்தச் சொற்கள் நாராசம் போலக் காதில் விழுந்தன. துடி துடிப்பான். ஒன்றும் பேசாமல் வெளியே போவான்.

"தனம்சிறியர் ஆயினும் தார்வேந்தர் கெட்டால்
மனம்சிறியர் ஆவரோ மற்று?"

என்று எண்ணிச் சோர்வடைவான்.

ஒருமுறை 'இந்த மண்டையில் என்ன இருக்கிறதோ' என்று சொல்லி ஆவேசத்துடன் ஒரு கல்லை எடுத்து அவன் தலைமேல் அவள் போட்டாள். அது தலையில் விழுந்து காயம் ஆகி இரத்தம் பெருகிற்று. 'ஐயோ' என்று கூவி அவன் நிலத்தில் விழுந்தான். அருகில் இருந்த வீட்டார்கள் இந்தச் சத்தம் கேட்டு வீட்டிற்குள் வந்தார்கள். இரத்தம் பெருகுவதைக் கண்டு பிரமித்து அவனை எடுத்து ஒரு வண்டியிலேற்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள். இந்த அரக்கிதான் இவ்விதமாகச் செய்தாள் என்று அக்கம் பக்கத்து வீட்டார்களுக்குத் தெரியும். அவர்கள் எல்லாரும் குட்டியம்மாள்தான் தன் கணவனைக் கொல்லுவதற்காக இந்தப்படி கல்லைப் போட்டாள் என்று மணியகாரனிடம்

சொல்லி வைத்தார்கள். குட்டியம்மாள் கல்லைப்போட்ட போது இவ்வாறு பெரிய காயம் ஏற்படும் என்று நினைத் தவள் அல்ல. படுகாயம் பட்டுக் கணவன் ஆஸ்பத்திரியில் கிடந்தபோது அக்கம் பக்கத்து வீட்டார்கள் தூற்றியதைக் கேட்டபிறகே தான் செய்த தீங்கைக் குறித்து நினைக்கத் தொடங்கினுள். இனி சிறைச்சாலையில் எவ்வாறு தண்டிப் பார்களோ என்று அஞ்சத் தொடங்கினுள். ஊரில் எங்கு பார்த்தாலும் ஒரே நிந்தனை. அங்கு அவளாலே இருக்கவும் முடியவில்லை. அவளுக்கோ ஒரு அகப்பைக் கஞ்சியும் ஊற்ற எல்லாரும் மறுத்துவிட்டார்கள்.

இதற்கிடையில் மணியகாரன் அறிக்கையின் பேரில் போலீசார் அவளைக் கைதி செய்து கொட்டடியில் அடைத்து விட்டார்கள். அங்கே போலீசாரிடம் உண்மை சொல்லச் சொல்லி நன்ருய் அடிக்கப்பட்டாள். சில அடிகள் படவே புத்திவந்தது. தான் செய்தது தப்பு என்று அறிந் தாள். தன் கணவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று அப்போதுதான் நினைத்தாள்.

முருகன் ஆஸ்பத்திரியில் கவனம் இல்லாமல் இரண்டு மூன்று நாள் இருந்தான். அதன் பிறகு நினைவு வந்தது. ஆனுல் சுரம் அடித்தது. பிறகு சுரம் குறையத் தொடங் கியது. இரணமும் ஆறத் தொடங்கியது. இருபது நாட் களுக்குள்ளாக உடம்பு சௌக்கியமாகி வெளியே வந்தான். தன் மனைவி கொட்டடியில் இருப்பதாகச் செய்திகிடைத் தது. எத்தனை கெட்டவள் ஆனுலும் தான் மணந்த மனைவி அல்லவா? அதை எண்ணி அவளைப் பார்க்கச் சென்றுன். போலீசுகாரனும் மாறி வேருெருவன் அங்கு இருந்தான். முருகன் மரணம் அடைந்திருந்தால் வழக்குப் பெரிதாகி இருக்கும். பிழைத்து வந்துவிட்டபடியால் வழக்கு சாதாரணம் ஆகிவிட்டது என்று போலீசார் நினைத்தார்கள்.

ஊராரும் அங்கு இல்லை. ஆஸ்பத்திரி இருந்த ஊர் வேறு. அங்கே நடந்த விஷயங்கள் அவர்களுக்குத் தெரியாது.

இப்படி இருக்கையில் முருகன் போலீசார் இருந்த ஊருக்கு வரவே அங்கிருந்த அதிகாரி முருகனை என்ன நடந்தது என்று கேட்டான். தன் மனைவியிடம் கோபமாகப் பேசிக்கொண்டிருக்கையில் அம்மிக்கல் மீது தடுக்கி விழுந்து தன் தலையில் காயம் பட்டது என்று சொன்னான். ஊரார் வாக்குமூலம் வேறு விதமாக இருப்பதாகவும் அவன் மனைவி கல்லைப்போட்டு அடித்திருப்பதாகவும் அவ்வதிகாரி சொன்னான். முருகனோ அவ்விதம் நடக்க வில்லை என்றும் விழும்போது ஒருவரும் அருகில் இல்லை என்றும் சொன்னான். பின் ஏன் ஊரார் அவ்வாறு சொன் னார்கள் என்று அவன் மீண்டும் கேட்டான். ஒருவேளை என் காயத்தைப் பார்த்து அவ்வாறு ஊகித்திருக்கலாம் என்றான். இதை எல்லாம் கேட்ட அதிகாரிக்கு இந்த வழக்கில் சத்து இல்லை என்று சொல்லி அவன் வாக்குமூலம் எழுதிக்கொண்டு குட்டியம்மாளை விடுதலை செய்தான்.

அவளை அனுப்பும்போது 'பெண்ணே, நீ என் னவோ தப்பு செய்தவளாகத்தான் எனக்குப் படுகிறது. உன் கணவனோ நீ செய்யவில்லை என்று சொல்லுகிறான். அவன் வெகு உத்தமன் போலத் தெரிகிறது. இனிமேல் ஆவது அவனை நேசித்துக்கொண்டு நல்லவளாக வாழு' என்று புத்தி சொல்லி அனுப்பினான்.

அவளோ தன் கண்களைத் தானே நம்பவில்லை. பலவந்த மாகக் கொலை செய்ய எண்ணிக் கல்லைப் போட்டும் தன் கணவன் தன்னை மன்னித்து விட்டான் என்றால் அவனைப் போல சற்குண சீலன் யார் இருக்கக் கூடும்? உயிர் போய் விட்டது என்று எல்லோரும் எண்ணினார்கள். இருபது நாள்வரை உயிர் ஊசல் ஆடிக்கொண்டு இருந்தது. பட

முடியாத கஷ்டம். இவை எல்லாம் தன்னாலே ஏற்பட்டது. இருந்தாலும் தான் அடிக்கவில்லை; அகஸ்மாத்தாய் அடிப்பட்டது என்று தனக்காக ஒரு மெய்யை மறைத்துப் பொய்யைச் சொன்னான் என்றால் அவனுடைய உண்மை அன்பு எப்படிப்பட்டது! இதைஎல்லாம் எண்ணினாள். அதுவரை, தன்னைத் தூக்கில் போடுவார்கள். தவறினால் தீவாந்திர சிட்சையாவது கிடைக்கும் என்று நடு நடுங்கிக்கொண்டிருந்த அவளுக்கு இன்று மன்னிப்பும், விடுதலையும் கிடைத்தது என்றால் அவள் குணமே முற்றிலும் மாறிவிடாதா!

இருவரும் பேசாமல் ஒரு சத்திரத்திற்குச் சென்றார்கள். சொந்த ஊருக்கோ குடியேறின ஊருக்கோ செல்லவில்லை. அன்று இரவு கணவன் காலில் விழுந்து கண்ணீர் விட்டாள். இனிமேல் குட்டியம்மாள் அல்ல வேறு பெயர் வைத்துக்கொண்டதாகச் சொன்னாள்.

முருகன் ஆஸ்பத்திரியில் இருந்தபோது அவனுடைய க்ஷேம சமாச்சாரத்தை ஆறுமுகம் விசாரித்துக் கொண்டே இருந்தான். மருந்து முதலியவைகளுக்குப் பணமும் அவனே கொடுத்து வந்தான். ஆகையால்தான் விரைவில் சௌக்கியம் ஆயிற்று. வெளிவந்ததும் துப்பு விசாரித்துத் தன் ஊருக்கு அழைத்துவந்து தகப்பனார் வைத்துவிட்டுச் சென்ற நிலம், வீடு, தொகை இவைகளை அவன் முருகனிடம் ஒப்புவித்தான். முருகனும் வெகு மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டு குடித்தனம் நடத்தினான். குட்டியம்மாளோ தாய் தந்தையர் இட்ட பெயரை மாற்றிக்கொண்டு குணவதியானாள். குடித்தனம் நன்றாக நடந்தது. நாளாவட்டத்தில் ஒரு ஆண் பிள்ளையும் பிறந்தது. அக்குழந்தையைச் சீராட்டிக் கொண்டு இருவரும் நன்றாக வாழ்கிறார்கள்.

3. தற்காப்பே கற்பு

சுப்பம்மாள் ஒரு ஏழைக் குடித்தனத்தில் பிறந்தவள். ஒரு ஏழைக் கணவனுக்கே வாழ்க்கைப்பட்டாள். இருவரும் ஏழைகளாக இருந்தபோதிலும் கஷ்டப்பட்டுப் பொருள் சம்பாதித்து வெகு நிம்மதியாகக் குடித்தனத்தை நடத்தி வந்தார்கள். இருவரும் மிகுந்த அன்போடு ஒருவரை ஒருவர் நேசித்துக்கொண்டு இல்லற வாழ்வை நன்கு நடத்தி வந்தார்கள். சுப்பம்மாளோ வீட்டு வேலைகளைச் செய்து விட்டு மற்ற நேரங்களில் தையல் வேலை செய்து சிறிது பணம் சம்பாதிப்பாள். கணவனாகிய மணியனோ ஒரு கடையில் குமஸ்தாவாக இருந்துகொண்டு, வந்த சம்பளத்தில் குடும்பத்தை நடத்தி வந்தான். இவர்களுக்குச் சில உறவினர்கள் உண்டு. அவர்களில் சிலர் செல்வவான்கள். இவ்விருவரும் நடத்திவரும் அறவாழ்க்கையை அன்னார்கள் கண்டு சகிக்கவில்லை. தரித்திரர்களுக்குச் சுகவாழ்க்கை எப்படி இருக்கக் கூடும் என்பது அவர்கள் எண்ணம். இவ்வாறு காலம் கழிந்துவந்தது. தரித்திரனாகிய இவன் தங்களைக் கண்டு யாசித்துப் பொருள் பெற்றுப் பிழைக்காமல் சுதந்திர மக்கள்போல பிழைக்கிறானே என்று அவர்கள் பொறாமைப் பட்டு இருந்தார்கள்.

இப்படி இருக்கையில் மணியனுடைய முதலாளி 'வெளியே தொலையில் பாக்கி நின்றுவிட்டது. நீதான் போய் தொகைகளை வசூல் செய்துவர வேண்டும்' என்றான். தன் மனைவி யாதொரு உதவியும் இல்லாமல் தனியே இருப்பதைத் தெரியப்படுத்தினான். ஆனால் அதற்கு முதலாளி ஒத்துக் கொள்ளவில்லை. 'கடையில் வேறு நம்பிக்கை ஆள் இல்லை, நீதான் போக வேண்டும். ஊரிலே பெண்கள் தனியாக இல்லையா? சுற்றத்தார்கள் பலபேர் உனக்கு உண்டே, ஒருமாதம்

போய்வருவதில் உனக்கு என்ன கஷ்டம். இந்த அதிக வேலைக்குச் சம்பளமும் உயர்த்தித் தருகிறேன்' என்றான். 'சம்பளத்திற்காக அல்ல, எங்களுக்கு வயது அதிகம் ஆக வில்லை. மனைவி தனியாக இருப்பதற்கு அஞ்சுவாள்' என்று மன்றாடினான். ஆனால் முதலாளி கேட்கவில்லை. மணியன் தொலைக்குப் போக நேரிட்டது.

மணியனும் சுப்பம்மாளிடம் வேண்டிய எச்சரிக்கை எல்லாம் சொல்லிவிட்டுத் தான் விரைவில் வந்துவிடுவதாகச் சொல்லித் தொலைக்குச்சென்றான். சுப்பம்மாளோ பொறுக்க முடியாத துக்கத்தோடு விடை தந்துவிட்டு வீட்டு வேலை களைக் கவனித்து வந்தாள். வெகு எச்சரிக்கையாக வீட்டுக் கதவுகளைத் தாழ்ப்பாளிட்டுக் கொண்டு மிகுந்த கவலையோடு கணவன் வரவை எதிர்பார்த்துக்கொண்டு இருந்தாள்.

பத்து நாள் சென்றன. ஒரு நாள் காலையிலே யாரோ வீட்டுக் கதவைத் தட்டினார்கள். கணவன்தான் சொன்ன கெடுவிற்கு முந்தியே வந்துவிட்டார் போலத் தோன்று கிறது என்று மகிழ்ச்சியோடு கதவைத் திறந்தாள். ஆனால் வந்தவர் அவரல்ல. திடுக்கிட்டாள். இரண்டு மூன்று போலீசு சேவகர்கள் எதிரே நின்றார்கள். பயந்து நடுங் கினாள். 'வீட்டில் ஆண் பிள்ளைகள் இல்லையோ' என்று கேட்டார்கள். 'இல்லை, நான்தான் ஒண்டியாய் இருக் கிறேன். அவர்கள் தொலைக்கு வேலையாய்ச் சென்றிருக் கிறார்கள்' என்றாள். 'உன் வீட்டை சோதிக்க வேண்டும்' என்றார்கள். 'ஆண் மக்கள் இல்லாதபோது நீங்கள் உள்ளே வருவது நன்றாக இல்லை' என்று மன்றாடினாள்.

'போலீசுகாரரே, நீங்கள் உங்கள் வேலையைப் பாருங் கள் ஐயா, இந்த வம்பு எல்லாம் ஏன் விசாரிக்கிறீர்கள்' என்றான் அருகிலிருந்த ஒருவன். அவனைப் பார்த்தாள் சுப்பம்மாள். அவன் தூர உறவினன் போலத் தோன்

றிற்று. உடனே சேவகர்கள் வீட்டுக்குள் நுழைந் தார்கள். எதையோ தேடுவதைப் போலத் தேடினூர்கள். ஒரு முடிச்சை மூலையில் இருந்து எடுத்தாற்போல எடுத் தார்கள், அதனைச் சுப்பம்மாளுக்குக் காட்டி 'இது ஏது' என்றூர்கள்.

அதைத் தான் கண்டதே இல்லை என்றூள். அதை அவிழ்க்க அதில் ஒரு பொன் நகை இருந்தது. அதை அவள் கண்டதே இல்லை என்று வாதாடினுள். போலீசு காரர்கள் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. ஒரு எருது வண்டியைக் கொண்டுவந்து அவர்கள் அவளை ஏற்றிக் கொண்டு போலீசுச் சாவடிக்குச் சென்றூர்கள். சுப்பம் மாளோ இந்தக் கொடுமையைக் கண்டு ஆறூத் துக்கத்தில் அமர்ந்தாள். வண்டி ஒரு இடத்திற்குச் சென்றது. சுப்பம் மாளுக்கோ அது எவ்விடம் என்று தெரியவில்லை. அங்கே அவள்மீது திருட்டுப் பொருள் வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டி ஒரு தனி அறைக்குள் அடைத்து வைத்தார்கள். அன்று முழுதும் யாதும் உண்ணுமலும் நீரும் அருந்தா மலும் மிகுந்த திகிலுடனே பொழுது போக்கினுள். தானும் தன் கணவனும் அறிந்து யாதொரு குற்றமும் செய்த தில்லையே, இப்படி அனியாயமாக இந்தத் தண்டனை தனக்கு ஏனோ வருகின்றது என்று எண்ணித் துக்கித்தாள். இந்தப் பிறப்பில் யாதொரு கெடுதியும் செய்ததில்லை. முற்பிறப் பில் செய்த கெடுதிக்காகத்தான் தற்போது கஷ்டப்படு கிறேம் என்று எண்ணி ஒருவாறு பொறுத்துக் கொண் டிருந்தாள். கணவன் தன்னை விடுவித்து விடுவான் என்ற நம்பிக்கையில் அன்று இரவும் கழித்தாள்.

மறுநாள் காலையில் ஒரு ஆளும் இரண்டு போலீசு சேவகர்களும் கதவைத் திறந்துகொண்டு வந்தார்கள். பார்த் தாள் சுப்பம்மாள். இனியென்ன விபரீதம் ஏற்படுகிறதோ

என்று திடுக்கிட்டாள். வந்த புது ஆளைப் பார்த்தாள். வெறுப்புடன் தலை குனிந்தாள். அவன் ஒரு உறவினன்; இவளுக்குத் திருமணம் ஆவதற்கு முந்தி இவளைத் தனக்கு மனைவியாக்கிக் கொள்ளவேண்டும் என்று விரும்பினவன். அவனுடைய கொடிய குணத்தைக்கண்டு அவளுடைய பெற்றோர்கள் அவனுக்கு அவளைக் கொடுக்கவில்லை. இப்போது இந்த அரக்கன் எங்கு வந்தான் என்று அவள் ஏங்கினாள்.

"அம்மா, இந்தக் கனவான் உனக்கு உத்திரவாதம் (ஜாமீன்)கொடுத்திருக்கிறார். விசாரணைக்குவந்தால்போதும்." அதைச் சொல்லிவிட்டு அவளை வெளியே அனுப்பினான். அவள் வெளியே வரவே ஒரு வண்டி காத்திருந்தது. வண்டிக்காரன் 'அம்மா இதில் ஏறிக்கொள்; உன் வீட்டிற்குக் கொண்டுபோகிறேன், அவர் வாடகை கொடுத்திருக்கிறார்' என்று சொல்லி வண்டியில் ஏற்றிச் சென்றான்.

வண்டி வெகுநேரம் சென்றது. எங்கு போகிறது என்று சுப்பம்மாளுக்குத் தெரியவில்லை. இறுதியில் ஒரு பங்களாவிற்குள் சென்றது. சுப்பம்மாளுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. அது எந்த இடம் என்று வண்டிக்காரனைக் கேட்டாள். 'இந்த இடத்திற்குத்தான் கொண்டுபோகச் சொல்லி அந்த ஐயா சொன்னார்' என்று வண்டிக்காரன் சொல்லி அவளை இறக்கிவிட்டுச் சென்றான். சுப்பம்மாளுக்கோ யாது செய்வதென்று தோன்றவில்லை. அவளைச் சுற்றி ஒரு பெரிய மோசவலை சூழ்ந்து வருகிறதென்று மட்டும் உணர்ந்தாள். ஆனால் கற்புடைய பெண் ஆனதால் ஒரு சிறிதும் சோர்ந்தவள் அல்ல.

பங்களாவிலிருந்து ஒரு சேவகன் வந்தான். வந்ததும் சுப்பம்மாளை ஒரு அறையில் இருக்கும்படி சொன்னான். சுப்பம்மாளோ என் வீடு செல்லவேண்டும் வழி காட்டிக் கொடுங்களென்று சொன்னாள். அதற்குத் தனக்கு உத்

தாவு இல்லை என்றும், எஜமானரிடம் சொல்லும்படியும் சொல்லிவிட்டுச் சென்றான்.

சுப்பம்மாள் அறையில் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தாள். முந்தி உத்திரவாதம் நின்ற அதே ஆள் வெகு சொகுசான உடை உடுத்திக்கொண்டு எதிரே தோன்றினான். சுப்பம்மாளோ எதிர்பாராத இந்தத் தோற்றத்தைக் கண்டவுடன் திடுக்கிட்டு எழுந்து நின்றாள். 'அம்மா உட்காரு. இது உன் வீடு என்று எண்ணிக்கொள். இங்கே யாதொரு பயமும் இன்றியிருக்கலாம். இனி போலீசு பயம் வேண்டாம். அது எல்லாம் சரிப்படுத்திவிட்டேன். பணம் என்ன தான் செய்யாது' என்றான். அவள் ஒன்றும்பேசாமல் மிகக் கோபத்தோடு தலையைக் குனிந்துகொண்டு நின்றாள்.

"அம்மா, பேசமாட்டாயா? இங்கேயே எல்லா சௌகரியங்களும் செய்து வைக்கிறேன். இங்கே யாதொரு பயமும் இல்லை" என்றான்.

"ஐயா, எனக்கு எந்தச் சௌகரியமும் வேண்டாம். தயவுசெய்து என் வீட்டுவழி காண்பித்து விடும், உனக்குக் கோடி புண்ணியம் உண்டு" என்றாள்.

"எனக்குப் புண்ணியமும், புருஷார்த்தமும் வேண்டாம். நீ இங்கு இருந்தாலே புண்ணியம். உனக்கும் புண்ணியம், எனக்கும் புண்ணியம்" என்றான்.

அவளுக்குப் பொறுக்கமுடியாத கோபம் வந்தது. ஆனால் அதை அடக்கிக் கொண்டாள். இவன் கெட்ட எண்ணம் கொண்டிருக்கிறான் என்று அறிந்து கொண்டாள்.

"ஐயா, உனக்குத் தாழ்ந்த வணக்கம். நான் மச்சு வீடுகளில் இருந்து வழக்கம் இல்லை. ஒரு ஏழைப் பெண் என் வீட்டிலேயே விட்டுவிடும்."

"அதுதான் ஆகாதகாரியம். நன்றாய் யோசி. நாளை வருகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

உடனே ஆள்காரன்வந்து வெகு மரியாதையாய்த் தின் பண்டங்களையும் சர்பத்தையும் வைத்துவிட்டுச் சென்றான். ஆனால் அவளோ எதையும் தொடவில்லை. அன்று முழுதும் அழுதுகொண்டே இருந்தாள்.

மறுபடியும் அன்று விளக்கு வைத்ததும் அந்த எஜ மான் வந்தான். இருட்டில் விளக்கு ஒளியில் அவன் உரு வம் கன்னங்கரேல் என்று அரக்கனைப்போல் இருந்தது. அவள் வெருண்ட பெண்மானைப்போல சுவரோரம் சென்று சாய்ந்துகொண்டு நின்றாள். இரண்டு நாளாய் உணவு அருந் தாததே அவளை மிகவும் வாட்டத்திற்குள்ளாக்கியது.

அவளைச் சாப்பிடும் படிக்கும் எத்தனையோ கூறிப் பார்த்தான். அவள் எதற்கும் மறுமொழி பேசவே இல்லை. ஓரே மௌனம் சாதித்தாள். இக்கொடியவனிடம் பேசிப் பயன் என்ன. உண்ணுமலே இருந்தால் உயிர் போகிறது. மானம் நிற்கும் என்று ஓரே திடசித்தத்தில் நின்றாள். வந்த எஜமானனும் காரியம் கைகூடாமல் தன் அறைக்குச் சென்றான். அன்றிரவு முழுதும் கண்ணீர் விட்டுக்கொண்டே இருந்தாள்.

அந்தக் கொடியவன் விட்டபாடில்லை. மறுநாள் காலை யில் வந்து பேசத் தொடங்கினான். சுப்பம்மாளோ தலை நிமிர்ந்தும் பார்க்கவில்லை.

'அம்மா நீயேன் அடம் சாதிக்கிறாய். உன் கணவன் எங்கே வரப்போகிறான். அவனிடம் வாழ்வதைப் பார்க் கினும் என் மாளிகையில் தேவதையைப்போல் வாழலாம். ஏன் சாப்பிடாமல் இருக்கிறாய்' என்றான்.

'கணவன் எங்கே வரப்போகிறான்' என்ற சொற்கள் காதில் விழவே நாராசம் ஏறினதுபோல் இருந்தது. தலை நிமிர்ந்து பார்த்தாள். அந்த அரக்கன் கண்களில் அசட்டுச் சிரிப்பு ஒளித்தது.

'என்ன சொன்னுய் என் கணவரைக்குறித்து?' என்று கர்ச்சித்தாள்.

'உன் கணவனைப் பற்றியா? அவன் தொலைக்குத் தொலைந்துபோனது எப்படித் தெரியுமா? நான்தான் சூழ்ச்சி செய்து அனுப்பினேன். அவன் மீண்டும் வரப் போகிருன் என்று கனவு காண்கிருயா?'

இதைக் கேட்டதும் 'ஐயோ பாதகா!' என்று சொல்லி நிலத்தில் விழுந்து மூர்ச்சித்தாள்.

ஒரு வேலைக்காரி நீர் தெளிக்க, மூர்ச்சை தெளிந்தது. காதகனே ஓடிவிட்டான். ஆனுல் மீண்டும் ஒரு முறை வந்து முயற்சி செய்தான். அவளோ அவனை மானம் போகிறுற்போல் வைது தன்னைப் போலீசுக்கு அனுப்பும் படிக்கும் உத்திரவாதத்தை ரத்து செய்துகொள்ளும் படிக்கும் கேட்டாள். இவனுடைய ஜாமீனை விடப் போலீசு தண்டனையே மேல் என்று எண்ணிச் சொன்னதால் அதற்கு அவன் உண்மை சொல்ல நேரிட்டது. போலிசு நடவடிக்கை எல்லாம் புரட்டு என்றும் அவளை அடையவே அந்தச் சூழ்ச்சி செய்ததாகவும் ஒத்துக்கொண்டான். தன் கையை வேட்டின அந்தக் காதகன் இத்தனை துணிகரமாகச் சதிவேலை செய்தான் என்று தெரிந்தவுடனே அவனைப் பலவாறு தூஷித்துத் தன்னை விடும்படி கேட்டாள். இல்லாவிடில் சீதையைக் கெடுக்க நினைத்த இராவணனுடைய கெதிதான் அவனுக்குக் கிட்டும் என்ருள்.

அவனே 'இந்த இராமாயணம் இங்கே வேண்டாம். இந்தப் பகுத்தறிவு நாளில் அதை யார் நம்புகிருர்கள். நீ ஒத்துக்கொள்ளாவிடில் பலவந்தம் செய்வேன்' என்று அருகில் வந்தான்.

'அடே துஷ்டா, பாதகா, தூரநில். என்னைத் தொட்டால் நீ பிணத்தைத்தான் தொடுவாய். என்னிடம் சக்தி

இருப்பது நீ அறியாய். அதிகப் பிரசங்கி செய்தால் உன் உயிரும் போகும்' என்று நீச்சென்று கதறி வீறிட்டுப் பத்திரகாளிபோல் நின்றாள். அந்தத் துஷ்டன் பயங்காளி என்று அப்போதுதான் தெரிந்தது. உடனே சட்டென்று சுவரோரம் ஒதுங்கினான்.

அவள் வீறிட்ட சத்தம் அறைக்கு வெளியே கேட்டது. அங்கே அத்துஷ்டனுடைய தாயார் சென்றுகொண்டிருந்தாள். ஒரு பெண்ணுடைய தீன ஒலி கேட்டதும் உள்ளே புகுந்தாள். செய்தியை முழுதும் உடனே அறிந்துகொண்டாள். தன் மகனைத் திட்டிப் போகச் சொல்லிவிட்டு சுப்பம்மாளைச் சமாதானம் செய்து அபயம் தந்தாள். உறவினள் என்று அவளுக்குத் தெரியும்.

'விரைவிலே வண்டி கொண்டுவந்து அவளை ஏற்றிக் கொண்டு தானும் உடன் சென்று அவள் வீட்டில் விட்டாள். அவளுக்கு ஒரு வேலையாளையும் துணை நிறுத்திவிட்டு வீடுதிரும்பினாள். எத்தனை துட்டனானாலும் தாயைக் கண்டதும் பசுப்போல் ஆய்விட்டான். சுப்பம்மாளை யாதும் செய்வதில்லை என்று சத்தியமும் செய்து கொடுத்தான்.

இரண்டு நாளில் மணியும் வந்து சேர்ந்தான். வேலை முடியாததற்கு முந்தியே இங்கே ஆள் வேண்டும் என்று கடிதம் வர அவன் திரும்பி விட்டானாம்.

இத்தனைக் கஷ்ட நிஷ்டூரங்கள் நடந்தனவே சுப்பம்மாள் கணவனிடம் மூச்சு விட்டாளா? இல்லவே இல்லை. தன் கணவரிடம் வேறு ஊருக்குக் குடிசென்று வாழலாம் என்று மட்டும் உபதேசித்து, கூடிய சீக்கிரம் மற்றொரு ஊரில் வேலை கிடைக்க அங்கே சென்று குடித்தனம் செய்தார்கள். இருவரும் வெகு நிம்மதியோடு வாழ்ந்தார்கள். ஒரு குழந்தையும் பிறந்தது. பிறகு வேறு யார் அருகில் வரப்போகிறார்கள்.

4. ஊடல் முடிவுகள் இப்படியா?

இரவெல்லாம் இரயிலிலே பிரயாணம் செய்தேன். இரண்டாம் வகுப்பு வண்டியாக இருந்தும்கூட வண்டியின் ஆட்டத்தினுல் நன்றாகத் தூக்கம் வரவில்லை. காலையில் பல் தேய்த்துக் கடவுளைத் துதித்துவிட்டு ஒரு நிலையத்தில் சிற்றுண்டி அருந்தினேன். பிறகு என்னேடுகூட இருந்த நண்பர்களிடம் பேசிவிட்டுச் சிறிது நேரம் ஒரு நூல் வாசித்தேன். பகலில் மற்றொரு நிலையத்திற்கு வண்டி வந்தது. அங்கே உணவு அருந்திவிட்டு உட்கார்ந்தேன். அங்கே இரண்டு வாலிபர்கள் வண்டியில் ஏறினர்கள். அவர்களில் ஒருவர் சாப்பிட நேரமில்லாமல் ஓடிவந்து வண்டியில் ஏறினதாகச் சொன்னர். மற்றொருவர் தான் நன்றாகச் சாப்பிட்டதாகச் சொன்னர்.

'சாப்பாடு மாத்திரம் தவிரக் கூடாது' என்று அவர் வற்புறுத்தினர்.

'என்ன செய்வது நான் காரியத்தை ஊன்றிக் கவனிக்கிறேனே ஒழிய சாப்பாட்டு விஷயத்தில் அசாக்கிரதையாக இருக்கிறேன். அதனுல்தான் இந்தச் சங்கடம் வருகிறது' என்றார்.

'இதே இரயிலில் இது இரண்டாம் நாள் சாப்பாடில்லாமல் செல்வது' என்றார்.

'இனிமேல் இவ்விதம் செய்யவேண்டாம். சாப்பாட்டிற்கு மிஞ்சி என்ன அப்படிப் பிரமாதமான வேலை' என்று மற்றவர் சமாதானப்படுத்தினர்.

சுமார் ஒரு மணியிருக்கும். வெய்யில் நன்றாக அடித்தது. எனக்கோ தூக்கம் வரத் தொடங்கியது. உடனே மேல் அடுக்கில் படுக்கை விரித்து அதன்மேல் ஏறிப்படுத்தேன். சிறிது தூக்கம் வந்தது. ஆனுல் சீக்கிரத்தில் விழித்துக்

கொண்டு தூங்குகிறவன் போலப் படுத்துக்கொண்டே இருந்தேன். அந்த வண்டியிலிருந்த மற்ற மனிதர்களும் அங்கங்கேயே உறங்கத் தொடங்கினர். ஆனால் புதிதாக வந்த இரண்டு வாலிபர்களும் பேசிக் கொண்டே இருந்தார்கள். அவர்கள் பேசியதைக் கேட்டுக் கொண்டே இருந்தேன். நான் கேட்டுக்கொண்டிருந்தது அவர்களுக்குத் தெரியாது என்றே நினைக்கிறேன். ஏனெனில் தங்கள் குடும்ப விவகாரங்களை ஒளிக்காமல் பேசிக்கொண்டிருந்தார்கள். பிறர் கேட்கிறார்கள்என்றால் அவ்வாறு வெளிப்படையாகப் பேசுவார்களோ என்று எண்ணினேன். அவர்கள் பேச்சும் தற்கால இளைஞர்கள் ஒழுகிற முறையைத் தெரியப்படுத்தியது. ஆகவே நான் கேட்டபடி எழுதுகிறேன்.

* * *

"சின்னஞ்சிறு வயது முதற்கொண்டே நாமிருவரும் பாடசாலையில் வாசித்து வந்தோம். நெருங்கிப் பழகியிருக்கிறோம் அல்லவா?"

"அதற்கென்ன சந்தேகம். இப்போதும் அப்படித்தான் இருக்கிறோம்."

"அந்தக் காலத்திலே நம் அந்தரங்க விஷயங்களைக்கூட ஒளித்து வைக்காமல் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறோம் அல்லவா?"

"ஆமாம். என்னத்திற்காக இந்தப் பீடிகை."

"இப்போது நாம் இருவரும் வேலையில் அமர்ந்து சம்பாதிக்கிறோம். கல்யாணமும் செய்து கொண்டு குடும்பத்தில் இருக்கிறோம்."

"ஆம், நீ வியாபாரம் செய்து கொண்டு அதிகம் சம்பாதிக்கிறாய். நானோ ஆபீசு குமாஸ்தாவாகிக் குறைச்சலாகச் சம்பாதிக்கிறேன்."

" அதனுல் என்ன ? வேற்றுமை இல்லையே. குடும்ப விஷயங்களைப் பற்றி முன்போல நாம் கலந்து கொள்வதில் லையே?"

" என்னமோ, குடும்ப விஷயம் என்ருல் எனக்குப் பிடிப்பதில்லை. அதைப்பற்றிப் பேசவும் மனம் வசமாட் டேன் என்கிறது."

" அதுதான் நானும் சொல்வது. அதைப்பற்றிப் பேசத் தொடங்கினுல் உன்மனம் எப்படியிருக்குமோ என அஞ்சித்தான் இந்தப் பீடிகை போட்டேன்."

" சரிதான். முன்னே நமக்குக் குடும்ப அனுபவம் இல்லை. தாராளமாகப் பேசிக் கொண்டோம். இப்போது குடும்ப விஷயமோ வேறு உலகமாக இருக்கிறது. அதைப் பற்றிப் பேசவும் நா எழும்புவது இல்லை."

பிறகு இருவரும் ஒன்றும் பேசாமல் தலை குனிந்து கொண்டிருந்தார்கள். ஐந்து நிமிஷம் கழித்து மறுபடியும் பேசலானுர்கள்.

" சரி, கவலை எல்லாருக்கும்தான் உண்டு. மனதி லேயே வைத்துக் கொண்டிருந்தால், அது பெரிதாகத்தான் தோன்றும். அத்தியந்த நண்பர்களிடம் சொன்னுல் அதன் கூர்மை மழுங்கிவிடும்."

" என்னமோ, அது வேதாந்தம் என்றே தோன்று கிறது. மனிதனுக்கு இல்லற வாழ்வே கூடாதென்று தோன்றுகிறது."

" அப்படிப் பெரியவர்கள் சொல்லவில்லையே."

" அதுதான் வேதாந்தம். நேரில் அனுபவிக்கும் போது தெரிகிறது கஷ்டம்."

" இந்த வெறும் வார்த்தை வேண்டாம். உனக்கோ ஓர் அழகான குழந்தை பிறந்திருக்கிறது. அதையும் கவ னிக்காமல் மாமியார் வீட்டில் மனைவியை விட்டிருத்தல்

அழகா? உன் மரியாதைக்குத் தகுமா? காப்பாற்ற வகையில்லாமல் இவ்விதம் விட்டுவிட்டிருக்கிறாய் என்றல்லவா உலகம் நினைக்கும்."

"உலகம் நினைக்கட்டும். உண்மை அது அல்ல. உனக்கே தெரியும். நானா மாமியார் வீட்டுக்கு அனுப்பினேன். என்னிடம் சொல்லாமல் அவள் ஏன் போக வேண்டும் ?"

"உன் தாயார் என்ன சொன்னாளோ ?"

"தாயார் என்ன சொன்னாலும் என்ன? நான் இல்லையா ? என்னைக் கேட்டுக் கொண்டல்லவா செல்ல வேண்டும் ?"

"இது ஒரு தப்பா? கேட்காமல் போனால் என்ன? நீ போய்க் கூப்பிடக்கூடாதா ?"

"நான் போகவே மாட்டேன். என் தாயார் கூப்பிட்டாள். அதற்கும் வரக்கூடாதாம். என் அக்காளும் கூப்பிட்டாள். அதற்கும் சம்மதிக்கவில்லை. நானே அழைக்க வேண்டுமாம். நான் போகப் போவதே இல்லை."

"என்ன இப்படிப்பட்ட பிகுவு. நீ போய்க் கூப்பிட்டால் என்ன தப்போ? உன் மனைவிதானே?"

"ஆமாம், என் மனைவிதான். நான் சொன்னபடி கேட்க வேண்டாமா?"

"ஆங்கிலம் வாசித்துவிட்டும் இந்தக் குணம் உனக்கேன் வந்தது ?"

"ஆங்கிலத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?"

"என்னமோ உன் பிடிவாதம் எனக்கு அர்த்தமாகவில்லை. நீ நேரில் போய் அழைத்தால் தன் குறை முழுவதும் தீர்த்துக்கொண்டு உடனே வந்து விடுவாள் என்று தோன்றுகிறது."

" நீ என்ன சொன்னாலும் நான் போகிறதில்லை. அவ ளுக்கு என்ன அத்தனைப் பிடிவாதம். இனி ஒரு மாதத் திற்குள் வீடுவந்து சேராவிட்டால் மறு கல்யாணம் செய்து கொள்வதாகத் தீர்மானித்து விட்டேன்."

" என்ன விபரீத முடிவு. இப்படியும் உண்டா? நாம் என்ன மிலேச்சர்களா? அப்படிச் செய்தால் பெண் பாவம் போகாது."

" என்ன கர்நாடகப்பேச்சு பேசுகிறாய். ஒரு பெண் ணுக்கு இத்தனை அடம் இருக்கக் கூடாது."

" சரி, உன் உத்திரவு இருந்தால் நான்சென்று இதனைத் தீர்த்து விடுகிறேன்."

" இது என்ன பேச்சு, இதைவிட வேறு அவமானம் எனக்கு ஏன்?"

சிறிது நேரம் பேசாமல் இருந்தார்கள். பிறகு மறு படியும் பேச்சுத் தொடங்கியது.

" என்னுடைய குடும்பத்தைப்பற்றி இவ்வளவு கேவல மாகப் பேசுகிறாயே? உன்னுடைய குடும்ப வாழ்வு நிரம்பச் சிறந்ததோ? நீயும் எப்போதும் சுகப்பட்டதே இல்லை என்று கேள்விப் பட்டேனே?"

" எனக்கும் சுகம் அதிகம் இல்லைதான். ஆனால் உன் னைப் போல மானம் போகும் செயலை நான் செய்வதில்லை. வீட்டிற்குள் எத்தனை கோணல் இருந்தாலும் வெளியே தெரியாமல் இருப்பதே நல்லதல்லவா?"

" அது என்னமோ சரிதான். ஆனால் சுகவாழ்வு எங்கே? முந்தி பாடசாலையில் வாசித்தபோது குடும்பத் தைப் பற்றி என்ன எண்ணினோம். இப்போது அனுபவத் தில் எவ்வாறு இருக்கிறது?"

" வாஸ்தவம்தான். ஆனால் உள்ளுக்குள்ளே என்ன நடந்தாலும் வெளியில் காட்டாமல் இருப்பதே நல்லது."

"என்ன உள்ளொன்று கிடக்கப் புறம் பொன்று காட்டவேண்டுமா?"

"எதற்கு எதைச் சொல்லுகிறாய். அந்தப் பழமொழி வேறு. 'உடையது விளம்பேல்' என்ற ஔவையார் வாக்கே நமக்குப் பொருந்தும்."

"எங்கேயோ பேச்சை விட்டு விட்டு வெளியே செல்லு கிறோம். உன் மனைவியையும் கூட நீ நன்றாக நடத்துவ தில்லையாமே?"

"யார் சொன்னது? என் மனைவியை என் மாமியார் வீட்டில் விட்டிருப்பதே இல்லை. சொல்லாமல் சென்றாலும் உடனே ஏதாவது சாக்குச் சொல்லி அழைத்து வந்து விடுவேன்."

"அப்படியானால் நீ அவளோடு அடிக்கடி பேசுவ தில்லையாமே?"

"ஆமாம். நான் பேசுவதில்லைதான். ஆனால் அது எல்லாம் அவளை நல்ல வழிக்குக் கொண்டு வருவதற்கே ஆகும்."

"நல்ல வழிக்கு வந்து விடுகிறாளா?"

"ஏன் இல்லை. உடனே நல்ல வழிக்கு வந்து விடு கிறாள். ஒவ்வொரு தடவையும் நானே ஜெயிக்கிறேன்."

"எப்படி?"

"ஒருநாள் என்னிடம் சொல்லாமல் தாயார் வீட்டிற் குச் சென்று விட்டாள். நான் ஆள்விட்டு அனுப்பினேன். அவள் வரவில்லை. நானே போய் அழைத்து வந்தேன். நான் போன உடனே என் மாமியார் அவளை உடனே வற் புறுத்தி அனுப்பி விட்டாள். அவள் வீட்டுக்கு வந்தவுடன் பாடம் சொல்லிக் கொடுப்பதற்காக ஒரு தந்திரம் பண்ணி னேன்."

"அது என்ன?"

"அவளிடம் பேசாமல் மௌனம் சாதித்தேன். இரண்டு மூன்று நாள் பார்த்தாள். நான் இசையவே இல்லை. அவளுக்கு வெகு துக்கம் வந்துவிட்டது. என் எதிரே நின்று கொண்டு கண்ணீர் விட்டாள். அப்போதும் நான் பேசவில்லை. என் குழந்தையை என் மடிமீது இருத்தினாள். நான் என்ன செய்யட்டும். நான் சற்று இளகினேன். பிறகு சிறிது சிறிதாகப் பேசினாள். இப்படி இரண்டு மூன்று முறை நடந்தது. இப்போது அவ்விதம் நடப்பதே இல்லை. வீட்டில் என்ன பிசகு நேர்ந்தாலும் என்னிடம் சொல்லித் தீர்த்துக் கொள்வாளே யன்றிச் சொல்லாமல் கோபித்துக் கொண்டு தாயார் வீட்டிற்குப் போவதில்லை. ஆகவே நான் ஜெயித்து விடவில்லையா?"

"சரிதான். உன் மனைவி நல்லவள். எனக்கு அப்படி வாய்க்க வில்லையே?"

"அவ்வாறு எண்ண வேண்டாம். நாம் சரியாக நடத்தினால் எல்லாரும் வழிக்கு வந்து விடுவார்கள். என்ன ஆனாலும் தாயார் வீட்டில் அளவுக்கு மிஞ்சி வைத்திருக்கக் கூடாது. அதனாலே அபவாதம் அதிகம் ஏற்படும். உலகம் கண்டிக்கும். இக்காலத்துப் பெண்களுக்கு ஒரு தண்டனை போதுமானது. அடிவேண்டாம். தடிவேண்டாம். பேசாமல் இருந்தால் போதுமானது. உடனே காலில் விழுவார்கள். அப்போது எளிதில் அவர்களை வசப்படுத்திக்கொள்ளலாம்."

இவ்விதம் பேசுவதற்குள் வண்டி ஒரு நிலயத்திற்கு வந்துவிட்டது. இருவர்களும் இறங்கிச் சென்றார்கள் நானும் அவர்கள் பேச்சை நன்றாகக் கேட்டுக்கொண்டே இருந்தேன்.

அவர்களில் ஒருவர் நாடார் மற்றவர் முதலியார். இவர்களுக்குள் இப்படிப்பட்ட பரஸ்பர நேசம் எவ்வாறு ஏற்பட்டதோ என வியந்தேன். வயது முதிர்ந்தால் இந்தவாலிப நேசம் தங்கி இருக்குமா?

* * *

மேலே கூறிய சம்பவம் நடந்து இரண்டு மூன்று மாதம் இருக்கும். மறுபடியும் அதே வண்டியில் நான் பிரயாணம் செய்ய நேர்ந்தது. பகலில் உணவு அருந்திவிட்டு வண்டியில் உட்கார்ந்தேன். முந்தி பேசியவர்களில் முதலியார் அதிலே ஏறி அமர்ந்தார். வண்டி புறப்படும் சமயம் ஒருவர் அவசரமாக வண்டியில் ஏற வந்தார். அதே நாடார் தான்.

"அண்ணு, வா, இப்படி. நான் இருக்கிறேன். இங்கே இடமும் இருக்கிறது. எப்போதும் அவசரம்தான்" என்றழைத்தார் முதலியார்.

"என்ன செய்கிறது? வேலை அதிகம். இதற்கு முந்தி வாமுடியவில்லை."

"சாப்பிட்டாச்சுது என்று எண்ணுகிறேன். ஏறுங்கள்."

"இல்லை இல்லை. சாப்பிட நேரம் கிடைக்கவில்லை. ஊர்போய்ச் சாப்பிடலாம் என்று ஓடிவந்தேன்."

"நீ எப்போதும் இந்தப்படி சாகிறதுதான் கண்டது. பணம் இருந்து என்ன பயன்? சுகம் வேண்டாமா? வேலை வேலை என்று எப்போதும் சொன்னால் ஓய்வே வேண்டாமா?"

இவ்விதம் இருவரும் பேசிக்கொண்டார்கள். வெய்யில் அதிகம் அடித்ததினுல் நான் மேல் அடுக்கு ஏறிப் படுத்துக்கொண்டேன். சிறிது நேரம் கழித்து விழித்துக்

கொண்டேன். அவ்விருவரும் பேசிக்கொண்டே இருந் தார்கள். பிறகு எனக்குத் தூக்கம் வரவில்லை. அவர்கள் பேச்சையே கேட்டுக் கொண்டிருந்தேன். அது என்ன வெனில்:

* * *

"இப்போதுதான் குடும்ப வாழ்வு பிடித்ததுபோல் இருக்கிறது. அதில் கசப்பு இல்லையே?"

"எல்லாம் தெய்வச் செயல். இப்படி மாறும் என்று கனவிலும் நான் நினைக்கவில்லை."

"இனி இரண்டாம் கலியாணம் இல்லையே."

"என்ன பைத்தியம். இனியும் அந்தப் பேச்சை யாராவது எடுப்பார்களா ?"

"ஆமாம், இந்தமாறுதல் எப்படி ஏற்பட்டது? அதுவும் இத்தனை விரைவில் ?"

"சங்கதி சொல்லுகிறேன் கேள். தெய்வச் செயல் என்று சொன்னேன் அல்லவா, அதுதான் நடந்தது.

"நீதான் தெய்வம் இல்லையென்று சொல்லிக்கொண் டிருந்தவன் ஆச்சே. இப்போது தெய்வம் வந்துவிட்டதா."

"சிறு வயதில் அந்தக் கொள்கை. அனுபவம் ஆக ஆக வேறு கொள்கை."

"அப்படியா என்ன அப்படிப்பட்ட அற்புதம் நடந்து விட்டது?"

"அதுதான் சொல்லுகிறேன் கேள். ஒரு நாள் நான் பஸ்ஸில் ஏறிச் சென்றுகொண்டிருந்தேன். பஸ்ஓட்டி வெகு விரைவாகச் சென்றான். எதிரே ஒரு குதிரைவண்டி போய்க் கொண்டிருந்தது. அதில் பெண்பிள்ளைகள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். பஸ் அருகில் வந்ததும் அந்த வண்டி விலகவில்லை. பஸ் ஓட்டி பலமாக ஊதினான். திடுக்கென்று

குதிரை மிரண்டு திரும்பியது. பஸ் வண்டியின் பின்பாகத்தில் அடிபட்டு வண்டி குடை கவிழ்ந்தது. கோ! என்ற அழுகைச்சத்தம் கேட்டது. பஸ் நிறுத்தப்பட்டது. உடனே நானும் இரண்டொருவரும் குதித்து அந்த வண்டியில் இருந்த பெண்களைக் காப்பாற்றச் சென்றோம்.

வண்டியில் மூன்றுபேர் இருந்தார்கள். ஒருபெரியவள், ஒரு யவ்வனப் பெண், ஒரு சிறு குழந்தை. வண்டியை அடைந்ததும் அக்குழந்தையை எடுத்தேன். அதற்கு ஒரு அடியும் படவில்லை. என்னைக் கண்டதும் சிரித்தது. அறிந்த முகச்சாடை இருந்தது. என்னை அறியாமலேயே அதனை முத்தம் இட்டேன். மறுபடியும் சிரித்தது. என் மூக்கையும் தலைமயிரையும் பற்றிக்கொண்டு விளையாடிற்று.

அடுத்த நிமிஷத்தில் அந்த யவ்வனப்பெண்ணைப் பார்த்தேன். அவளோ நிலத்தில் விழுந்திருந்தாள். குழந்தையை அருகில் உள்ளவரிடம் கொடுத்துவிட்டு அந்தப் பெண்ணைத் தூக்கி உட்காரவைத்தேன். அவளோ கண்களைத் திறந்து என்னைப் பார்த்தாள். உடனே தலை குனிந்துகொண்டாள். நான் பிரமித்துப்போய்விட்டேன். என் சொந்த மனைவி என்று கண்டேன். அவளைத் தொட்டும் எடுத்து உட்கார வைத்தும் ஆய்விட்டது. மனோ வேதனையைக் கூற முடியாது. இனிமேல் இவள் முகத்தையும் பார்ப்பதில்லை என்று எண்ணின நானே இவளை எடுத்து உட்காரவைக்க வேண்டி வந்ததே என்று எண்ணினேன். இனி இவளை இப்படியே விட்டுவிட்டுப் போய்விடவா, அல்லது அவளை எடுத்துக்கொண்டு போய் சிகிச்சை செய்யவா என்று என் மனச்சாட்சி திண்டாடியது. இப்படிப்பட்ட நிலையில் ஒரு பூனையோ நாயோ கிடந்தாலும் எந்த மனிதனும் காப்பாற்றுமல் இருப்பானா? ஒரு ஜன்மப்பகைவனும் ஒரு விபத்தில் கிடந்தால் காப்பாற்றவேண்டியதே அவன் கடமை

என்பார்களே. நான்மாத்திரம் என் மனைவியை இந்த நிலையில் விட்டுவிட்டுப் போகலாமா, ஊரார் இதனைக் கேட்டால் என்னைப் பெரும்பாவி, இரக்கமில்லாத அரக்கன் என்றல்லவோ கூறுவார்கள் என்று எண்ணினேன். தெய்வாதீனம் இப்படிக் கூட்டிவிட்டது என்று எண்ணி மேல் நடக்கவேண்டிய காரியத்தில் இறங்கினேன். இதையெல்லாம் சொல்லுவதற்கு இத்தனை நேரம் பிடித்ததே ஒழிய அங்கே எண்ணினது ஒரே விநாடிதான்.

என் மனைவியை நன்றாகக் கவனித்தேன். சிறு அடிதான் பட்டிருந்தது. அதிர்ச்சியினாலும் பயத்தினாலும் நடுங்கிக்கொண்டிருந்தாள். ஆனால் மற்றப் பெண்ணாகிய என் மாமியாருக்கோ அடி பலம் என்று கண்டேன். அவள் மூர்ச்சையற்றிருந்தாள்.

உடனே ஒரு குதிரை வண்டி பேசி மூவரையும் ஏற்றிக் கொண்டு பெரிய வைத்தியசாலை (ஆஸ்பத்திரி) க்குச் சென்றேன். பொதுஜனங்களும் போலீசுகாரரும் உதவி புரிந்தார்கள். ஆனால் அவர்களுக்கு எங்களுக்குள் இருந்த உறவு தெரியாது.

என் மாமியாரை ஆஸ்பத்திரிக்குள் எடுத்துக்கொண்டார்கள். என் மனைவிக்குச் சிறிது தைலம் தடவி என்னுடனே அனுப்பிவிட்டார்கள். நான் வேறு என்ன செய்ய முடியும்? அவளையும் என் குழந்தையையும் அழைத்துக் கொண்டு என் வீடுபோய்ச்சேர்ந்தேன். அன்று இரவே என் மனைவிக்கு அதிக ஜுரம்வந்தது. நல்ல வைத்தியரை அழைத்துச் சிகிச்சை செய்தேன். நானே அருகில் இருந்து கொண்டு சிசுருஷை செய்தேன். ஐந்து நாள் நல்ல சுரம் அடித்தது. பிறகு அதன் வேகம் குறையத் தொடங்கியது.

மற்றும் இரண்டு நாளில் சுகம் அடைந்தாள். அந்த ஏழு நாள் அனுபவமும் என் மனோ நிலைமையை மாற்றி

விட்டது. என் மனைவியின் குணம் பொன் குணம் என்று அறிந்தேன். அதுமுதல் எங்கள் இருவரிலும் ஓர் அற்புதமான நேசம் ஏற்பட்டது. என் மனைவியோ முந்திய சங்கதிகளைச் சிறிதேனும் சொல்லவில்லை. நானும் அதைப் பற்றிப் பேசவேயில்லை. நாங்கள் அன்யோன்யமாகிவிட்டதால் பழைய ஞாபகம் ஏன் வருகிறது ? ஒரு புதிய உலகத்தை நான் அடைந்துவிட்டேன்."

"உன் மாமியாள் என்ன ஆனுள் ?"

"அவள் ஒரு மாதத்தில் குணம் அடைந்து வீடு போய்ச் சேர்ந்தாள்."

"என்னமோ, இனிமேலாவது வீண் சந்தேகம் படாமல் அற்பக் காரியங்களுக்கெல்லாம் கோபம்கொள்ள வேண்டாம்."

"இனி எனக்கு உபதேசம் வேண்டியதில்லை. கடவுளே எனக்கு நல்ல அனுபவம் கொடுத்துவிட்டார். வேறு என்ன வேண்டியிருக்கிறது?"

பிறகு சிறிது நேரம் பேசாமல் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள்.

"சரிதான் எனக்குப் புத்தி வந்த பிறகு புத்தி புகட்ட வந்துவிட்டாயே. உன் நடத்தை சரியா ? உன் மனைவியிடம் அடிக்கடி பேசாமல் இருந்துகொண்டு அவளைச் சங்கடப் படுத்துவாயே, அது தப்பு இல்லையா" என்று கேட்டார் முதலியார்.

"அது முன் காலம். இப்போது என் நடத்தையும் மாறிவிட்டது. நான் அவ்வாறு செய்வதே இல்லை. நாங்களும் அன்யோன்யமாக இருக்கிறோம்."

"அது எப்படி ஏற்பட்டது ?"

"என்னுடைய அனுபவம் சுலபம். நான் பணக்காரனுக இருந்தபோதிலும் என் மனைவியை அழைத்துக்

கொண்டு எங்கேயும் போனதில்லை. அதிலும் சினிமா போனதேயில்லை. நான்மாத்திரம் தனியாகச்சென்று அதனை அனுபவிப்பதுண்டு. ஒரு நாள் ஒரு சினிமாவுக்குச் சென்றேன். படமோ ஒரு குடும்ப நடத்தையைப்பற்றி ; மனைவிக்கும் கணவனுக்கும் சச்சரவு ஏற்பட்டு வெகு துன்பங்களுக்கு ஆளாகிப் பிறகு ஒரு தெய்வச்செயலால் இருவரும் அன்யோன்யமாகி சுகத்தில் அமர்ந்த கதை. அதைக் கண்டதும் என் மனது சிறிது மாறுதல் அடைந்தது. நாமும் அன்யோன்யமாக இருந்தால் சுகப்படுவோம் என்று எண்ணினேன். என் அருகில் உட்கார்ந்திருந்த இரு தம்பதிகளைக் கண்டேன். அவ்விருவரும் மிகுந்த அன்போடு பேசிக் கொண்டு படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்து நான் பொறுமைப்பட்டேன். நானும் இவ்வாறு ஏன் இருக்கக்கூடாது என்று நினைத்தேன்."

"பிறகு என்ன ஆயிற்று?"

"அடுத்த நாள் என் மனைவியை அழைத்துக்கொண்டு அதே படத்திற்குச் சென்றேன். இந்தப் புது மாறுபாட்டை என்னிடம் கண்ட என் மனைவிக்கு என்மீது அன்பு அதிகம் ஏற்பட்டது. அந்தப் படத்தை அவள் கண்டதும், "நாமும் ஏன் இனிமேல் அனுவசியமாக சச்சரவாடவேண்டும்" என்று சொல்லுகிறாள்போல என்னைப் பார்த்தாள். அந்தப் பார்வையே என் நடத்தை முழுவதையும் மாற்றிவிட்டது. அது முதல் நாங்கள் எது வந்தாலும் பொறுத்துக்கொண்டு நேசமாக இருக்கிறோம்."

"இதுவரை சினிமா சென்று குணம் சீர்திருத்தம் அடைந்த கதைகளைக் கேட்டதேயில்லை. உன் கதைதான் அப்படிப்பட்டதில் முதல் கதை ஆகும்."

"நீ என்ன வேணுமென்றாலும் நினைத்துக்கொள்ளலாம். நான் சொன்னது உண்மைதான்."

இதற்குள் வண்டி நிற்கும் நிலையம் வந்தது. இருவரும் இறங்கிச் சென்றார்கள். இவ்விருவர்களுடைய குடும்ப வாழ்க்கை மாறுதல்களை நினைக்க நினைக்க நான் வியப் படைந்துகொண்டே இருக்கிறேன்.

எல்லாம் தெய்வச்செயல் என்பது என் மனதில் உறுதி ஆயிற்று.

---

5. விபரீத மாறுதல்

கந்தன் தேசிய இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறைக்குச் சென்ற ஒரு தியாக வீரன். இள வயதிலேயே தமிழும் ஆங்கிலமும் நன்ருகப் படித்து அடிகளாரின் ஆணைக்கு இணங்கிப் பதவியைத் துறந்து தேச சேவையில் புகுந்தான். பிதிரார்ச்சித சொத்தும் உண்டு. ஆளும் உயரம். நல்ல தோரணையிலும் நடப்பவன். நல்ல வயதில் அவன் பண்புக்கேற்ற ஒரு வாழ்க்கைத் துணைவியும் கிடைத்தாள். வள்ளியம்மை பாடசாலையில் வெகு சுருசுருப்போடு படித்துத் தன் வயதிற்கொருபடி மீறியே படிப்பில் முன்னேற்றம் அடைந்திருந்தாள். கற்பனைகள் சோடிப்பதில் வெகு கெட்டிக்காரி. தெளிவான நடையில் வெகு உருக்கமாக எழுதக்கூடியவள். கணவனைப்போலவே சுதந்திரக் கொள்கைகளைக் கொண்டவள். "பெண்ணின் பெருமையை" நன்ருகப் படித்து அதன்படி நடவடிக்கையில் காட்டும் முயற்சிகளை எடுத்துக்கொண்டவள். இவ்விதக் குணங்களைக்கொண்டு இளமையில் திகழ்ந்த அவ்விரு தம்பதிகளும் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு வெகு நிம்மதியோடு வாழ்ந்தார்கள்.

வள்ளியம்மை கந்தன்மீது அளவுகடந்த அன்புகொண்டிருந்தாள். அவனைத் தெய்வம் எனவே பாவித்துவந்தாள். என்ருலும் தன்மதிப்புக் கொண்டவள், சுதந்திரப் பிரியள். ஆகவே வீட்டில் சமையல் வேலையைத் தவிர ற்ற நேரங்களில் எழுத்து வேலையில் ஈடுபட்டிருந்தாள். பல மாசிகைகளுக்குக் கட்டுரைகளும் சிறு கதைகளும் எழுதுவாள். அதிலே அவளுக்குச் சிறிது அளவு ஊதியமும் வரும். ஆனல் கந்தனுக்கு அதெல்லாம் பிடிக்கவில்லை. அவள் தனக்குச் சமானமாக நாற்காலியில் உட்காரவும் பிடிக்கவில்லை. பொது மேடைகளிலே எத்தனை உரிமைப்

பேச்சுகளை வாரி வீசினாலும் வீட்டிற்குள் தனக்கே முழு ஆட்சியும் இருக்கவேண்டுமென்று விரும்புவான். வீட்டில் செலவைப்பற்றி அக்கறையே இல்லை. உரிமை ஆட்சியைப் பற்றித்தான் அவனுக்கு மிகுந்த கவலை. வீட்டில் ஆட்சி புரியாதவன் நாட்டில் எவ்வாறு ஆட்சி புரிய முடியும் என்று தன்னையே அடிக்கடி கேட்டுக்கொள்ளுவான். சிற்சில சில்லறைச் சங்கதிகளில் அபிப்பிராய பேதம் தோன்றவே அவள் மீது வீண் சங்கடங்கள் பட்டுத் துயரப்படுவான். உண்மையில் அவள்பேரில் அவனுக்குக் காதல் உண்டோ என்றும் சந்தேகிக்கலாம். தன்னையே கவனிக்கிறாளே ஒழிய கணவனைக் கவனிக்கவில்லை என்று எண்ணினான். இப்படி இருந்தால் அந்த வாழ்வு எப்படிப்பட்ட வாழ்வாக இருக்கும்? மனைவியிடம் மிருதியாகப் பேச்சு வைத்துக்கொள்ளாமல் எப்போதும் தேசிய நண்பர்களுடனேயே அவன் பொழுதுபோக்குவான்.

தான் கந்தனை எத்தனை ஆர்வத்தோடு காதலித்தும் அதனைத் திருப்பித் தன்மீது ஆர்வம் காட்டவில்லையே என்று அவள் எண்ணுவாள். அவன் தன் உரிமைகளைப் பற்றி அடிக்கடி மேடைகளில் பேசுவதைக் கேட்டிருக்கிறாள். 'இது என்ன விபரீதம்!' மேடையில் ஒரு பேச்சா, வீட்டில் வேறு அனுபவமா என்று எண்ணுவாள். இப்படிப்பட்ட மக்களைப் பார்த்துத்தான், இராமலிங்க அடிகள், 'உள்ளொன்று கிடக்கப் புறம்பொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்' என்றார் போலும். 'நான் ஒரு மனிதனைக் கல்யாணம் பண்ணிக்கொண்டேனா, கல்லைக் கல்யாணம் செய்துகொண்டேனா' என்றும்கூட எண்ணுவாள். ஆண் மக்கள் நெஞ்சு முழுதும் இவ்வாறே இருக்குமோ என்றும் நினைப்பாள். தன்னுடைய சரித்திரத்தையே ஒரு சிறு கதைக்காக வைத்துக்கொண்டு ஒரு சிறு நவீனமும் எழுதினாள். பனிக்கட்டியையாவது மார்பில் அழுத்திக்கொள்ள

லாம். இப்படிப்பட்ட கல் நெஞ்சர்களை எவ்வாறு அணைவது என்றும் ஏங்குவாள்? ஆனல் இந்த நினைவுகளை நெஞ்சுக்குள்ளேயே வைத்துக்கொண்டு வெளியே காட்டாமல் வீட்டு வேலைகளைச் சரிவரச் செய்துவருவாள். இப்படிச் சில ஆண்டுகள் வாழ்வில்லாச் சங்கடத்திலே வாழ்வு சென்றது.

கந்தன் தேசத் தியாகிகளின் அட்டவணையில் சேர்க்கப்பட்டிருந்தான். ஆகவே நாட்டுக்குச் சுதந்திரம் வரவே தேர்தல் ஏற்பட்டது. தேசிய மக்கள் ஆட்சி ஏற்றுக்கொண்டார்கள். கந்தனுக்கும் சட்டசபையில் இடம் கிடைத்தது. அடிக்கடி தலைநகருக்குச் சென்று ஊழியம் செய்யவேண்டி வந்தது. வீட்டில் எப்போது தனது நெஞ்சிற்கு ஏற்ற வாழ்க்கை கிடைக்கவில்லையோ நாட்டிலாவது தனது நெஞ்சுக்கேற்ற தொண்டு செய்யலாம் என்று விரும்பினன். ஆகவே, அடிக்கடி தலைநகரிலேயே நீண்டநாள் வசிக்கத் தொடங்கினன். அப்போது வள்ளியம்மையைத் தன்னோடு அழைத்துச் செல்லலாம் அல்லவா? அது அவனுக்குப் பிடிக்கவில்லை. வள்ளியோ தன்மனையில் தன்னந்தனியே காலம் கழித்துவருவாள். எழுத்து வேலையில் ஈடுபட்டுச் சிலநாட்கள் போக்குவாள். ஆனல் இரவில் தூக்கமேவராது. படித்தவள் ஆகையினல் பண்டைச் செந்தமிழ்க் காதலி போன்று தணந்துசென்ற கணவன்மீது

"தினைவருநீர் துடைப்பவராய்த் துவள்கின்றேன்
துணைவிழிசேர் துயிலை நீக்கி,
இனைவளைபோல் இன்னலஞ் சோர்ந்திடருழப்ப
இகந்தவர்நாட் டில்லை போலும்,
தனியவர்கள் தளர்வெய்தத் தடங்கமலம்
தளையவிழ்க்கும் தருண வேனில்
பனிமதுவின் பசிந்தாது பைம்பொழிலில்
பாரப்பிவரும் பருவத் தென்றல்."

என்று எண்ணி கண்ணீர் உகுப்பாள்.

ஊரில் தொத்துநோய் தொடங்கிற்று. படித்த பெண்கள் சேர்ந்து ஒரு சேவாசங்கம் ஏற்படுத்தி அதன் மூலம் தொத்துநோய் வராதபடி பாடுபட்டார்கள். அச்சங்கத்தில் வள்ளியம்மையும் சேர்ந்து தொண்டாற்றினாள். வெகு மும்முரத்தோடு வேலை செய்தாள். 'தன் பாழ் உயிர் போனாலும் போகட்டும்; பிறருடைய பிணியைப் போக்கி நல்ல வாழ்வைத் தருவோம்' என்று எண்ணி இரவும் பகலும் ஏழை மக்களுக்குப் பாடுபட்டாள். 'வாழ்வில்லா சங்கடத்தில் சாதலே நன்று' என்று ஔவையார் கூறவில்லையா? இந்த்ச் சேவை செய்வதன் காரணமாகத் தனக்கு நோய் ஒட்டிக்கொண்டு உயிர் போனாலும் நல்லது என்று அஞ்சா நெஞ்சத்துடன் ஏழை இல்லங்களுக்குச் சென்று பாடுபடுவாள். அப்படிப்பட்ட பெண்மணியைக் கண்டால் ஏழை மக்கள் அவளை ஒரு தெய்விகப் பெண் என்றே நினைப்பார்கள். 'மங்கையர்க்கரசி' எங்கே என்று அவளை எதிர்பார்த்து வரவேற்பார்கள். அப்பெண்மணியின் புகழ் நகர் எங்கும் விளங்கிற்று. நாட்டிலும் பரவிற்று. இந்த வகையில் அவளுடைய நெஞ்சம் சிறிது ஆறுதல் அடையும்.

ஆனால் வள்ளியம்மைக்கோ தனது காதலுக்குத் தக்க பரிவு ஏற்படவில்லையே என்ற கவலை மிகுந்திருந்தது. அதற்கு முடிவு சாவே என்று எண்ணினாள். அதுவும் அவளைப் படைத்த இறைவன் திருவடிக்கு ஒரு விண்ணப்பமாகச் சென்று சேர்ந்ததுபோலும். இறைவனும் அதனை ஏற்றுக் கொண்டானோ பார்ப்போம்.

ஒருமுறை கந்தன் தலைநகர் சென்றவன் மூன்றுமாதம் ஊருக்கு வரவே இல்லை. சட்டசபை அலுவல் முடிந்தது. குளிர் காலம் வந்தது. தேசிய சபை வடநாட்டில் கூடிற்று. அதற்குச் சென்றுவிட்டான். வீட்டிற்குத் தகவல் வேண்டாமா? தாலி கட்டின மனைவி ஆயிற்றே என்ற எண்ணமும்

இன்றி நேராக வடநாடு சென்றுவிட்டான். தினசரிகளில் செய்தித்திரட்டில் அதனைப் படித்த பிறகுதான் வள்ளியும் அதனை அறிந்தாள். அன்று இரவு அவள் தூங்கவேயில்லை. கடவுள் ஏன் இவ்வித வாழ்க்கையைக் கொடுத்தான் என்று ஏங்கினாள். என்றும் இல்லாத ஆர்வத்துடன் அவள் அன்று இரவு கடவுளைத் துதித்தாள். 'ஐயனே, எனக்கு உலக வாழ்வு வேண்டாம்; என்னை அழைத்துக்கொள்ளுவீர்' என்று இரவெல்லாம் கதறினாள். அச்சொல் இறைவன் காதிற்கு எட்டிற்று போலும்.

மறுநாள் சேவா சங்கத்திற்கு ஒரு செய்தி எட்டியது. சிறிது தூரத்திற்கு அப்பால் இருந்த ஒரு கிராமத்தில் நச்சுக்காய்ச்சல் தோன்றி ஒன்றிருவர் இறந்துவிட்டதாக அச்செய்தி கூறிற்று. அச்செய்தி வந்தவுடனேயே வள்ளியம்மாளும் ஒரு துணைச் செயலாளரும் புறப்பட்டு அவ்வூர் சேர்ந்து நோயாளிகளுக்கு மருந்து ஊட்டி ஊரையும் சுத்தி செய்து வைத்தார்கள். இதற்கு முந்தி சென்றபோது வெகு முன் எச்சரிக்கையாகச் சென்றுகொண்டிருந்த வள்ளியம்மை அன்றைய தினம் வெறும் கையால் தொட்டும் தேற்றியும் வந்தாள். வேணுமென்றே செய்தாளோ அறியோம். துணைவி என்ன சொல்லியும் அவள் கேட்கவில்லை. அன்று இரவு வீடு வந்ததும் வெகு களைப்போடு படுத்துக்கொண்டாள். இரண்டு நாளில் காய்ச்சலும் உடல் எல்லாம் படு நோயும் எரிச்சலும் உண்டாயிற்று. இதை அறிந்த தோழியர்கள் வெகு வருத்தப்பட்டுப் பல மருந்துகளையும் தந்தார்கள். ஆனால் வள்ளியம்மையோ அம்மருந்துகளை மறைவாக எறிந்துவிட்டாள். மறுநாள் உடல் மிக மெலிவடைந்தது. ஊரார் அது அறிந்து வெகு துயரம் அடைந்தார்கள். அப்பெண் உத்தமிக்கு இறுதியும் வந்தது. இறைவன் தாள் அடைந்தாள். அவள் வேண்டிக்கொண்டது அதுவே ஆகும்.

ஆனால் ஊரோ அல்லோலகல்லோலப்பட்டது. அடக்க முடியாத துயரத்தில் ஆழ்ந்தது. ஏழைப் பெண்மக்கள் தங்கள் சொந்தத் தாய் இறந்துவிட்டதுபோல் புரண்டு புரண்டு அழுதார்கள். சேவா சங்கத்தின் துயரத்திற்கு அளவில்லை. ஊர்ப் பொதுவில் அவளுடைய திவ்விய உடலை அடக்கம் செய்தார்கள். ஊரார் மூன்று நாள்வரை துக்கம் பாராட்டினார்கள். எல்லா தினசரிகளிலும் துக்கச்செய்தி எழுதப்பட்டது.

கந்தனுக்குச் செய்தி அனுப்பப்பட்டது. அவன் வெகு தொலைவில் இருந்ததினால் ஈமக்கிரியைகளுக்கு வரவில்லை. அவன் தன் மனைவி இறந்துபோனாள் என்று செய்தி கேட்டதும் துக்கப்பட்டானா என்று சொல்லவும்கூட இயலாது. ஏனெனில் அவனுடைய மனப் போக்கு அவ்விதமாக இருந்தது. கல்வி கற்றவர்களிடத்தில் இவ்விதமான நிகழ்ச்சி ஏற்படுதல் வியப்பு அல்லவா? ஆனால் அது கந்தனிடம் ஏற்பட்டது. உலகம் அப்படிப்பட்டது என்று அறிக.

கந்தன் ஊருக்கு வந்தான். அரசியல் துறையில் புகழ் பெற்றவன். அவனுக்கு யார்தான் பெண் கொடார்கள். சில மாதங்களுக்குள் இரண்டாம் திருமணம் நடந்தது. அப்போது வாய்த்த மனைவியும் நல்லவள். அவன் அதிர்ஷ்டம் அவ்வாறு இருந்தது. படிப்பு அதிகம் இல்லை, பழைய முறைப்படி வாழ்ந்த குடும்பத்தினள். கணவனைத் தெய்வமாகப் பாவித்து வெகு அடக்க ஒடுக்கத்துடன் இல்லறம் நடத்தினாள். கணவன் எதிரே நிற்கவும்மாட்டாள். அவள் இருக்கும் இடம்கூடப் பிறர் அறியமாட்டார்கள். அந்த நிலைமையில் இரண்டாம் மனைவி இருக்கக் கந்தனுக்கு நாட்டில் கிடைத்த ஆட்சிபோல வீட்டிலும் கிடைத்து வெகுமகிழ்ச்சியோடு இல்லறத்தில் ஈடுபட்டான். ஓர் ஆண்டில் ஒரு நல்ல குழந்தையும் பிறந்தது. வெகு அன்போடு குழந்தையைச்

சீராட்டிப் பாராட்டிவந்தான். முதல் மனைவி வள்ளியம்மையை மறந்தே விட்டான்.

இப்படி இருக்க ஒருநாள் படித்த ஒரு வாலிபன் கந்தனைப் பார்க்க வந்தான். தான் சேவாசங்க ஊழியன் என்று சொல்லி ஒரு காரியமாக வந்ததாக உரைத்தான். அப்பெயர் கேட்டதும் கந்தன் திடுக்கிட்டான். என்றாலும் மனதைச் சரிப்படுத்திக்கொண்டு என்ன காரியம் என்று கேட்டான். "தங்கள் முதல் மனைவியார் எங்கள் சங்கத்தில் மிகுந்த தொண்டு புரிந்திருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை உலகிற்கே ஒரு படிப்பினை ஆகும். ஏழை மக்களுக்குத் தன் உயிரைத் தியாகம் செய்தவர்கள். அன்னாருடைய வாழ்க்கை வரலாற்றை வெளியிடவேண்டும் என்று எங்கள் சங்கத்தார்கள் தீர்மானித்துள்ளார்கள். அது தங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தரக்கூடியது. அதற்குத் தாங்கள் ஒத்தாசை செய்யவேண்டும்."

இந்த நீண்ட பேச்சைக் கேட்டதும் அவன் நெஞ்சு எரிந்தது. இந்தச் செயலே அவனுக்குப் பிடிக்கவில்லை. இதில் பணத்திற்கு அடிபோடுகிறதாகத் தெரிகிறது என்று பெருங் கவலை எழுந்தது. ஆனால் ஒருவாறு சமாளித்துக்கொண்டு "அதற்கு நான் என்ன செய்யவேண்டும்; என்னிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"நாங்கள் கேட்பது வெகு எளிதானதுதான். பணம் ஒன்றும் தேவையில்லை. அன்னாருடைய சேவையைக் கண்ட நாங்கள் எவரிடமும் பணத்திற்குச் செல்வதாக இல்லை. தங்களிடமும் கேட்பதில்லை."

இதனைக் கேட்டவுடனே அவன் கவலை ஒருவாறு அமைதி அடைந்தது.

"பின் என்ன கேட்கிறீர்கள்?" என்றான்.

"அந்த அம்மையார் பல நூல்களையும் கட்டுரைகளையும் கடிதங்களையும் எழுதியுள்ளார்கள். அவைகள் தான் வேண்டும். அவைகளைக் கொண்டு ஒரு வரலாறு எழுதுகிறோம்; அது தங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் அல்லவா?"

"மகிழ்ச்சி கிடக்கட்டும். ஒரு சேவாசங்கத்தார் கேட்டால் இல்லை என்று கூற ஒரு தியாகிக்கு நா எழும்புமா? நான் அவைகளைத் தேடிப் பார்த்து வைக்கிறேன். ஒரு வாரம் கழித்து வாருங்கள்" என்று சொல்லிக் கந்தன் அவனை அனுப்பிவிட்டான்.

'முதல் மனைவி எழுதினவைகளிலே கடிதங்கள் என்று அவன் சொன்னானே எவராவது அவளுக்குக் கடிதங்கள் எழுதியிருப்பார்களோ? அவைகளினால் அவளுடைய உண்மைக் குணத்தை அறிய முடியும்' என்ற அழுக்காறுற்ற பண்பு மனதில் எழுந்தது. ஒரு தியாகிக்கு இந்த எண்ணம் வருமா என்று கேட்கவேண்டாம். அவனும் மனிதன் தானே. அந்த எண்ணம் கொண்டு கந்தன் அவளுடைய பெட்டிகளைத் தேட எண்ணினான்.

வள்ளியம்மையின் அலமாரியைத் திறந்தான்; வெகுநாள் திறவாமல் கிடந்திருந்ததினால் அது மிகுதியாகப் புழுதி படிந்திருந்தது. ஒரு துணி எடுத்துத் தூசி தட்டிவிட்டுப் பார்த்தான். அவள் எழுதின அச்சுப் பிரதிகள் கையெழுத்துப் பிரதிகள் நிரம்ப இருந்தன. இன்னும் அச்சுக்கு அனுப்பாத கட்டுரைகளும், சிறுகதைகளும், நவீனங்களும் இருந்தன. மேலும் சேவாசங்கத்தின் கடிதப் போக்குகளும் இருந்தன. இத்தனை வேலைகளையும் ஒரு பெண்மணி எப்படிச் செய்தாளோ என்று வியந்தான். எல்லாவற்றையும் பார்க்கையில் ஒரு மூலையின் ஒரு பெரிய கடிதக் கட்டு இருந்தது. அதைப் பார்த்ததும் அவைகள் கடிதப் போக்குகள் என்று அறிந்தான். நெஞ்சு கருக்கென்றது. 'யாரிடம் இத்தனை கடிதப்

போக்கு வைத்துக்கொண்டிருந்தாள். என்னவோ என்று எண்ணியிருந்தேன். இவள் ருத்திராட்சப் பூனையோ அல்லது பசுமாட்டுத் தோல் போர்த்துக்கொண்டு திரிந்த புலியோ என்னையும் ஏய்த்துவிட்டாளே' என்று பல்லைக் கடித்தான். 'இவை எல்லாவற்றையும் பிறர் அறியும் முன்னர்த் தீயில் போட்டு எரித்துக் கரியாக்குகிறேன்' என்று அவைகளைத் தூக்கினான். தீக்கு இறையாக்கு முன்னம் எவனுக்கு இவைகளை எழுதினாள் என்று தெரிந்துகொண்டு எரிக்கலாம் என்று அக் கட்டை அவிழ்த்தான். என்ன ஆச்சரியம்! ஒரு கடிதத்திலாவது தபால் முத்திரை இருக்கவில்லை. எல்லாக் கடிதங்களிலும் திரு. கந்தசாமிப் பெரியார், சட்டசபை அங்கத்தினர் என்று விலாசம் எழுதப்பட்டிருந்தது. இவைகள் எல்லாம் எனக்கே எழுதியிருக்கிறாள், அப்படியாயின் ஏன் அனுப்பவில்லை என்று மயங்கினான். கட்டை அவிழ்த்ததும் எல்லாவற்றிலும் இருந்த துண்டுக் காகிதத்தைப் பார்த்தான். "நான் இறந்த பிறகு என் காதலர் கந்தப்பெருமானார் படிக்க உள்ளவை" என்று அதில் எழுதப்பட்டிருந்தது. முகம் உடனே மாறிவிட்டது. என்ன கெட்ட எண்ணம் கொண்டேன் என்று சொல்லி வீட்டினுள் ஆசு அமர்ந்து கடிதங்களை ஒவ்வொன்றாய் வாசித்தான்.

எல்லாக் கடிதங்களும் தனக்கே எழுதப்பட்டிருந்தன. எல்லாம் நெஞ்சின் அடியிலிருந்து எழும்பிய காதல் மொழிகளாக இருந்தன. தன்னை இத்தனை ஆர்வத்தோடு நேசித்திருப்பாள் என்று அவள் கனவிலும் எண்ணவேயில்லை. எப்படிப்பட்ட கவியும் தீட்டியிருக்க முடியாத காதற் பண்புகள் அக்கடிதங்களில் நிரம்பியிருந்தன. தான் பிரதி அன்பு செலுத்தாததினால், அவள் அவைகளைத் தனக்கு அனுப்பவில்லை என்று எண்ணினான். ஒன்றன்பின் ஒன்றாகக் கடிதங்களைப் படிக்கப்படிக்க அவன் நெஞ்சு அழுந்தத் தொடங்

கிற்று. கண்ணில் நீர் ஆறுகப் பெருகிற்று. அக்கடிதங்களைப் படித்து முடிப்பதற்குள் மூன்று மணி நேரம் ஆயிற்று. அது முப்பது ஆண்டுத் தளர்ச்சியைத் தந்துவிட்டது. தன்னையே நொந்துகொண்டு தானே இவள் உயிருக்குக் காலனுகிவிட்டதாகக் கருதினன். அவள் சேவா சங்கத்தில் சேர்ந்து உழைத்ததும் காதலின் கொடுமையை மாற்றுவதற்கே என்று அறிந்தான். அவள் இறப்பதற்கு முந்தின நாட் கடிதமும் இருந்தது. 'தான் உலகில் இருந்து என்ன பயன்? அடுத்த ஊரில் கொடிய நோய் பரவுகிறது. அதனில் உழைப்பதாகச் சாக்குச் செய்தாவது காலன் வாய்ப்படக் கூடும்' என்று எழுதியிருந்தாள். அதனைப் படித்ததும் தானே அவள் மரணத்துக்குக் காரணம் என்று தீர்மானித்துப் பித்தம் பிடித்தவன்போல உட்கார்ந்துவிட்டான்.

மனைவி சாப்பிட வரவில்லையே என்று சொல்லிக் கதவைத் தட்டும்வரையில் அவன் நினைவு உலகில் இருக்கவில்லை. ஒன்றும் பேசாமல் எழுந்து வந்து இலையில் உட்கார்ந்தான். ஆனுல் சாதம் இறங்கவில்லை. உடம்பு சரியாக இல்லை என்று சொல்லிப் படுக்கைக்குச் சென்றுன். ஆனுல் தூக்கம் வரவேயில்லை.

அதுமுதல் கந்தன் 'எப்போது இறப்போம்; எப்போது அடுத்த உலகில் வள்ளியம்மையைச் சந்தித்து மன்னிப்புக் கேட்டுக்கொள்வோம்' என்ற நினைவாகவே இருந்தான். அதனுல் அவன் கிழவன்போல் ஆகிவிட்டான். உருவமும், நெஞ்சும் அதேநிலையை அடைந்துவிட்டன. தன் மனைவியையும், குழந்தையையும்கூட மறந்தான். தன்நாட்டுச் சேவையையும் துறந்தான். இப்படியும் மாறுதல் ஏற்படுமா? என்று நண்பர்கள் எண்ணினுர்கள். ஆனுல் காரணத்தை எவரும் அறியவில்லை. அவனும் எவரிடமும் சொன்னவனும் அல்லன்.

6. பொன்னன் கடிதங்கள்

மயிலூர் சிறை,
2–10–43

அன்புள்ள சின்னம்மாளுக்கு ஆசீர்வாதம்,

உன்னுடைய கடிதம் கிடைத்தது; அதைப் படித்தவுடன் என் மனம் அடைந்த வருத்தத்திற்கு அளவில்லை. 'நம் அருமைக் குழந்தை நோய்வாய்ப்பட்டுள்ளாள்' என்று கேட்க என் நெஞ்சு எவ்வாறு துடித்தது என்று எப்படி எழுதுவேன்? நான் நேரில் வந்து அவளுடைய அழகான முகத்தை எப்போது பார்ப்பேனோ அறியேன்! எவ்வாறு காய்ச்சலால் துடிக்கிறாளோ என்று எண்ணவும் முடியவில்லை. சில நிமிஷங்கள் தரையில் விழுந்துவிட்டேன். பிறகு எழுந்து ஒருநாள் முழுதும் சொல்லமாட்டாத துயரத்தில் ஆழ்ந்திருந்தேன். என் துயரத்தைக் கலைக்கவே இந்தக் கடிதம் உனக்கு எழுதுகிறேன். குழந்தை அப்பா என்று அழுதால், 'கடவுளின் திருவருளால் நான் கூடிய சீக்கிரத்தில் வந்து பார்ப்பேன்' என்று ஆறுதல் சொல்லு.

இதுவரையில் கடவுள் பெயரையே சொல்லாத நான் இப்பொழுது கடவுள் அருள் என்கிறேன். அது தற்செயலாகவே வந்துவிட்டது. கஷ்ட காலம் வந்தால்தான் கடவுள் ஞாபகம் வரும்போல் இருக்கிறது. இல்லாவிடின் ஏன் அவரது அன்பு நிறைந்த திருவடியின் எண்ணம் எனக்கு வரும்? நான் இங்கே சிறைச்சாலையில் தன்னந்தனியே பெட்டியில் பாம்புபோல் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறேன். இனி உயிர் போகும்வரை மானிட சுதந்திரம் இன்னதென்று அறியேனோ அறியேன். தன்னந்தனியே தன்னிஷ்டப்படி திரிந்துகொண்டிருந்த ஒருவனுக்கு ஒரு நாள் சிறை போதுமானது. வருடக்கணக்காகச் சிறையிலே

அழுந்தினால் இதனை என்னவென்று கூறுவது? நீயோ நல்ல குடும்பத்தில் வெகு சுகமாக வாழ்ந்தவள். இப்போது வாசல் இன்றிக் கூலி வேலை செய்து ஒருவிதப் பாதுகாப்பும் இல்லாமல் உலகத்தில் சிக்குண்டு கிடக்கிறாய். இது என்ன விபரீதம்! நம் அருமை மகளோ நல்ல மாளிகையில் வேலையாட்கள் பால்லூட்டச் சுகத்தோடு வளருவதற்கு மாறாக ஏழைக் குடிசையில் குடிக்கக் கஞ்சியும் இல்லாமல் நோய் வாய்ப்பட்டு மருந்தும் கிடைக்காமல் வருந்துகிறாள் என்றால் இது யார் செய்த பாவமோ? இத்தனைக் கஷ்டங்கள் வரப் போகத்தான் அவருடைய எண்ணம் நமக்கு வருகிறது. எல்லாம் என்னுடைய துரதிர்ஷ்டத்தினால் வந்தது என்று எண்ணுகிறேன். நான்மாத்திரம் முதலிலிருந்து நல்ல நடவடிக்கை கொண்டிருந்தால் இவ்வாறு கஷ்டப்படுவோமா? 'தன்வினை தன்னைச் சுடும்' என்ற சொல் என்மட்டில் உண்மை ஆயிற்று.

நான் இளவயதிலேயே நல்ல படிப்புப் பெற்றுக் கண்ட படித் திரியாமல் என் பெற்றோர் வைத்துவிட்டுச் சென்ற சொத்தை அழிக்காமல் காத்துவந்திருந்தால் இக்கதிக்கு நாம் எல்லோரும் வந்திருப்போமா? பெற்றோர் சொல்லைக் கேட்காமல் நல்லவர் கெட்டவர் என்பதை அறியாமல் முகஸ்துதி செய்த வம்பர்களை அன்பர்கள் என நம்பி அவர்கள் பேச்சைக் கேட்டுப் பதவிக்கு ஆசைப்பட்டுச் சட்டசபைக்கு நின்று கடன்பட்டுச் சொத்தை அழித்தேன். அழியாது என்று எண்ணின சொத்து எத்தனை எளிதில் அழிந்துவிட்டது? தேசியம் இன்னது என்று அறியாமல் தேசியக் கட்சியில் சேர்ந்தேன். தேசியம் என்ற பெயர் இருந்தால் போதும், வெற்றி வரும், என்று எனக்கு ஆப்த மனிதர்கள் கூறினார்கள். இயக்கத்தில் இறங்கின பிறகு தோல்வி அடையலாகாது என்று என்னை எண்ணச்செய்தார்கள். பெரு

வாரியாகப் பணத்தை இறைத்தேன். எத்தனை தான்வாக்காள ருக்குச் சென்றதோ தெரியவில்லை. இடையில் இருந்த வர்கள் முழுதும் கொண்டு தின்றிருக்க வேண்டும். சிறை யில் இருந்து கொண்டு சிந்தனை செய்யும்போது தான் உண்மை தெரிகிறது. தேர்தலில் நின்று வெற்றி அடைந்து என்ன பயன்? ஒரு நாளும் சபையில் உட்கார்ந்து பத வியை அனுபவிக்க வில்லை. ஒத்துழையாமை வந்தது. கடன் தான் மீந்தது. என் சொத்தும் உன் சீதனமும் கொள்ளை போய் விட்டன. ஓட்டாண்டி ஆகிவிட்டேன். இதுதான் லாபம். தேசீயம் என்று சொன்னாலேயே ஒரு மதிப்பு உண்டு என்று போதித்தார்கள். அவர்கள் இப் போது எங்கே மறைந்து போயினர். நான் இந்தப் பரிதாப மான கதியில் பரிதபிக்கின்றேன்.

இதைப்பற்றி எல்லாம் இங்கே எழுதி என்ன பயன்? நம் குழந்தை எப்படிப் பரிதபிக்கின்றாளோ? அதுவே என் கண்முன் நின்று ஆடுகிறது. முருகக் கடவுளுக்குக் காணிக்கை வைத்துக் கும்பிடு. இக்கடிதம் வந்தவுடன் குழந் தையின் நிலைமையைப் பற்றி விவரமாக எழுது.

அன்பன்
பொன்னன்

(2)

மயிலூர் சிறை
5—10—43

அன்புள்ள சின்னம்மாளுக்கு,

ஆசீர்வாதம். உன்பதில் கடிதம் கிடைத்தது. குழந் தையின் சுரம் அதிகரித்தது என்று எழுதுகிறாய். 102 டிக்ரி என்றும் சொல்லுகிறாய். முருகனுக்குக் காணிக்கை வைத்தும் குறையவில்லையா? டைபாய்டு என்ற முறைக்

காய்ச்சல் என்று சொல்லுகிறார்கள் ? நம் ஊர் கண்ணுடைய அம்மன் சந்நிதிக்குச் சென்று தேவியின் திருவடியில் விழுந்து கும்பிடு. அடுத்த ஆண்டில் திருவிழாவில் ஒரு குட்டி அனுப்புவதாகவாவது பிரார்த்தித்துக்கொள். அம்மன் கேட்பாள். நம் கஷ்டம் நிவர்த்தியாகும். தெய்வ நம்பிக்கை இல்லாதவன் ஏன் இப்படி எழுதுகிறேன் என்று எண்ண வேண்டாம். எல்லாம் அவளுடைய செயல் என்று இப்போதுதான் தெரிகிறது. உடனே அம்மன் கோயிலுக்குச் சென்று வெடிகாய் போடுவதாகவும் வேண்டிக்கொள். நம் குழந்தை சௌக்யம் அடைவாள்.

என்ன செய்வேன். அதிகம் எழுதவும் முடியவில்லை. என் கண் நீர் ததும்புகிறது. (இங்கே ஒரு சொட்டுக் கண்ணீர் விழுந்த அடையாளம்.)

நான் முன்னிருந்த நிலை என்ன, இப்போது இருப்பது என்ன? எல்லாம் என்னுடைய விதியோ அல்லது நானே கொண்டுவந்து என்மீது கொட்டிக் கொண்டேனோ ? யானை தன் தலைமேல் மண்ணைத் தானே போட்டுக்கொள்ளும் என்பார்கள். அவ்வாறே தான் நானும் செய்து கொண்டேன் என வேண்டும். என் பெற்றோர்கள் பேச்சை உதறிவிட்டேன். சிநேகிதர் பேச்சைக் கேட்டுச் சொத்தைத் தொலைத்தேன். ஏழை ஆகிவிட்டும் வேறு சிலர் பேச்சைக் கேட்டேன். என்னை அதோகதியில் ஆழ்த்திவிட்டார்கள். கடன் அதிகமாகி மெத்தை வீடு, நகை எல்லாம் போய்விடக் கூறை வீட்டில் குடியிருந்தேன். அதுவும் சிலருக்குப் பொறுக்கவில்லை போலும். எனது நண்பர்கள் போல வந்து புத்தி சொன்னார்கள். நம்பினேன்; கெட்டேன். சில டிக்ரிகள் என்மீது ஏற்பட்டன. சிறையில் அடைத்து விடுவார்கள் என்று தோன்றிற்று. கடனுக்காகச் சிறைக்குச் செல்லுதல் அவமானம் என்று எண்ணினேன். “ஊரில் அமைதி

யின்மை அதிகமாக இருக்கிறது. இச்சமயத்தில் நாமும் அதில் சேர்ந்துகொண்டு கச்சேரிக்குத் தீவைத்து விட்டால் டிக்ரி தீர்ந்து போகும்" என்று இரகசியமாக என்னிடம் சொன்னூர்கள். என் துர்அதிர்ஷ்ட வேளை. அது சரி என்று நம்பி விட்டேன். அப்போது பெரும் போர் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. தினசரியில் கண்ட சங்கதிகளைப் படித்து ஏமாந்து போனேன். இரகசியமாகச் சில மும்முர வாதிகள் கூடிய கூட்டங்களுக்குச் சென்றேன். கண்டிப்பாகப் பிற நாட்டு அடிமை அரசு முடிந்துவிடும். நம் கடன் தொல்லை நீங்கிவிடும் என்று நம்பி அவர்களுடன் சேர்ந்து கொண்டேன்.

ஒரு நாள் திடீரென்று தெருக்களில் ஆரவாரம் ஏற்பட்டது. பெருவாரியான கூட்டம் கடைவீதி வழியாகச் சென்றது. நானும் ஓடினேன். கொத்தவால் சாவடியைச் சுட்டு எரித்தார்கள். காவல்காரன் பயந்து ஓடிவிட்டான். மறுபடி கச்சேரிக்குள் புகுந்தார்கள். அது மூடப்பட்டிருந்தது. அதில் தீ வைத்தார்கள். எனக்கோ வெகு மகிழ்ச்சி. என் கடன் தீர்ந்துவிட்டது என்று எண்ணினேன். உடனே அவ்வேலையில் நானும் இறங்கினேன். அதை எனக்குப் புத்தி சொன்ன சில நண்பர்கள் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். எனக்குத் தெரிந்த சில உத்தியோகஸ்தர்களும் பார்த்தார்கள். நான் செய்தது தப்பு என்று அப்போது தோன்றவில்லை. தீ வைத்ததினுல் என் கடன் எப்படிப் போகும் என்றும்கூட எனக்குத் தோன்றவில்லை.

கச்சேரி எரிந்த அன்று இரவு நான் அடைந்த ஆனந்தத்திற்கு அளவில்லை. என் நண்பர்களுடன் சிற்றுண்டி சாப்பிட்டு வெற்றியைக் கொண்டாடினேன். இரண்டு நாள் கழித்துக் காவல் படை வந்தது. உடம்பில் நடுக்கம் எடுக்கத் தொடங்கிற்று. என் நெருங்கிய நண்பர்கள் மறைவாய்ப்

போய் விட்டார்கள். நானும் ஓடி ஒளிந்து கொண்டேன். என் மதியும் வீரமும் என்ன ஆயிற்று என்று சொல்ல வெட்கமாயிருக்கிறது. அன்று இரவு நீங்கள் பட்ட கஷ்டம் என்னமோ நான் நினைக்கவும்கூட முடியவில்லை. பாவம், என் குற்றத்திற்காக நீங்கள் வருத்தப் படுகிறீர்கள். ஒருவர் செய்த வினைக்கு மற்றவர்கள் ஏன் வருந்த வேண்டுமோ? எல்லாம் அவனுடைய திருவிளையாடல். சகவாச தோஷம் என்பார்கள். அதுவும் உண்மையோ ? என்னமோ ? எல்லாம் பழைய ஞாபகம். இப்போது குழந்தை படுகிற கஷ்டத்தை எண்ணினால் என் மனம் தாங்கவில்லை. தைரியமாக இரு. குழந்தையை நல்ல வைத்தியருக்குக் காட்டு. உடனே பதில் எழுது.

அன்பன்
பொன்னன்

(3)

அன்புள்ள சின்னம்மாளுக்கு,

ஆசீர்வாதம். இன்னும் குழந்தைக்குக் காய்ச்சல் தீரவில்லையா? சுரம் 103, 104 ஏறிவிட்டதா? முருகப்பிரானுக்கும் கண்ணுடைய பிராட்டிக்கும் காணிக்கை கட்டினையோ ? மனதாரக் கும்பிட்டாயோ, என்னமோ? நம் குழந்தை புத்திசாலி, அவளையும் வேண்டிக் கொள்ளச் சொல்லு. உடனே சுரம் நீங்கிவிடும்.

ஈசா என்னை ஏன் இப்படிச் சோதிக்கிறாய்? ஒவ்வொரு இரவும் தூக்கமின்றி என் நெஞ்சு படும்பாடு போதாதா ? என் குழந்தைக்கும் சுரம் கொண்டுவந்து விட்டு வேடிக்கை பார்க்கிறாயா ? இந்தத் துன்பம் போதாதா ? நான் என்ன, அப்படிப்பட்ட பாவி ! நான் வேணுமென்று செய்தேன். நண்பர்கள் என்று சொல்லிக்கொண்ட பேர்வழிகள் பேச்

சைக் கேட்டுக்கொண்டு மோசம் போனேன். ஈசா, என்னை இனி விட்டு விடலாகாதா ?

கச்சேரிக்குத் தீவைத்த பிறகு நான் பட்ட கஷ்டங்கள் என்னென்ன? ஒரு மனிதனுக்கு அத்தனைத் தண்டனைகள் போதாதா? இனிமேலும் என்ன வேண்டும்? காவல்காரர்களுக்குப் பயந்து பல இடங்களுக்கு மாறுவேடம் பூண்டு அலைந்தேன். அதனை நினைக்கவும் வெட்கமாக இருக்கிறது. பொய் சொல்லத் தெரியாத நான் பல பொய் சொன்னேன். பெண் வேஷம், பிச்சைக்கார வேஷம், துலுக்க வேஷம் இவை எல்லாம் போட்டேன். ஊர் ஊராய்ப் பிச்சை எடுத்துத் தின்றேன். காவல் சேவகனைக் கண்டால் பிசாசு என்று எண்ணி வெறுத்தேன். பல பொய் சொல்லித் தப்பினேன். ஊரில் அகப்பட்ட குற்றவாளிகள் அடைந்த தண்டனைகளைக் கேட்டுப் பயந்து போனேன். அதிகாரிகள் கையில் சிக்குவதைக் காட்டிலும் தப்பித்துக் கொள்வது நன்று என்று மறைந்து திரிந்தேன். என்னோடுகூட இருந்து தீவைத்த ஒரு நண்பனைக் காவலாளிகள் கைது செய்யும்போது சுட்டனர் என்று கேள்விப்பட்டேன். உடனே வந்தது பீதி. என்னைப் பிடித்துக் கொடுத்தால் இனும் கிடைக்கும் என்று தண்டோராவும் போட்டார்கள். நீயும் குழந்தையும் கஷ்டப்படுவதை அறிந்தேன். அதிகாரிகள் என்னைக் காட்டும்படி உங்களை வருத்தினதாகக் கேள்விப்பட்டேன். என் மனம் பொறுக்கவில்லை. என் குற்றத்திற்கு நீங்கள் ஏன் வருந்த வேண்டும். அதுகேட்ட அன்றிரவே வீட்டிற்கு வந்தேன். அதிகாரிகள் என்னைக் கைது செய்துவிட்டார்கள். அப்போது நீயும் குழந்தையும் அடைந்த பீதியும் கதறின அழுகையும் என் நெஞ்சைப் பிளந்துவிட்டன. என்ன செய்வேன் பாவி ! என்னை உந்திக்கொண்டு சென்றார்கள். என்னைப் படாதபாடு படுத்தினார்கள். அடி முதலியவை

களுக்கு அஞ்சேன். பொறுத்துக் கொண்டுதான் இருந்தேன். அன்று இரவு நீங்கள் பட்ட துக்கம் இப்போதும் படுகிறீர்கள் என்று நான் மனோபீதி அடைகிறேன். என்ன கஷ்டம்.

குழந்தையை நன்ருகப் பார்த்துக் கொள்ளு. ஈசனை வேண்டிக் கொள்ளு. திருப்பதிக்கும் பழனிக்கும் வேண்டுதலை ஏற்றுக் கொள்ளு. ஈசா, என் குழந்தையை காப்பாயாக.

அன்பன்
பொன்னன்

(4)

மயிலூர் சிறை
9—10—43

சின்னம்மாளுக்கு எழுதியது. ஆசீர்வாதம். குழந்தைக்குச் சுரம் இன்னமும் குறையவில்லை என்று எழுதுகிருய். இனி எனக்குப் பயித்தியம்தான் பிடித்துவிடும். நேற்று ஒரு யோசனை தோன்றிற்று. என்னை ஒரு வாரத்திற்கு விடுதலை செய்யும்படி காரணம் கண்டு எழுதி யிருக்கிறேன். சில அரசியல் வாதிகளுக்கு அவ்வித அனுமதி கிடைத்திருக்கிறது. ஒருவேளை எனக்கும் கிடைக்கலாம். நானும் அரசியல் வாதிதானே. எனக்காக என்ன செய்துவிட்டேன். நல்லகாலம் பிறந்தால் எனக்கு விடுதலை கிடைக்கும். தகுந்த உத்தரவாதமும் கொடுப்பதாகச் சொல்லி யிருக்கிறேன். குழந்தையைப் பார்க்க வேண்டும் என்று மிகவும் ஆவல் கொண்டிருக்கிறேன்.

என்ன வேண்டுதலை வேண்டியும் குழந்தையின் சுரம் இறங்க வில்லை என்கிருய். குழந்தையின் சாதகத்தை அடுத்த ஊர் கந்தசாமி ஜோசியனுக்குக் காட்டி வேளை எவ்

விதம் இருக்கிறதென்று தெரிந்துகொள். சாந்தி செய்யும் பட்சத்தில் அதனையும் செய்யலாமே. ஒருவேளை காலம் பொல்லாததாக இருக்கலாம். அதனை நிவர்த்தித்துக் கொள்வதில் தோஷம் நீங்கும். ஜோஸ்யத்தில் நம்பிக்கை இல்லாதவன் நான் என்று நீ அறிவாய். ஆனால் என் மனம் மாறி விட்டது. எதையும் நம்பத் தயாராகிவிட்டேன். குழந்தைக்கு நன்றாகி விட்டால் போதும்.

என்னைக் கைது செய்ததும் எத்தனை அவமானம் செய்து விட்டார்கள். அதை எண்ண எண்ண என் மனம் எரிகிறது. என்னை அடித்தார்கள். பரவாயில்லை. அதிகாரிகளிடம் என் உளவு சொன்னவன் என்னை இக்குற்றம் செய்யத் தூண்டியவனே. உலகில் இதைவிட விசுவாச காதகம் என்ன வேண்டும்? என்னாலேதான் அதிகாரிகள் கிராமத்திற்குத் தண்டத்தீர்வை இட்டார்கள் என்று அவனே ஊரில் கட்டி விட்டான். என்னை வைத்துக் கொண்டே என் வீட்டை எரித்தார்கள். அப்போது நம் வீடு, சாமான் இவைகள் புகையாயும் சாம்பலாகவும் போக என் மனம் எவ்வாறு துடித்தது. நீ எவ்வாறு கோபமும் விசனமும் பட்டாய்? உங்களை நடுத்தெருவில் விட்டுவிட்டுச் செல்லுகிறேன் என்று நான் பட்ட துயரத்திற்கு அளவில்லை. வீடு போனது நட்டமல்ல. நான் எரித்த கச்சேரி போச்சே. அதில் எவ்வளவு பேருடைய பணமும் தஸ்தாவேஜூம் போயிற்றே? இப்போது நினைக்க நினைக்க என் கொடுமை எனக்கே விளங்கவில்லை.

மறுபடியும் ஊரார் என்னை நிந்தித்துக் கீழ்அதிகாரிகள் எதிரே என்னைக் கழுதைமேல் ஏற்றி அவமதித்தார்கள். பிராணன் அப்போதே போகவில்லை என்று பரிதவித்தேன். பிறகு விசாரணை நடந்தது. என் நண்பர்களே எனக்கு எதிரிடையாகச் சாட்சி கூறினார்கள். ஏழு வருஷமும்

கிடைத்தது. அதில் அவமானமும் இல்லை. விசுவாச காதகர்கள் பேச்சை நம்பின ஒரு பதர் நான் என்பதை நினைக்கத்தான் எனக்கு மிகுந்த அவமானம் உண்டாகிறது.

சிறைக்குச் சென்ற நான் உன் முகத்தையும் குழந்தை முகத்தையும் பார்க்கவும் வெட்கினேன். உங்களைத் தெரு வில் விட்டுவிட்டு யாதொரு பாதுகாப்பும் ஆதாரவும் செய்ய வில்லை என்று பரிதவித்தேன். அதன் பலனை இன்று அனு பவிக்கிறேன். குழந்தைக்குக் காய்ச்சல் என்று எண்ணவே என் நெஞ்சு பதருகிறது. எல்லாவற்றிற்கும் நானே ஜவாப் தாரி என்று ஈசன் முன் ஏற்றுக் கொள்ளுகிறேன்.

குழந்தையைச் சாக்கிரதையாகப் பார்த்துக் கொள். அதிகாரிகள் உத்திரவு வந்ததும் ஓட்டமாக ஓடி வரு கிறேன்.

அன்பன்
பொன்னன்

(5)

மயிலூர் சிறை
11—10—43

அன்புள்ள அருமைச் சின்னம்மாளுக்கு எழுதியது. ஆசீர்வாதம். உன் கடிதம் கிடைத்தது. சிறிது மகிழ்ச்சி ஏற்பட்டது. நான் அங்கே வருவதாகக் குழந்தை கேள் விப்பட்டது சிறிது ஆறுதல் அடைந்தாள் என்றும் உடனே சுரம் சிறிது குறைந்திருக்கிறது என்றும் எழுதியிருக்கிறாய். அந்தச் செய்தி கேட்டதும் என் மனம் ஒருவாறு ஆறுதல் அடைந்தது. கூடிய சீக்கிரத்தில் குழந்தை நோய் நீங்கிச் சௌக்கியம் அடையும் என்று நம்புகிறேன்.

ஆனால் 'தானொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக் கும்' என்ற உலக வழக்கு உண்மையாகிவிட்டது. என்னை

விடுதலை செய்யும்படி கேட்டுக் கொண்ட மனுவை அதி காரிகள் தள்ளிவிட்டார்கள். நான் அரசியல்வாதக் குற்ற வாளி அல்லவென்றும் (கிரிமினல்) குற்றச் சட்டப்படி தீவைத்த குற்றம் செய்தவனென்றும் தற்காலீகமான விடு தலைகள் அரசியல்வாதிகளுக்கே கொடுக்கப்படும் என்றும் எனக்குக் கொடுக்க முடியாதென்றும் சொல்லி உத்தரவு அனுப்பிவிட்டார்கள். ஆகவே, என் கோரிக்கை மறுதலிக்கப் பட்டது. நான் குழந்தையைப் பார்க்க வரமுடியாது என்று எழுதவும் அஞ்சுகிறேன். இச்சொல்லைக் குழந்தை கேட் டால் அவள் நிலைமை என்ன ஆகுமோ அறியேன்! இந்தச் சமயத்தில் உண்மை கூறுவது சரியன்று. குழந்தைக்கு ஆறு தல் சொல்லி நல்ல வைத்தியரைக்கொண்டு சிகிச்சை செய்.

உனக்கும் குழந்தைக்கும் வருகிற கஷ்டங்கள் எல்லாம் என்னுலே என நான் நன்ருக அறிவேன். உலகத்தில் உனக்காக என்ன சுகம்தான் தேடி வைத்திருக்கிறேன் உன்னை மணந்த காலத்தில் செல்வத்தோடும் செல்வாக் கோடும் இருந்தேன். நீயும் செல்வவந்தனின் புதல்வி. என் நிலையை அறிந்தே உன்னை எனக்குத் தந்தார்கள். அந்தப் பொறுப்பை நான் நிறைவேற்றவில்லை. எனக்கும் படிப்பு உண்டு. நீயும் படித்தவள். ஒரு படித்த பெண்ணை எவ் விதம் நடத்தவேண்டும் என்று நான் அறிந்தும் என்ன கழற்றிவிட்டேன்? என் நடவடிக்கையினுல் செல்வம் எல் லாம் இழந்து ஏழையாகிக் கடனாளியாகி உன்னையும் தெரு வுக்கு இழுத்துவிட்டேன். நீ அனுதையாகக் கூலிவேலை செய்து பிழைக்கும்படி ஆக்கிவிட்டேன். ஒரு சிறு குழந் தையையும் காய்ச்சல் வந்த காலத்தில் கவனிக்க முடியாத, கண்ணிலும் காண இயலாத, நிலையில் இருக்கிறேன். அவள் “அப்பா” என்று அழைத்தால் “என்ன வேண்டும் அம்மா” என்று கேட்கவும் என் வாய் அங்கே யில்லை. இதற்கு

எல்லாம் நானே காரணம். நீ என்னை மன்னிக்கவும் காரணம் உண்டோ என்று எண்ணுகிறேன். இனி எப்போதாவது சிறை விட்டு வெளியே வந்தால் நீயும் குழந்தையும் அப்போது உயிருடன் இருந்தால் அப்போது நேரில் வந்து மன்னிப்பைக் கேட்டுக்கொள்ளுகிறேன். எல்லாம் தெய்வச் செயல்.

குழந்தையை நன்ருகக் கவனி. உடனே குழந்தையின் நலத்தைப்பற்றி எழுது.

அன்பன்
பொன்னன்

(6)

மயிலூர் சிறை
15—10—43

அன்புள்ள சின்னம்மாளுக்கு அபாக்கியன் எழுதியது. நான்கு நாளாக உன் கடிதம் இல்லை. பரிதபித்துக் கொண்டு இருந்தேன். பைத்தியம்பிடித்ததுபோல் இருந்தது.

* * *

தற்செயலாக இன்று ஒரு கார்டு கிடைத்தது. நான்கு மூலைகளிலும் மை தடவி இருந்தது. நடுக்கத்துடன் படித்தேன்.

* * *

ஆ, என் அருமைக் கண்மணி, உயிர் துறந்தாளா? சிவபதம் அடைந்தாளா? ஏன் என்னையும் அழைத்துக் கொண்டு செல்லவில்லை.

* * *

எனக்கு விடுதலை கிடைக்கவில்லை என்று நீ சொல்லி விட்டாயோ? அந்தத் துக்கத்தில் சுரம் அதிகமாகி அவள் பரமபதம் அடைந்திருக்க வேண்டும்.

* * *

நீ என்ன நிலையில் இருக்கிறாயோ, அறியேன். நீ கடிதம் எழுதாததினால் நீயும் இறந்துவிட்டாயோ என்னமோ ?

* * *

ஒரு புண்ணிய புருஷன் இந்த அபாக்கியமான சாவைப் பற்றி எழுதியிருக்கிறான். ஆனால் உண்மைச் செய்திகள் ஒன்றும் விவரமாக எழுதவில்லை. பாவம் அவர்தான் என்ன அறிவார்! என் மனோநிலை அவருக்கு என்ன தெரியும் ?

* * *

என்னைப்போல் அபாக்கியசாலி உலகத்தில் வேறொருவர் உண்டா ? ஈசா என்னையேன் அழைத்துக்கொள்ளக் கூடாது ?

* * *

என் அருமைக் குழந்தை எவ்வாறு உலகை நீத்தாள் என்று எனக்குச் சொல்ல யார் இருக்கிறார்கள் ? என் மனைவியின் நிலையைத்தான் யார் சொல்ல இருக்கிறார்கள் ?

* * *

இந்த நிலைமையில் நானும் எத்தனை நாள் பிழைக்கப் போகிறேன் ?

* * *

ஈசன் என்னை ஏன் படைத்தான்; ஈசன் ஏன் படைத்தான் ? வேறு வேலை அவனுக்கு இல்லையா ?

* * *

குழந்தை ஒரு குழந்தை ஒ, ஒ, ஒ, குழந்தை ...
... ...
... ...

(இக்கடிதம் அனுப்பப்படவில்லை)

---

7. என்ன உலகம் இது ?

"நீலம், இப்படியே தினந்தோறும் நீ விசனப்பட்டுக் கொண்டிருந்தால் உன் உடம்பு என்ன ஆகும் ?"

"நான் என்ன செய்யட்டும். பெற்றோர்களைப் பறி கொடுத்த பெரும்பாவியாக இருக்கிறேன். அத்துயரம் என்னை விட்டு எப்படிப்போகும் ?"

"சரி, அவ்விதம் விசனப்பட்டுக்கொண்டிருந்தால் அவர்கள் திரும்பி வருவார்களா ? இப்போதோ நாள் ஆகி விட்டது. அவர்கள் செய்ய நினைத்ததை நாம் நிறைவேற்றிக் கொள்ளவேண்டாமா ?"

"என்னமோ, அவர்கள் எண்ணினதை முடிக்கவேண்டு மென்பதுதான் என் கருத்தும். ஒரு நாள்பார்த்து வையும். நெல்லூருக்குப்போய் வேணுகோபாலசுவாமி ஆலயத்தில் நமக்கேற்றபடி சுலபமாக நடத்திக்கொள்ளலாம்."

"சரி அப்படியே செய்கிறேன்."

இவ்வாறு ஒரு பெண்பிள்ளையும் ஓர் ஆண்மகனும் ஒரு சிறு குடிசையிலே பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த இடம் கூடூருக்கு அடுத்த சைதாபுரத்தில் ஒரு பெரிய காக் காய்ப்பொன் சுரங்கச்சாலையில் கட்டியிருந்த குடிசைகளில் ஒன்று. இவ்விருவரும் இளமை முதல் கொண்டே நேசித்து வந்தவர்கள். ஏழையான கூலிக்குடும்பத்தினர்கள். நீலம் மாள் ஏழையானாலும் அழகும் குணமும் பொருந்தியவள். இராமனோ அவைகளில் குறைந்தவனல்லன். நீலம்மாளின் பெற்றோர்கள் கூடூரில் காக்காய்ப்பொன் சாலையில் வேலை செய்து வந்தார்கள். நீலம்மாளை இராமனுக்குப் திருமணம் செய்வதாக எண்ணியிருந்தார்கள். சிறிது பணம் கைக்கு வந்தவுடன் மணம் நடத்தலாம் என்று இருந்தார்கள். ஆனால் நீலம்மாளின் அழகைக் கண்டு கண்ணன் என்ற மற்றொரு

வேலையாள் காதலித்து வந்தான். நீலம்மாளுக்கு அவனைக் கண்டால் பிடிக்காது. என்றாலும் அவளிடமிருந்த காதலை விட்டவனல்ல. எப்படியாவது நீலம்மாளுக்கும் இராமனுக்கும் பேதத்தைக் கற்பித்து அவனை விலக்கி, தான் நீலம்மாளை மணம் செய்து கொள்ளவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தான். அதை நிறைவேற்றத் தகாத காரியங்களையும் செய்யத் துணிந்திருந்தான். அவனாலேயே நீலம்மாளும் அவள் பெற்றோரும் படாதபாடு பட்டுக் கூடூரிலிருந்து சைதாபுரம் வரவேண்டி வந்தது.

"நீலம், நீ சொன்னபடி செய்யலாம். இனிமேல் விசனத்தை விட்டுவிடுவதாக எனக்கு வாக்குக் கொடு."

"எவ்விதமாய் நான் மறப்பது? கூடூர் நல்ல இடம். அங்கே சுகமாக என் பெற்றோரிடம் இருந்தேன். நீயும் அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தாய். அந்தக் கண்ணன் ஒரு சனியன்போல் வந்து சேர்ந்தான். வரவேண்டாம் என்று எவ்வளவு சொல்லியும் எங்களை விடாமல் தீங்கு செய்யத் தொடங்கினான்."

"ஆமாம். நீ சொன்னது சரிதான். நான் விசாரித்த மட்டில் முதலாளிகளுக்குச் சொல்லி உன் பெற்றோர்களை இந்த அசௌக்கியமான சைதாபுரத்திற்கு அனுப்பி வைத்தது அவனென்றுதான் தெரிகிறது."

"அதை நான் முதலில் நம்பவில்லை. இப்போது உண்மை என்று தெரிகிறது. அவன் எண்ணம் அத்தனை கெட்டதா?"

"ஆமாம். இந்த நோயுள்ள இடத்திற்கு வந்தால் என்னை வரவொட்டாமல் செய்யலாம் என்பது அவன் கருத்து."

"ஆனால் கடவுளும் அவனுக்கு அனுகூலமாய் இருக்கிறாரே! "பட்ட காலிலே படும் கெட்டகுடியே கெடும்"

என்றபடி என் பெற்ருேர்கள் விஷசுர வாயில்பட்டுப் பரம பதம் அடைந்தார்கள். என்னை ஒண்டியாய் விட்டுச் சென்ருர்கள். அவர்களிருந்தபோதே திருமணம் ஆகியிருந்தால் நன்ருய் இருக்கும். இனி உன்னைத் தவிர எனக்கு யார் இருக்கிருர்கள் ?''

"இதை எல்லாம் நானும் எண்ணித்தான் கூடூரிலிருந்து சைதாபுரத்திற்கு என் வேலையை மாற்றிக்கொண்டேன். இனி, நீ சொன்னபடி சீக்கிரம் நிறைவேற்றிக்கொள்ளலாம்.''

என்று இவ்விருவரும் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் வெளியில் யாரோ ஓர் ஆள் உற்றுக் கேட்டுவிட்டு நகர்ந்ததுபோல் தோன்றிற்று. இராமன் தலை நிமிர்ந்து பார்த்தான். கண்ணனைப் போன்ற ஓர் உருவம் சிறிது தூரத்தில் மறைந்தது. இராமன் நெஞ்சில் சுருக்கென்று பட்டது. தைரியசாலி ஆகையால் சமாளித்துக்கொண்டு நீலம்மாளிடம் விடைபெற்றுத் தன் குடிசை சேர்ந்தான்.

(2)

கூடூருக்குப் பத்துமைல் தூரத்தில் சைதாபுரம் என்ற ஒரு சிறு ஊர் இருக்கின்றது. அதற்கு அடுத்து ஒரு பெரிய ஏரி இருக்கின்றது. அவ்வேரிக்கு மேற்கே சிறு மலைத் தொடர்கள் இருக்கின்றன. அம்மலையில் இருந்து வருகிற மழைத்தண்ணீர் அவ்வேரியில் நிரம்பி அடியிலுள்ள நிலங்களுக்குப் பாய்கிறது. ஏரியும் மலையும் அடுத்துள்ளதால் இவ்வூரில் மலைச்சுரம் அதிகம். நல்ல இடமாகிய கூடூரிலிருந்து இவ்விடத்திற்கு மாற்றப்பட்ட பெற்ருேர்கள் பரமபத மடைய, பாவம், நீலம்மாள் அனுதை ஆனுள். இதற்குக் காரணம் கண்ணனுயிருந்தும் அவனுக்குத் தீங்கிழைக்க நீலம்மாள் எண்ணவேயில்லை. ஆனுல் கண்ணனே

இயற்கையிலேயே கெட்ட சுபாவம் உடையவன். தன் காரியத்திற்கு என்ன வேண்டுமானாலும் செய்வான்.

மேலே சொன்ன பேச்சுவார்த்தைக்குப் பின் சில நாட்களுக்குள் காக்காய்ப்பொன் வேலையாட்களில் ஒரு பெருத்த கலகம் ஏற்பட்டது. முதலாளிகளுக்கு விரோதமாக வேலையாட்கள் வேலைநிறுத்தம், ஒத்துழையாமை முதலியவை செய்தார்கள். அக்கலகத்திற்கு அடிப்படையாக இருந்தவர்கள் நான்கைந்து பேர். இக்கலகத்தின் காரணமாகப் போலீசார் வந்து குண்டுப்பிரயோகம் செய்தார்கள். பல பேர் இறந்தார்கள். கலகம் அடக்கப்பட்டது. குற்றவாளிகளின்மீது விசாரணை தொடங்கிற்று. பின்னுலிருந்து வேலை செய்த கலகக்காரர்களில் கண்ணனும் ஒருவன். ஆனால் அவனே இரகசியமாகப் போலீசாருக்கு உளவு சொல்லி வந்தான். ஆகவே அதிகாரிகள் அவனுக்கு மன்னிப்புத் தந்து சர்க்கார் சாட்சியாக எடுத்துக்கொண்டனர்.

இதுதான் சமயம் என்றும் தன் கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்றும் எண்ணி, கண்ணன் அதிகாரிகளிடம் யாதொரு பாவமும் அறியாத இராமனைக் குற்றவாளிகளில் ஒருவனாகச் சேர்க்கச் செய்துவிட்டான். இராமனைக் கைது செய்ய உத்திரவும் ஆகிவிட்டது. இச்சூழ்ச்சி இராமனுக்குத் தெரியாது.

ஒருநாள் மாலை இருளும்சமயம் நீலம்மாள் குடிசைக்குள் சமையல் செய்துகொண்டிருந்தாள். வேலை செய்துவிட்டுத் தன் குடிசைக்குப் போகும் வழியில் இராமன் நீலம்மாளைக் கண்டுவிட்டுப் போகலாம் என்று வந்தான். அவளைப் பார்த்து, "நீலம், நான் பஞ்சாங்கக்காரனைக் கேட்டிருக்கிறேன். அடுத்த மாதத்தில் ஒருநாள் குறித்துக் கொடுத்திருக்கிறான். நாம் ரஜா எடுத்துக்கொண்டுபோய்

வேணுகோபாலசுவாமி ஆலயத்தில் திருமணம் முடித்துக் கொள்ளலாம் " என்ருன்.

" சரி, எனக்குச் சம்மதந்தான். அதிகச் செலவில்லாமல் காரியத்தை முடித்துக்கொள்வோம். என் தாய் தகப்பன்மார்களின் ஆத்மாக்களும் சாந்தமடையும் " என்று சொன்னுள்.

இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் யாரோ சில பேர்கள் தடபுடலாக வரும் சப்தம் கேட்டது. குடிசையின் கதவைப் பலமாக அடிக்கும் ஓசை கேட்டது. 'இது என்ன விபரீதம்' என்று எண்ணி இராமன் கதவைத் திறந்தான். உடனே இரண்டு போலீஸ்காரர்கள் இராமனைப் பிடித்துக் கைக்கு விலங்கிட்டார்கள். இராமன் திடுக்கிட்டுப் போஞன். 'இதென்ன' என்று கேட்டு வெளியே கழுத்தை நீட்டிப் பார்த்தான். கண்ணன் ஓடி மறைந்ததைக் கண்டான். இராமன் நெஞ்சிலே பெரிய புயல்காற்று எழும்பிற்று. ஒரு விநாடியில் போலீஸ்காரர்கள் அவனை இழுத்துச் சென்ருர்கள்.

நீலம்மாளுக்கோ என்ன நடக்கிறதென்று புரியவில்லை. ஒரு பாவமும் அறியாத இராமனை ஏன் கைது செய்தார்கள் என்று அவளுக்குப் புரியவில்லை. விவரம் என்னவென்று கேட்பதற்கும் வாய் எழும்பவில்லை. மனம் சோர்ந்து நிலத்தின்மேல் விழுந்தாள். எத்தனை நேரம் விழுந்து கிடந்தாளோ அவளுக்குத் தெரியாது. கண்விழித்துப் பார்த்தாள். பல பெண்கள் கூடியிருந்தார்கள். அவள் முகத்தில் தண்ணீர் தெளித்திருந்தார்கள். அடுத்த வீட்டுச் சுப்பம்மாள் அவளைத் தேற்றினுள். அவள் வாயிலிருந்து நடந்த விஷயத்தை ஒருவாறு அறிந்தாள். வேலை நிறுத்தம் செய்த கலகத்தில் சதி செய்ததாக இராமன் குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டு இருக்கிருன் என்று அறிந்தாள்.

நிரபராதி என்று அவளுக்குத் தெரியும். தன் திருமணத் திற்காகச் சேமித்து வைத்திருந்த ஒரு சிறு தொகையை அவனை மீட்பதற்காகச் செலவு செய்யவும் துணிந்தாள். ஆனால் போலிசாருக்கு எதிரில் இவளுடைய சிறு தொகை என்ன செய்யமுடியும் ?

கூடூர் சப் மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலும் நெல்லூர் கோர்ட்டிலும் விசாரணை நடந்தது. சர்க்கார் பக்கத்தில் கண்ணன் முக்கியமான சாட்சி. இறுதியில் இராமன் ஐந்து வருட தண்டனை பெற்றான். நீலம்மாளுக்கோ என்ன செய்வதென்று தோன்றவில்லை. கடவுளும் இத்தனைக் கடும் சோதனை செய்வாரா என்று நினைத்தாள். இந்த ஜன்மத் தில் யாதொரு தீங்கும் கிடையாது. சென்ற பிறப்பின் பயனோ என்று எண்ணி அழுதாள்.

(3)

மேலே சொன்ன செய்தி நடந்து மூன்றரை வருடம் ஆயிற்று. ஒருநாள் மாலையில் நீலம்மாள் தன் குடிசையில் ஒரு சிறு குழந்தையைக் கையில் வைத்துக்கொண்டு முத்த மிட்டுக் கொஞ்சிக் கொண்டிருந்தாள். எதிரே கதவண்டை கண்ணன் நின்றுகொண்டு ஏதோ பேசிக்கொண்டு இருந் தான். அப்போது இருளும் சமயமாயிருந்தது. தூரத்தி லிருந்து ஓர் ஆள் மெல்லிய தேகத்துடன் சோர்வடைந்த முகத்துடன் அக்குடிசையை நோக்கி வந்துகொண்டிருந் தான். குடிசைக்கு அருகில் வந்ததும் கண்ணன் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். வீட்டிற்குள்ளே நீலம் மாள் ஒரு கைக்குழந்தையோடு கொஞ்சிக் கொண்டிருந் ததையும் பார்த்தான். உடனே ஆற்றொணாத் துயரமும் அடங்காக் கோபமும் அடைந்தான். என்ன பேசினார்கள் என்று கவனிக்கவும் அவனுக்குத் தோன்றவில்லை. அவன்

நெஞ்சோ பெரும் புயல்காற்றில் அலைந்து புரண்டது. ஒரு கணமும் அங்கே நிற்காமல் அச்சுரங்கக் குடிசைகளைவிட்டு வெறி பிடித்தவன்போல் வந்த வழியே ஓடினான். அவன் யார் என்று சொல்லவேண்டியதில்லை. ஐந்து வருடம் சிறைத் தண்டனை பெற்ற இராமன் நல்லொழுக்கத்தில் மூன்றரை வருடத்திலேயே விடுதலையாகி தன் முதல் காரியமாக நீலம் மாளைக் காணவேண்டுமென்று ஓடிவந்தான். அப்படிப்பட் டவனுக்கு இக்குடிசையில் கண்ட காட்சி ஒரு கொடிய விபரீதக் காட்சியாக இருக்காதோ!

தான் சிறை சென்ற பிறகு கண்ணன் நீலம்மாளைச் சரிப்படுத்திக்கொண்டு மணம் புரிந்து ஒரு குழந்தையும் பெற்றிருக்க வேண்டுமென் றெண்ணினான். தன் கண்முன் கண்ட காட்சி பொய் ஆகுமா? மெய்க்காதல் கொண்ட ஒரு கற்புள்ள பெண் இவ்விதம் ஒரு பரபுருடனை மணம் செய்து கொள்வாளா? போதாக் குறைக்கு ஒரு குழந்தையும் பிறந்துவிட்டது. இனி உலகத்தில் நான் இருந்து என்ன பயன் என்று எண்ணிக்கொண்டு ஓடினான். நீலம்மாள் விளையாடின குழந்தை அடுத்தவீட்டுக் குழந்தையாக இருக் கும் என்று அவன் எப்படி அறிவான்? அதனை விசாரிக்க வும் அவன் மனம் இடந்தருமா?

காக்காய்ப் பொன் சுரங்கங்களை எல்லாம் தாண்டி சைதாபுரத்துக் குளத்து வழியாய் ஓடினான். கல் முள் காலில் படுவதையும்கூடப் பொருட்படுத்தாது ஓடினான். காலில் முள் தைத்தும் கல்லிடித்துக் காயமானதும் இரத்தம் ஒழுகினதும் துணி கிழிந்ததும் அவனுக்குத் தெரியவில்லை. ஏரிக்கரையை அடைந்தான். இனி பிழைத்திருப்பதில் பய னில்லை. ஏரியில் விழுந்து விடுவோம் என்று எண்ணி விழப் போனான். ஆனால் விழவில்லை. மற்றொரு யோசனை தோன் றிற்று. காதல் என்று சொல்லி ஏமாற்றின அப்பெண்ணின்

மீது பழிவாங்க வேண்டாமா என்ற ஒரு கொடூர எண்ணம் அவன் மனதில் உதித்தது. உடனே ஏரிக்கரையில் ஒரு பாறையின்மீது உட்கார்ந்து யோசிக்கலானான். அவ்விரவு முழுதும் வெறிபிடித்தவன்போல் யோசித்துக்கொண்டே இருந்தான்.

இராமனுக்குச் சூரியன் உதித்ததும் தெரியவில்லை. வெயில் அடிக்க ஆரம்பித்ததும் தெரியவில்லை. சுமார் ஒன்பது மணியிருக்கும், கனாக் கண்டவன்போல் எழுந்தான். ஆவேசம் வந்தவன்போல் ஓடினான். "அப்படியே செய்வேன், அப்படியே செய்வேன், பழி வாங்குவேன், பழி வாங்குவேன்" என்று உச்சரித்துக்கொண்டு ஓடினான்.

(4)

சைதாபுரத்துக் குன்றுகள் இருநூறு அல்லது முந்நூறு அடி உயர்ந்திருக்கும். பாறைகள் கரடு முரடாக இருப்பன. காக்காய்ப் பொன் சுரங்கக்காரர்கள் பாறைகளைத் தோண்டி வெடிமருந்தைப் பிரயோகித்துக் காக்காய்ப் பொன்னை எடுப்பார்கள். அதற்காகப் பலநூறு அடிகள் வரை பூமிக்குள் சுரங்கம் சென்றுகொண்டே இருக்கும். தகர்த்து எடுத்த பொன்பாறைகளை இரும்பு வண்டி வழியாக நிலமட்டத்திற்கு இழுப்பார்கள். அங்கே பல வேலையாட்கள் சிறு கத்திகளாலும் கத்தரிகளாலும் வட்ட வட்டமாகச் செதுக்குவார்கள். இவ்வேலையில் பல நூறு பெண்கள் அமர்ந்திருந்தார்கள். இதில் பெண்களுக்கு நல்ல கூலி கிடைக்கும். முதலாளிகளுக்கும் பெருத்த இலாபம் உண்டு. இச்சுரங்க வேலையில் ஈடுபட்டு இருந்தவள் நீலம்மாள்.

அன்று காலை ஒரு பாறையின் அடியில் உட்கார்ந்து கொண்டு காக்காய்ப் பொன்னைப் பக்குவமாகச் சீவிக்கொண்டிருந்தாள் நீலம்மாள். வெறிபிடித்தவன்போல் ஓடிவந்த

இராமன் அவளைக் கண்டான். உடனே மறைந்துகொண்டு பின்னாலே இருக்கும் பெரிய பாறைகளின்மீது தாவித் தாவி ஏறினான். அதன் உச்சியில் நின்று ஒரு பெருங்கல்லை மேலிருந்து உருட்டிவிட்டான். அது வெகு விரைவோடு உருண்டு வந்து பாவம் நீலம்மாள் மீது விழுந்தது. அவள் கதி என்னவாயிற்றென்று சொல்ல வேண்டுவதில்லை. இது எல்லாம் ஒரு நொடியில் நடந்தது.

(5)

ஆனால் இக்காட்சியைக் கண்ணன் தூரத்திலிருந்து பார்த்தான். இக்கொடிய செயலைத் தடுப்பதற்கும் இயலாதல்லவா! ஆனால் அவன் மனதில் எழுந்தது ஆவேசம். அவளோ மெய்க்காதல் கொண்டவள். தன் சாகசம் முழுவதும் அவளிடம் பலிக்கவில்லை. அப்படியிருந்தும் இக்கொடியவன் தன் உண்மைக்காதலியைக் கொன்றானல்லவா என்றெண்ணினான். இராமனிடம் எத்தனைக் கொடிய எண்ணம் எண்ணினாலும் நீலம்மாளிடம் உண்மைக் காதல் கண்ணனுக்கு உண்டு. அவளோ நம்பிக்கைத் துரோகம் செய்யவில்லை என்று அவன் அறிவான். அநியாயமாக ஒரு கற்புக்கரசியைக் கொன்றவனை விடக்கூடாது என்று உடனே மலைமீது பாய்ந்தான். ஒரு விநாடியில் உச்சியை அடைந்தான். அங்கே வெறிகொண்ட இராமனைப் பார்த்தான். இராமனும் கண்ணன் வருவதைப் பார்த்தான். எல்லாக் கொடுமைகளுக்கும் அவன்தான் காரணம் என்று எண்ணினவன் உடனே பழிக்குப் பழிவாங்க எண்ணினான். இருவரும் முரட்டுத்தனமாக ஒருவரோடொருவர் போராடினார்கள். யுத்தம் பிரமாதமாக நடந்தது. ஒருவரை ஒருவர் மோத ஒருவரும் பின்வாங்கவில்லை. ஆனால் பாறையில் எத்தனை நேரம் யுத்தம் செய்யமுடியும். வெறிபிடித்த காட்டெருமை

கள் போல் மல்யுத்தம் நடந்தது. இருவரும் அடித்துக் கொண்டு அப்பாறையிலிருந்து செங்குத்தாய் விழுந்தார்கள். அவர்கள் கதி என்ன ஆயிற்று என்று சொல்லவேண்டிய தில்லே. இக்காட்சியைக் கண்ட சுரங்கத்து ஆட்கள் பிர மித்துப் போனுர்கள்.

உலக இயற்கையை என்னென்று சொல்வது ? மெய்க் காதலும் பொய்க் காதலாகக் காமத்தின்வாய்ப் பொருமைப் பட்டார்களுக்குத் தோன்றுவது உண்மையா ?

“ கொலேயஞ்சார் பொய்ந்நாணுர் மானமும் ஓம்பார்
களவொன்ருே ஏனேயும் செய்வார்—பழியொடூஉ
பாவம் இஃதெண்ணுர் மற்றுமென்செய்யார்
காமம் கதுவப் பட்டார். ”

—

8. திருப்தி செய்ய முடிந்ததா ?

ஜானகி ஓர் ஏழைக் குடும்பத்தில் உதித்தவள். படிப்பும் அதிகம் இல்லை. ஆனால் அழகாக இருப்பாள். தகப்பனார் அவளுக்கு 30 ரூபாய் பொருமான ஒரு வெள்ளைக் கல் தோடுமட்டும் தந்திருந்தார். அதை வெகு ஜாக்கிரதையாகத் துடைத்து காதில் மாட்டிக்கொண்டு இருப்பாள். கணவனுக்கோ ஓர் ஆபீசில் 50 ரூபாய் சம்பளம். எத்தனை சிக்கனமாகச் செலவு செய்தபோதிலும் ஒரு தம்பிடியும் மிச்சம் ஆவதில்லை. ஆகவே புதுநகை வாங்குவதற்கு என்ன செய்வது ? இத்தனைதான் நமது பாக்கியம் என்று சொல்லி வாழ்க்கை நடத்தி வந்தான். அவனுக்கோ பெற்றோர் வைத்துவிட்டுச் சென்ற சொத்து ஒன்றும் இல்லை. தன் மனைவி பேரில் மிகுந்த அன்பு. அவளுக்கு நகை ஏதாவது செய்து மாட்டவேண்டும் என்பது அவனது ஆசை. ஆனால் முடியவில்லை. ஒரு நாளாவது அந்த எண்ணத்தைப் பூர்த்தி செய்ய முடியுமா என்று அடிக்கடி சிந்திப்பான். ஆனால் யாதொரு வழியும் தோன்றாது சும்மா இருந்து விடுவான்.

ஜானகிக்கோ, ஒரு பெண்ணுக்கு ஒரு வெள்ளைத்தோடு இருந்தால் போதுமா, தன்னோடு வாசித்த கமலம் வைரத் தோடு போட்டிருக்கிறாளே. தனக்கு அவ்வாறு ஒன்று கிடைக்கலாகாதா என்று எண்ணுவாள். ஒரு நாள் தன் சொந்தக்காரர் வீட்டிலே திருமணம் நடந்தது. வந்த இணைப்பெண்கள் எல்லாரும் வைரத்தோடுகள் போட்டுக் கொண்டு வந்திருந்தார்கள். அவரவர்கள் தத்தம் தோடுகளைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். சானகி என்ன பேசமுடியும் ? தன்னுடைய தோடு வைரம் என்று பொய் சொல்ல முடியுமா ? அவர்கள் மத்தியில் உட்கார்ந்து

கொண்டு அப்பேச்சுக்களைக் கேட்கவும் வெட்கப்பட்டாள். ஏதோ சாக்குச் சொல்லி வேறு இடத்தில் போய் உட்கார்ந்தாள்.

அன்று இரவு தன் கணவனிடம் பேசும்போது உலகத்தையே வெறுத்த மாதிரி பேசினுள். சுந்தரத்திற்கு விளங்கவில்லை. இதுவரைக்கும் வெகு புன்னகையோடு பேசுபவள் இன்று ஏன் இவ்வாறு மனத்தாங்கலோடு பேசுகிருள் என்று நினைத்தான். வெகு தந்திரமாகக் கேட்கவே அவள் கல்யாண வீட்டிலே நடந்த செய்தியைச் சொல்லி, 'இனி வைரத் தோடு இல்லாமல் எந்தக் கல்யாணத்திற்கும் போகமாட்டேன். அவ்விதம் போகவேண்டியது ஏனே? அவமானப்பட வேண்டியதுமேனே' என்றுள். 'சானகி, நீ அவ்வாறு நினைத்தது தப்பு. உன்னை அவமானப் படுத்தவா அவர்கள் தங்கள் தங்கள் தோடுகளைப் பற்றிப் பேசினுர்கள். ஏன் நீ அப்படி எண்ணவேண்டுமோ?' 'நீங்கள் ஆடவர்கள். உங்களுக்குப் பெண்களின் மனப்பான்மை எப்படி தெரியும்? என் 30 ரூபாய் வெள்ளைக் கம்மலைப் பார்க்காமலா அவ்வாறு பேசினுர்கள்?'

'சானகி, நீ போட்டிருப்பது 30 ரூபாய் கம்மல் என்று அவர்களுக்கு எப்படித் தெரியும்? தங்கள் தங்கள் பெருமைகளைப் பற்றிப் பேசுவார்களே ஒழிய பிறருடைய நகையைப் பற்றியாவது, ஏளனம் செய்யவேண்டும் என்ருவது பேசியே இருக்க மாட்டார்கள்.'

'உங்களுடன் சொல்லிப் பயனில்லை. நான் இனிமேல் எந்தக் கல்யாணத்திற்கும் வர மாட்டேன். வைரத் தோடு கிடைக்கும் மட்டும் விரதம் இருக்கத்தான் போகிறேன்' என்று கண்டிப்பாகச் சொன்னுள். சுந்தரம் இனிப் பேசிப் பயனில்லை என்று அறிந்து சும்மா இருந்துவிட்டான். ஆனல், சுந்தரத்திற்கோ, தன் மனைவியின் ஆசையைத்

திருப்தி பண்ண வேண்டும் என்று அந்தரத்தில் எண்ணம். வைரத் தோட்டிற்கு எங்கே போவது? 1500 ரூபாய் வேண்டுமே! திருட்டு, மோசடி, இந்த எண்ணம் அவனுடைய அகராதியிலே கிடையாது. தன்னந்தனியாக இருக்கும்போது தோடு வாங்கும் ஞாபகமே இருக்கும். மற்றும் சானகியைக் காணும்போதெல்லாம் எப்போது இவளுக்குத் தோடு பூட்டி வைப்பேன் என்ற எண்ணமே வரும். இப்படியே மாதங்கள், வருடங்கள் சென்றன. சானகி மறந்திருப்பாள். சுந்தரம் மறக்கவே இல்லை. அவளும் தோட்டைக் குறித்துப் பேசவே இல்லை. இவனும் அதைக் குறித்துப் பேசுவதற்கு விரும்பவே இல்லை. ஆனால் அக்காரியம் எப்போது சித்திக்கும், எப்போது தன் மனைவி தன்னைப் பார்த்துத் திருப்தி என்று சொல்லுவாள் என்று எண்ணிக் கொண்டே இருந்தான்.

ஒருநாள் ஒரு இமிடேஷன் நகைக்கடைக்குத் தன் நண்பன் ஒருவனுடன் சென்றான். சுந்தரமோ எதையும் வாங்குவதில்லை. கையில் பணம் மீதியானால்தானே வாங்க முடியும்? ஆனால் நண்பர்கள் நகை வாங்கப் போனால் கூடப் போவதுண்டு. அதில் அவனுக்கு ஆர்வம்கூட. நண்பர்கள் நகைகளை வாங்கும்போது தன் அபிப்பிராயம் சொல்லுவான். அன்றைத் தினம் கடைக்குப் போனபோது தனது நண்பன் ஒரு இமிடேஷன் கம்மல் வாங்கினான். மற்றொரு கண்ணாடிப் பெட்டியில் வேறொரு ஜதைக் கம்மல் இருந்தது. அது பளபளப்பாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. உண்மையான வைரமாக இருக்குமோ என்பது அவனுடைய கனவு.

இரண்டுநாள் கழித்து, தான் வெகு கஷ்டப்பட்டு மீதி வைத்திருந்த 25 ரூபாய்களை எடுத்துக்கொண்டு அதே கடைக்குச் சென்றான். கடையில் கடைக்காரன் இருந்தான். சில கம்மல்களின் விலை கேட்டான். சரிப்பட

வில்லை. பிரகாசித்துக்கொண்டிருந்த அந்தக் கம்மலைப்பற்றிக் கேட்டான்.

"சுவாமி, அந்த இமிடேஷன்களை வாங்கவே உங்களால் முடியவில்லையே, இதையேன் நினைக்கிறீர்கள்? கேட்கவே வேண்டாம்" என்று சுளித்துக்கொண்டு சொன்னான். அந்தச் சொல்லைக் கேட்ட சுந்தரத்திற்குப் பொறுக்கவில்லை. எதையும் வாங்காமல் வீடு திரும்பிவிட்டான்.

அவன் அந்தக் கடைவழி போகும்போதெல்லாம் அந்தக் கம்மலைப்பற்றித்தான் நினைவு வரும். கடைக்காரன் இருப்பான். உள்ளே போகாமல் மேலே சென்றுவிடுவான். ஆனால் 25 ரூபா மடியிலே வைத்துக்கொண்டேதான் இருந்தான்.

ஒருநாள் வந்த வழியே செல்லும்போது கடைக்காரன் கடையிலே இருக்கவில்லை. ஆள்காரப் பையன் மட்டும் உட்கார்ந்து கொண்டிருந்தான். தைரியமாய் உள்ளே சென்றான்.

'சுவாமி, என்ன வேண்டும்' என்று கேட்டான் அப்பையன். 'நகைகளைப் பார்க்க வந்தேன்' என்று சொல்லி உள்ளே புகுந்து நகைகளைப் பார்த்தான். பாவம் அந்தத் தோடு இருந்த இடத்தில் இருக்கவில்லை. அவன் முகத்தைப் பார்க்கவேண்டும்! இஞ்சி தின்ற குரங்குபோல் ஆய்விட்டது.

ஆனால் அவனோ இந்தச் சமயத்தை விடக்கூடாது என்று கம்மல்களை முழுதும் பார்த்தான். அதே கம்மல் இமிடேஷன் கம்மல்களோடு வைக்கப்பட்டிருந்தது. முகம் உடனே பிரகாசம் அடைந்தது.

கடைக்காரப் பையனை அழைத்து அதை எடுக்கச் சொன்னான். அதைப் பலதடவை பார்த்துவிட்டு விலைகேட்டான். பையன் 50 ரூபா என்றான். ஒருபுறம் சந்தோஷம். மறுபுறம் விசனம். அது 50-க்கு சலீசுதான். ஆனால் அந்தத் தொகை தன்னிடம் இல்லையே என்று எண்ணி

னுன். இறுதியில் வெகு நாசூக்காக வார்த்தையாடி அதனை 25 ரூபாய்க்குப் பெற்றுக்கொண்டு வீடு சேர்ந்தான். அன்று அவன் பெரும் பொக்கிஷம் அடைந்தாற்போல எண்ணினுன்.

வீடு சேர்ந்ததும் தன் மனைவியிடம் கம்மலைக் காட்டினுன். அவளும் அதைக் காதில் போட்டுப் பார்த்து விட்டு வெகு அழகாக இருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைந்தாள். உடனே கழட்டி வைத்துவிட்டு அதன்விலை கேட்டாள். சுந்தரத்திற்கு என்ன சொல்வது என்று தோன்றவில்லை. 25 ரூபா என்றுல் மகிழ்ச்சி ஆவியாகப் பறந்துபோகும். 2500 ரூபா என்றுல் இந்தப் பணம் எங்கிருந்து வந்தது என்று சொல்லித் தீரவேண்டும். இருதலைக் கொள்ளி எறும்புபோல் திகைத்தான். விடை ஒன்றும் கூறுமல் சமயோசிதமாகப் பேச்சை மாற்றிக்கொண்டு தப்பித்துக்கொண்டான்.

மறுநாள் தன் அத்யந்த நண்பர்களிடம் அக்கம்மலைக் காட்டி அதனை மதிப்பிடச் சொன்னுன். அவர் எல்லோரும் அது 2000 முதல் 2500 வரை செல்லும் என்றுர்கள். அது ஏது என்று அவர்கள் கேட்டார்கள். ஒரு சிநேகிதனிடம் இரவல் வாங்கி வந்தேன் என்றுன். இந்தப் பொய் பேசியதைப் பின்னுல் நினைத்து நினைத்துத் தன்னையே வெறுக்கத் தொடங்கினுன். இதுவரை விளையாட்டிற்காகவும் பொய் பேசாத ஆள் இந்தச் சிறிய காரியத்தில் பொய் பேச வேண்டி வந்ததே என்று எண்ணினுன். ஒரு பெண்ணைத் திருப்தி செய்ய வேண்டும் என்றுல் என்னென்ன உபத்திரவம் வருகிறது என்று துயரப்பட்டான். ஆனுலும் மனது பொறுக்கவில்லை.

மறுநாள், ஒரு தட்டானிடம் கம்மலைக் கொண்டுபோய் மதிப்புக் கேட்டான். அவனும் அதை 2500க்கு மதித்

தான். இந்த ஆபீஸர் கம்மல் வாங்கப்போகிறார். தனக்கும் கமிஷன் வரட்டும் என்று எண்ணினான். அவனும் அக்கம்மலைப் பற்றிப் பல கேள்விகள் கேட்டான். அவனொரு வஞ்சிப்பத்தனோ என்று வெகுண்டான் சுந்தரம். அவனிடமிருந்து தப்பித்து வரப் பிரம்ம பிரயத்தனம் ஆகி விட்டது. எங்கே அவன் கம்மல் வந்த விதத்தை வெளிப் படுத்தி விடுகிறானோ என்ற பயம் வந்துவிட்டது. அவன் மதிப்பு சொன்னதற்காக ஒரு ரூபா கூலி கொடுத்துவிட்டு வீடு திரும்பினான். அதுமுதல் கம்மலை வெளியாரிடம் காட்ட அவன் விரும்பவில்லை.

ஜானகியும் சும்மா இருக்கவில்லை. ஒருநாள் அதனை மாட்டிக்கொண்டு ஒரு சினேகிதியிடம் பேசிக்கொண்டிருந் தாள். அவளோ அதைப் பார்த்துவிட்டு இக்கம்மல் ஏது என்றாள். கணவன் வாங்கித் தந்தது என்று விடை கொடுத் தாள்.

'இது சுயமான கம்மல்போல் இருக்கிறதே! மதிப்பு 2000 ரூபா இருக்கலாம். உன் கணவனுக்கு ஏதாவது அதிர்ஷ்டம் கிடைத்ததா?' என்றாள்.

'அம்மா, அதைப்பற்றி எல்லாம் கவலைப் படுவதே இல்லை. அவர் சோலிக்கு நான் போவதே இல்லை' என்று சொல்லித் தப்பித்துக்கொண்டாள். அன்று மாலை வெகு ஆயாசத்துடன் கணவன் வீடுவந்தான். ஆபீசில் அன்று கடுமையான வேலை அதிகம். சற்று இளைப்பாறலாம் என்று சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தான். அதை அறியாத சானகி கணவனிடம் பேசவந்தாள். சிறிது காப்பி கொடுத்து விட்டுக் கதையைத் தொடங்கினாள்.

'இந்தக் கம்மல் இமிடேஷன் அல்லவாம். 2000 ரூபாய்க்கு மேலேயே பொறுமாம். இது எப்படிக் கிடைத் தது?'

'சானகி, எப்படிக் கிடைத்தாலும் உனக்கென்ன? அதை நான் சம்பாதித்தேன். உனக்குக் கொடுத்தேன். திருப்தி இல்லையா? வந்தவழி என்ன ஆனாலும் உனக்கு என்ன கவலை?'

'சொல்லமாட்டீர்கள் போல் இருக்கிறது. நாமோ யோக்கியமான குடும்பஸ்தர். பரம்பரையாக நல்ல பேர் வாங்கினவர்கள். இக்கம்மல் எப்படி வந்தது என்று சொல்லாவிட்டால் இரண்டுபேர் நம்மை என்ன நினைப் பார்கள்?'

சுந்தரத்திற்கு என்ன சொல்வது என்று விளங்க வில்லை. விஷயம் சரியாகப் பொருத்தமாகக் கூறிவிட்டால் சங்கடம். சச்சரவு செய்துகொண்டு சங்கடப்படுவதற்கு எண்ணம் இல்லை. சமயோசிதமாக ஒரு பொய்க் கதை கட்டி விட்டான். 'சானகி, முன்னமே சொல்லாததைக் குறித்துக் கோபிக்கவேண்டாம். நான் ஒரு லாட்டரி சீட்டுப் போட் டேன். அது எனக்கு எழுந்தது. 2500 ரூபா கிடைத்தது. அது கொண்டு இந்தக் கம்மல் வாங்கினேன்!' என்றான்.

மனதாரப் பொய் சொல்லுகிறோம் என்று ஒருபுறம் வருத்தம். ஆனால் வெகு தந்திரமாக அவளை ஏமாற்றிவிட் டோம் என்று மறுபுறம் மகிழ்ச்சி.

இப்படியிருக்க அக்கதையைக் கேட்ட சானகிக்கோ ஒரு திருப்தியும் இல்லை.

'லாட்டரி கிடைத்ததை என்னிடம் மறைத்து வைக்க லாமா? நான் என்ன அப்படி நடத்தை கெட்டவளா? இந்த வைரத்தோடு எனக்கு எதற்கு? நம்ம பிழைப்பிற்கு ஒரு வைரத்தோடு அவசியமா?' என்றாள். 'அவளைத் திருப்தி செய்வதற்காக இத்தனை பாடுபட்டுச் சம்பாதித்தது ஒரு விநாடியில் பலனற்றுப் போய்விட்டதே! ஈசா இதுவும் உன் திருவிளையாடலா' என்று எண்ணினான் சுந்தரம். 'என்ன

பேசாமல் இருக்கிறீர்கள் ? 2500 ரூபா இலகுவா ? அதனை என் தம்பியிடம் கொடுத்து ஒரு வியாபாரம் செய்யச் சொன்னல் அதனை பத்தத்தனைப் பெருக்கலாமே ! நாமும் சுகமாக இருக்கலாம். அவனுக்கு ஒரு வழி ஏற்பட்டிருக்கும். இத்தனை பணத்தை ஒரு தோடு வாங்கி வீண் ஆக்கினீர்களே ? உங்களுக்குப் புலப்படாவிட்டால் என்னை ஒரு பேச்சுக் கேட்கலாகாதோ ?' என்று கடிந்து பேசினுள்.

'அடடா, என்ன மதிமோசம். இவளைத் திருப்தி செய்ய இத்தனை செய்தும் திருப்தி ஆகவில்லையே. பொய் சொல்லி இந்தச் சங்கடத்தில் மாட்டிக்கொண்டேன். எல்லாம் அல்நாச்சார் கதை ஆகிவிட்டது' என்று ஏக்கம் பிடித்துச் சாய்வுநாற்காலியில் சாய்ந்துகொண்டான்.

கணவனுடைய முகத்தைப் பார்த்து என்ன பேச்சுப் பேசிவிட்டேன்? அவரும் துயரப்படுகிருர் என்று எண்ணிச் சிறிது பச்சாத்தாபத்துடன் வீட்டிற்குள் சென்றுள் மனைவி.

——

9. குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டம்

ஒரு சிறு சேரி. வீடுகளே ஐந்தாறுதான். அவைகளும் நவக்கிரகம் போலக் கட்டப்பட்டிருக்கும். சில வீடுகள் ஏற்கெனவே குட்டிச் சுவர்கள் ஆயின. சில கூறைகள் இன்றோ நாளையோ விழுந்துவிடுமோ என்று வெளியார் அஞ்சுவார்கள். அவைகளில் குடியிருந்த பத்துக் குடும்பங்களுக்கு அந்தக் கவலையே இல்லை. ஒன்றிரண்டு வீடுகளே சுத்தமாக இருக்கும். அவைகள் பிற இடங்களில் வசிப்பவர்களால் விலைக்கு வாங்கப்பட்டு வாடகைக்கு விடப்பட்டவைகள். அப்படிப்பட்ட சேரியிலே ஒரு சிறிய வீடு. ஓட்டுவில்லை வேயப்பட்டதுதான். ஆனால் முகடு விட்டம் உடைந்திருந்தது. ஓடுகள் வளைந்து தொங்கிக்கொண்டிருந்தன. அவைகளை நிறுத்திவைக்கப் பணமோ அல்லது நேரமோ அக்குடும்பத்திற்கு இல்லைபோலும். அந்த வீட்டிற்குள் விலையுயர்ந்த சாமான் எதுவும் இல்லை. சமையலுக்கு அவசியமான சில சாமான்களேயன்றி ஒன்றும் காணோம். ஏழைக் குடும்பம். பிறர் வீட்டிலே வேலை செய்து பிழைப்பவர் வீடு எப்படியிருக்கும்? ஓயாத வேலை. இரவு சில மணி நேரம் தவிர மற்ற மணிகளை முழுதும் எசமான் வீட்டிலேயே அர்ப்பிதம் செய்யவேண்டும். அப்படிப்பட்டவனுக்கு வீட்டைப் பற்றி என்ன அக்கறை? சம்பளமோ வயிற்றுக்குப் போதாது. போதாக்குறைக்கு மனைவியில்லை. இரண்டு பெண்களும், இரண்டு ஆண்பிள்ளைகளும் அவனுக்கு உண்டு. மூத்தபெண் பிறர் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு மாமியார்வீடு சென்றுவிட்டாள். இளையவள் மணமாகாத குமரி. அவள்தான் வீட்டைப் பார்த்துக்கொண்டு சமையல் முதலிய காரியங்களைச் செய்வாள். பிள்ளைகள் விசைவண்டி ஓட்டும் வேலை. பெரும்பாலும் வீட்டில்

இருக்கமாட்டார்கள். இவர்கள் நினைத்தபோது ஒழிவு கிடைத்தால் வீட்டிற்குவந்து உண்டுவிட்டுச் செல்லுவார்கள். இப்படிப்பட்ட குடும்பம் என்ன நிலையில் இருக்கும்?

'இல்லாளும் இல்லாளே ஆமாயின்' என்று ஔவையார் சொன்ன கதையே ஏற்படும் அல்லவா? அந்த நிலையில் இந்த ஏழைக் குடும்பம் காலம்தள்ளிக்கொண்டு வந்தது.

'ராதா, எங்கடி போனுய்?' என்று உரத்த சப்தம் போட்டுக்கொண்டு வந்தான் அப்பன்.

'அப்பா, நான் எங்கும் போகவில்லை. குழம்புக்கு மசால் அறைத்துக்கொண்டிருக்கிறேன்' என்று அமைதியாகச் சொன்னுள் ராதை.

'அடி துஷ்டை! மணி என்ன ஆச்சுது! ஒரு மணிக்கு மேலே ஆச்சுது, இன்னும் சமையல் முடிக்கவில்லையா? நான் எசமான் வீட்டுக்கு உடனே போகணும். பத்து நிமிஷம் தான் நேரம் கொடுத்தான். வட்டில் கொண்டுவாடி.'

'இன்னும் சமையல் ஆகவில்லை. சாதம் இன்னும் வடிக்கவில்லை. இப்பத்தான் உலையில் அரிசி போட்டிருக்கிறேன். கொஞ்சம் பொறுத்துக்கொள் அப்பா.'

'என்னடி, சோம்பேறி, எங்கே போனே இவ்வளவு நேரம்? உண்மை சொல்லடி' என்று எரிந்தான் அப்பன்.

'அப்பா, ரேஷன் அரிசிக்குப் போனேன். பிறகு தண்ணீருக்குக் குழாயண்டை போனேன். வெகு ஜனக் கூட்டம். நேரம் ஆச்சுது ஒரு குடம் தண்ணீர் கொண்டுவர' என்ருள்.

'ஏண்டி! ஊர்சுத்திக் கழுதை! நீர்க்குழாயண்டை வேடிக்கை பேசிக்கொண்டிருந்தாயா? வெகு குறும்பு ஆகிவிட்டாய்.'

'இல்லை அப்பா, பக்கத்து வீட்டு அம்மாளைக் கேள். அவளும் வந்தாள்.'

'கழுதை, அடிக்காவிட்டால் வழிக்கு வரமாட்டாய்' என்று கத்திக்கொண்டு மசால் அரைத்துக்கொண்டிருந்த அவளை முதுகில் ஓர் உதை உதைத்தான். 'ஐயோ' என்று கத்திக்கொண்டு அம்மியின்மேல் விழுந்தாள். நெற்றியில் சிறிது இரத்தமும் வந்தது.

ஆனால், பெண்ணோ புத்தி வந்தவள். அழவில்லை. நெற்றியைத் துடைத்துக்கொண்டு மெல்ல எழுந்தாள்.

அவனுக்கோ கோபம் அடங்கவில்லை. வீட்டில் இன்னமும் சமையல் ஆகவில்லை. போகவேண்டிய நேரத்தில் சமையல் ஆகாது என்று தெரிந்தது. அருகிலே இருந்த ஒரு சவுக்கு எடுத்து, 'போ கழுதை' என்று ஓங்கி ஓர் அடி அடித்தான். பாவம் அடிபட்டுக்கொண்டு வீரிட்டு ஒரு மூலையில் விழுந்தாள். அதோடு நிற்காமல் அடுப்பண்டை சென்றான். உலையில் சாதம் பொங்கிக்கொண்டிருந்தது. அவனுடைய கோபமும் பொங்கியது. ஒரு விறகு எடுத்து சட்டியின்மேல் போட்டான். அது உடைந்து பாதி வெந்த சாதம் சிதறியது. வெகு கோபத்துடன் வீட்டை விட்டு வெளியே சென்றான்.

சீதை மூலையில் உட்கார்ந்துகொண்டு கண்ணீர் உகுத்துக்கொண்டு விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தாள்.

போன அப்பன் திரும்பவே இல்லை. அப்பனுக்குக் கோபம் வந்தது என்றால் அடுத்த வீட்டார் அருகிலே வரமாட்டார்கள். இந்த வில்லங்கத்திற்கு நாம் ஏன் போய் மாட்டிக்கொள்ளவேண்டும் என்று எண்ணி எதுவும் தெரியாதவர்கள்போல் இருந்துவிடுவார்கள். 'குரங்குக்குப் புத்திமதி சொன்ன குருவிபோல் ஆகிவிடும்' என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள். அப்பன் வெளியே போய் மூன்றுமணி நேரம் ஆகிவிட்டது. சீதை மூலையிலேயே அழுதுகொண்டிருந்து அயர்ந்து தூங்கியும் விட்டாள்.

அடுத்த வீட்டுக் கமலா மெல்லத் தன் வீட்டை விட்டு வெளியே எட்டிப் பார்த்தாள். சீதையினுடைய மூச்சும் கேட்கவில்லை. உள்ளே நுழைந்தாள். மூலையில் கண்ணீரும் கம்பலையுமாக ஒடுங்கி அவள் கிடந்ததைக் கண்டு பரிதாபப் பட்டாள்.

'கமலா, நான் துரதிர்ஷ்டக்காரி. என்னிடம் நீ ஏன் வரவேண்டும்? நான் ஏன் உலகில் பிறந்தேன்? என்ன பிழை செய்தேன்' என்றுள். 'சீதா! நீ நல்லவள் தான். ஆனுல் அப்பன் நோக்கை அறிந்து நடக்கவேண்டும்.'

'கமலா நான் என்ன செய்யட்டும். உனக்கே தெரியும். ரேஷன் அரிசி வாங்க நேரம் ஆகவில்லையா? தண்ணீர் மொள்ள நேரமாகவில்லையா? நீதானே என்னேடு வந்தாய்? என் பேரில் என்ன தப்பு? இதோ பார். ஏன் இந்தக் காயம் படவேண்டும்? என் அருமைத் தாயார் இருந்திருந்தால் இந்தக் கதி எனக்கு வருமோ! நான் புத்தி அறிந்தவள் அல்லவா!'

'நீ சொல்வது சரிதான்! என்ன இருந்தாலும் உன் அப்பன் அப்பன்தான். உன்னைப் பெற்றவன் இல்லையா? தன் வேலைத் தொந்தரவினுல் இப்படிக் கோபித்திருப்பார்.'

'கமலா, கோபம் வரட்டும். தப்பு செய்திருந்தால் அடிக்க வேண்டியதுதான். என் தாயார் இருந்திருந்தால் நான் அதிகமாகப் படித்து உபாத்தியாயினி ஆகியிருப்பேன்; சம்பாதிப்பேன். அப்போது இந்தக் கஷ்டம் வராது. தாயார் இறந்தாள். படிப்பு நின்றது. அப்பனுக்குச் சமயல் செய்யவேண்டி வந்தது. இது துரதிர்ஷ்டம் அல்லவா!'

'சீதா! என்னமோ அது எல்லாம் கடவுள் செயல். நீ பசித்திருக்கிருய். சிறிது சாதம் கொண்டு வருகிறேன் சாப்பிடு!'

'கமலா, எனக்குச் சாதமும் வேண்டாம்! ஜீதமும் வேண்டாம். நான் பட்டினி கிடந்து சாகிறேன். இதைப் பொறுக்க முடியாது. கிணற்றில் விழுந்தாவது சாகிறேன்'.

'சீதா, இது என்ன பைத்தியம். தற்கொலை பாவம் அல்லவா? பின்னல் பிசாசாகிப் பட முடியாத பாடு படு வாய். சற்றுப் பொறு. எல்லாம் சரியாகி விடும்' என்று சொல்லித் தன் வீட்டிலிருந்து சிறிது சாதம் கொண்டுவந்து கொடுத்தாள். சீதையும் சிறிது நேரம் பொறுத்து ஆறு தல் அடைந்து சாப்பிட்டாள். கமலா அவளுக்குச் சில நல்ல வார்த்தைகள் கூறி வீட்டைச் சுத்தம் செய்துவிட்டுச் சமையல் செய்யச் சொல்லிவிட்டுச் சென்றாள்.

சீதை எழுந்து உடைந்த சட்டித் துண்டுகளை எடுத்து எறிந்துவிட்டு, வீட்டைச் சுத்தம் செய்து அடுப்பில் உலை ஏற்றினாள். சிறிது நேரத்தில் சமயல் செய்துவிட்டு இருட்டு வதற்கு முந்தி வட்டிலில் சோறு படைத்து வைக்கும் நிலை யில் எல்லாம் ஆயத்தம் செய்து வைத்தாள். வேலை செய்த மும்முரத்தில் தன் தகப்பன் அடித்த அடியையும் மறந்தாள்.

முதலில் தமையன் வந்தான். அவனிடம் அவள் எதை யும் சொல்லவில்லை. சாதம் படைத்தாள். அவன் சாப் பிட்டுவிட்டு வெளியே சென்றான். பிறகு தகப்பன் வரவை எதிர்பார்த்துக் கொண்டு வீட்டில் உட்கார்ந்து கொண்டு இருந்தாள். ஆனால் தகப்பனை எப்படி வரவேற்பது? என்ன செய்வானோ என்ற பெருங் கவலையோடு நடுங்கிக்கொண் டிருந்தாள்.

இரண்டொரு நாழிகை இருக்கும். தகப்பன் வீட்டிற் குள் நுழைந்தான். அவன் முகம் எந்தத் தோற்றத்தில் இருந்தது என்று இருட்டில் சொல்ல முடியவில்லை. மிகுந்த அச்சத்துடன் சீதை சமயலறையில் இருந்தாள். தகப்பன் உள்ளே நுழைந்து உடையைக் கழற்றி வைத்து

முகம் கழுவச் சென்றான். அதை அறிந்த சீதை ஒரு பலகையிட்டு எதிரிலேயே குடிநீரும் உண்கலமும் வைத்தாள். உள்ளே வந்த தகப்பன் அதைக் கண்டு புன்சிரிப்போடு, 'சீதா நீ நல்ல பெண். இதோ உனக்கு ஒரு மயில் புரோச்சு வாங்கி வந்திருக்கிறேன்' என்று சொல்லி அதை எடுத்து அவள் தலைமயிரில் மாட்டச் சென்றான். அந்த அன்பு மொழிகளைக் கேட்டவுடனே அவள் மனம் பொங்கிக் குளிர்ந்தது. பகலில் நடந்த கொடுமையை அறவே மறந்தாள். ஆனாலும் மரியாதைக்காக வெட்கப்பட்டவள்போல், 'வேண்டாம் அப்பா, நான் என்ன சிறுகுழந்தையா புரோச்சு மாட்டிக்கொள்ள' என்று சொல்லிச் சிறிது விலகினாள்.

'கண்ணே, கோபித்துக் கொள்ளாதே. நான் பகலில் செய்தது தப்புதான். என் எசமானன் திட்டின திட்டைக் கேட்டால் நீ என்னை மன்னிப்பாய். உன்னை அடித்தது முதல் கொண்டு என் கை ஓடவே இல்லை. உன் தாயார் நினைவே வந்தது. மேல் உலகத்தில் இருந்து பார்த்தால் என்னவென்று சொல்வாளோ ? எப்போது வீடு போவோம் எப்போது உன்னைச் சாந்தப்படுத்துவோம் என்று எண்ணிக் கொண்டே ஓடிவந்தேன். இந்தா இதை மாட்டிக்கொள்' என்று வெகு அன்போடு அந்த நகையைத் தந்தான்.

சீதைக்கோ மனம் குளிர்ந்துவிட்டது. உடனே அதை வாங்கி அணிந்துகொண்டாள். முகக் கண்ணாடியில் பார்த்து மகிழ்ந்தாள்.

தகப்பனாருக்கு வெகு அன்போடு தான் சமைத்த உணவை யிட்டாள். அவனும் வெகு பிரியத்தோடு உண்டான்.

அதற்கு முந்தி அனுபவிக்காத மகிழ்ச்சி அவன் மனதில் எழுந்தது. சாப்பிட்டதும் சீதையின் காயத்தைப் பார்த்தான். அதிகமாக இருக்கவில்லை. சிறிதளவு களிம்பு

இட்டுச் சிறு துணியால் ஒட்டினான். அன்றிரவு இருவரும் நன்றாகத் தூங்கினார்கள். ஓர் இன்சொல் எந்த இன்னலையும் மாற்றிவிடுகிறது அல்லவா!

இரண்டு மாதம் கழிந்தது. யாதொரு சம்பவமும் நேரிடவில்லை. ஒருநாள் காலையில் அப்பன் எப்போதைப் போலவே சிற்றுண்டி அருந்திவிட்டு வேலைக்குச் சென்றான். அன்று ஏதோ ஒரு பிசகு செய்துவிட்டான். அது அவனுக்குத் தெரியவில்லை. எஜமான் பரிசோதிக்கும்போது அது அகப்பட்டது. மிகவும் கோபித்துத் திட்டினான். ஒரு பணம் அபராதமும் போட்டான். அப்பனுக்குப் பொறுக்க முடியாத கோபமும் வந்தது. சாப்பாட்டு நேர அரைப்பங்கைக் குறைத்து அந்த நேரத்தில் பிசகைத் திருத்தவேண்டும் என்று கட்டளையிட்டான். அப்பன் சாப்பாட்டிற்கு வீட்டிற்கு ஓடி வந்தான்.

துரதிர்ஷ்டமாக அன்றும் ரேஷன் அரிசி நாள். சீதைக்கு அரிசி விரைவில் கிடைக்கவில்லை. தெருக்குழாயில் தண்ணீரும் நின்றுவிட்டது. கமலாவும் சீதையும் வேறொரு வீட்டிற்குச் சென்று கிணற்றில் நீர் சேந்திக்கொண்டு வந்தார்கள். வீட்டில் சமையல் ஆகவில்லை. அப்பன் வந்தபோது அடுப்பில் உலை போட்டிருந்தது.

வந்து சாப்பாட்டிற்கு உட்கார்ந்தான். 'அப்பா சிறிது நேரம் ஆகும்' என்றாள் சீதை. வந்தது கோபம். பொங்கி எழுந்தது. கண்கள் சிவந்தன. உதடுகள் நடுங்கிற்று. கோபத்தால் துடித்தான். அருகிலிருந்த ஒரு தடியை எடுத்தான். பாவம் சீதையின் முதுகின்பேரில் இரண்டடி ஓங்கி அடித்தான். அடி பொறுக்க மாட்டாமல் சீதை கீழே விழுந்தாள். ஒரு நாற்காலி கையின்மேல் பட்டுக் காயம் ஆயிற்று. இரத்தம் வந்தது. முந்தி வாங்கித் தந்த புரோச்சு ஒடிந்துவிழுந்தது. தன் விதியை எண்ணி எண்ணி ஒரு

மூலையில்போய் விழுந்தான். தகப்பனுே நோம் ஆவதைக் கண்டு சகிக்காமல் உடனே எழுந்து வெளியே போய்விட்டான். அன்று இருவருக்கும் பட்டினி.

அன்று மாலையில் கமலா வந்து ஆறுதல் சொல்லிச் சாதம் தந்தாள். சிறிது பொறுத்துச் சீதை சமைத்து வைத்தாள். இரவில் தகப்பன் வந்தான். அன்புமொழிகளை மன்னிப்பு மொழிகளாகப் பொழிந்தான். ஆனல் அன்று எந்தப் பூரோச்சும் வரவில்லை.

இந்த விதமாக உதைபடும் செய்தி அடிக்கடி ஏற்படத் தொடங்கிற்று. முதலிலே சமையல் செய்யவில்லை என்ற சாக்கு இருந்தது. சமையல் தயாராக இருந்த நாளிலும் வீடு கூட்டவில்லை என்ற சாக்கும் ஏற்பட்டது. பிறகு உப்பு இல்லை, காரம் இல்லை என்ற சாக்குக்கும் அடி விழுந்தது. பாவம் சீதையினுடைய நிலை மிகவும் பரிதாபம் ஆகிவிட்டது. தற்கொலை செய்து கொள்ளலாம் என்று மீண்டும் நினைத்தாள். கமலாவின் புத்திமதி அவளை அது செய்யாமல் நிறுத்திவிட்டது. அப்பன் அடிக்கையில் அதைத் தடுக்க எந்த உறவினரும் வருவது இல்லையே என்று ஏங்கினுள். இந்த உலகம் மிகப் பொல்லாத உலகம். இதையேன் கடவுள் சிருட்டித்திருக்கவேண்டும் என்று எண்ணுவாள்; வயது அதிகம் இல்லை. உலக அனுபவம் இல்லை. சீதை என்ன செய்வாள்? தகப்பன் கோபக்காரன். அடிக்கடி அடித்துவந்தான். ஆனல் தமையனுே சாந்தமுள்ளவன். அவன்பெரும்பாலும் வீட்டில் இருப்பதே இல்லை. வீட்டு நடத்தைகளும் வெகுவாய்த் தெரியாது. அதைப்பற்றிக் கவலையும்படவில்லை. தன் வேலையும் சம்பாத்தியம் ஒன்றே அவன் கவனித்துவந்தான். தன் தங்கைபேரில் அவனுக்கு மிகுந்த அன்பு. தன் சம்பாத்தியத்திலிருந்து அவளுக்குத் துணி, தாவணி, இரவிக்கை, சிறுசிறு நகைகள் இவைகளை வாங்கித் தருவான். அவளும்

நல்ல உடைப்பிரியள். அடிக்கடி அலங்கரித்துக் கொள்ளு வாள். தமையனைக் கண்டபோதெல்லாம் தன் தகப்பன் செய்த கொடுமைகளை மறந்துவிடுவாள். ஆனால் ஒன்று. தன் தகப்பன் செய்துவந்த கொடுமைகளைப்பற்றித் தமைய னுடன் ஒரு சொல்லும் அவள் சொல்லவே இல்லை.

அடிக்கடி வீட்டைவிட்டுச் சென்றுவிடலாம் என்று அவள் நினைத்தாலும் தமையன் வரவே அவள் ஆறுதல் அடைவாள். வெளியேறுவதை நிறுத்திக்கொள்ளுவாள். இம்மாதிரி மாதங்கள் கழிந்தன.

என்ன கிருகசாரமோ தெரியவில்லை. ஒரு நாள் சங் கதி மீறிவிட்டது. தகப்பனுக்குச் சீதை சாதம் பரிமாறிக் கொண்டிருந்தாள். திடீரென்று ஊறுகாய் கொண்டுவரச் சொன்னான். ஊறுகாய் தேடச் சென்றாள். அது கிடைக்க வில்லை. அவனுக்கோ அடக்கமுடியாத கோபம் வந்தது.

'அடி சண்டாளி உனக்குக் கொழுப்பு ஏறிவிட்டதோ! சொன்ன பேச்சுக் கேட்கமாட்டாயோ? ஊறுகாய் எங்கே போச்சு?' 'அப்பா அது காணவில்லை, தீர்ந்துபோய்விட்டதோ என்னமோ ஞாபகம் இல்லை, வெகுநாளாய் ஊறுகாய் எடுக் கவே இல்லையே?' 'முட்டாள், போனமாதம் ஊறுகாய் வைத் தது ஞாபகம் இல்லையோ? அதற்குள் பாக்கி எங்கேபோய் விட்டது? இருக்க இருக்க அஜாக்கிரதை அதிகமாய்விட்டது. கழுதைபோல் ஊர்சுற்றத் தொடங்கிவிட்டாய்போல் இருக் கிறது.' 'அப்பா, உனக்கேன் சந்தேகம்? வேண்டாம் என்றால் வீட்டை விட்டுத் துரத்திவிடுங்கள். நான் என்ன செய்தேன்? என் தாயார் இருந்தால் இப்படி ஏற்படுமா?' என்றாள். 'தாயார்' என்ற சொல்லைக் கேட்டவுடனே இராட்சதன் போல் கர்ஜித்தான். வட்டியில் இருந்த எச்சில் சாதத்தை அவள்மீது வீசினான். வட்டியையும் அவள்மீது எறிந்தான்.

'உன் தாய்போல நீயும் நாசமாய்ப்போ. அவள் குணம் தானே உனக்கும் இருக்கும்? தொலேஞ்சுபோ' என்று கர்ச்சித்து எதிரில் கிடந்த ஒரு கொள்ளிக்கட்டையால் அவள் தலேயில் அடித்தான். அவள் 'ஓ' வென்று கதறி விழுந்தாள். 'செத்துத் தொலே' என்று காலால் உதை கொடுத்துவிட்டு வெளியே ஓடினுன்.

பாவம்! சீதை மூலேயில் செத்தபிணம்போல் மூர்ச்சை யாகி விழுந்தாள். எத்தனே நேரம் அப்படிக் கிடந்தாளோ தெரியவில்லே. வெகு நேரம் கழித்துக் கண்ணேத் திறந் தாள். வீடு அலங்கோலமாக இருந்தது. கைகால் எடுக்க முடியவில்லே. அப்படியே படுத்துக்கொண்டாள். துக்கத் தோடு தூக்கமும் வந்தது. திக்கில்லாதவர்களுக்கு யார் தான் துணே?

இந்தமுறை அடி மிகவும் அதிகம். அதை அவள் உடம்பு பொறுக்கவில்லே. அவள் உடம்பு தகித்ததுபோல் வெப்பம் அடைந்தது. நாள் முழுதும் சாப்பாடு இல்லே. அழுததால் கண்கள் சிவந்தன. இந்த விதத்தில் தெய்வமே கதி என்று இருந்தாள்.

அன்று தமையன் வேறு வேலேயாக வேறூர் சென் றிருந்தான். அவன் இருந்தாலாவது ஆறுதல் தந்திருப் பான். தகப்பன் அவள் கதி என்ன ஆயிற்று என்று நினேத்தவனுமல்லன். ஓர் ஓட்டலுக்குச் சென்று நன்ருக உண்டுவிட்டுப் படுத்துக்கொண்டான்.

சீதைக்கு அன்றிரவு தூக்கம் வரவில்லே. உடல்நோவு அதிகமாகிவிட்டது. காய்ச்சலும் வந்துவிட்டது. இரவெல் லாம் வெறும் தரையில் புரண்டுகொண்டே கிடந்தாள். இந்தக் காய்ச்சல் தனக்கு மரணம் தாராதோ என்றும் எண் ணினுள்.

சீதைக்குக் காய்ச்சல் கண்டிருப்பதை அறிந்து கமலா அடிக்கடி வந்துவிட்டுப் போவாள். மிளகு அரைத்துக் கொடுப்பாள். கொஞ்சம் கஞ்சியும் கொண்டுவந்துகொடுத் தாள். ஆனால் சீதையோ எதையும் சாப்பிட்டாள் அல்லள். அவளுடைய நிலையைக் குறித்துக் கமலா தன் வயதான தாயிடம் கூறினாள். தாயார் பிற்பகலிலே வந்து சீதையின் அருகில் உட்கார்ந்து ஆறுதல் கூறினாள். நடந்த விஷயம் முழுவதும் கேட்டாள். சீதையும் சொன்னாள். 'அம்மா சீதை, ஊறுகாய்க்காக இப்படி அடித்திருக்கமாட்டான். நீ ஏதாவது சொன்னாயோ?'

'நான் ஒன்றும் சொல்லவில்லை மாமி. என் தாயார் இருந்தால் இந்த உதை எனக்குக் கிடைக்குமா? என்று மட்டும் கேட்டேன். அவருக்கு உடனே கோபம் வந்தது' என்றாள்.

'அம்மா, சரி, சங்கதி தெரிந்தது. உன் தாயாரைச் சுட்டிச் சொன்னது அவனுக்குப் பிடிக்கவில்லை. தாயார் பெயர் சொன்னாலே அவனுக்குப் பித்தம் தலைக்கேறிவிடும்' என்றாள் மாமி.

'என்ன மாமி, அப்படி என்ன விரோதம்?'

'அதன் மர்மம் தெரியவில்லை. உன் தாயார் என்றால் விஷம்தான். உன்னை அடித்ததைக் காட்டிலும் அதிகமாக உன் தாயாரை அடித்துவந்தான். அவளும் பிராணனை விட்டதே ஜன்மசாபல்யம் என்று சொல்லவேண்டும்.'

'இப்படியும்கூட உலகம் இருக்குமா?' 'அப்படியும் இருக்குதே. சிலருக்கு ஒற்றைப் பைத்தியம் வருவதுண்டு. எல்லாச் சங்கதிகளிலும் சாதாரண மனிதர்களாய் இருப்பார் கள். ஆனால் ஒரு விஷயம் வந்தால் சொல்லமுடியாத கோபம் வரும். உன் தகப்பனுருக்கு உன் தாயார் என்றால்

அப்படி இருக்கிறது.' 'தாயார்மேல் அப்படி இருந்தால் என்பேரில் ஏன் புகைச்சல்?'

'உன் முகசாடை, உன்குணம் எல்லாம் உன் தாயாரைப் போல் இருக்கிறது. அது உன் தப்பு.'

'இதுவும் என் தப்பா? ஐயோ தெய்வமே! நான் இறந்துவிடக்கூடாதா? ஏன் பிறக்கவேண்டும்?'

'நீ கல்யாணம் செய்துகொண்டு தனியே போய்விட்டால் இந்த நாகத்திலிருந்து தப்பித்துக்கொள்ளலாம்.'

'சரி அது நல்ல யோசனே. கல்யாணம் யார் செய்விப்பது?'

'பெண்ணே, நீயும் கொஞ்சம் படித்தவள். நல்ல படித்த ஆடவன் கிடைத்தால் அவனே மணம் செய்து கொண்டால் சங்கடம் தீரும்.'

'ஆமாம் மாமி, நீ சொல்லுகிறதுதான் சரியான வழி.' இவ்வாறு சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்து மாமி சென்ருள். பிறகு அவள் மகள் கமலா வந்து சுக்குக் கஷாயமும், கஞ்சியும் கொடுத்தாள். அதுவரை சாப்பிடாதவள் அப்போது சாப்பிட்டாள். உடலில் சுரமும் அன்றிரவு குறைந்தது. தூக்கமும் வந்தது.

சீதையும் புதிய கனவு கண்டுகொண்டிருந்தாள். கைகால் வலியும் குறையத் தொடங்கியது.

மறுநாள் பிற்பகலில் வீட்டில் எவரும் இல்லே. மாமி வந்தாள். உடம்பு தேவலே என்று அறிந்தாள். சீதைக்கோ தன் தகப்பனுர் நடவடிக்கை முழுவதும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசை இருந்தது. தனக்குத் தெரிந்தமட்டும் அம் மாமி சொன்னுள்.

தகப்பன் இளவயதிலேயே குடிப்பது மிகுதி. குடித்து விட்டால் மதிகெட்டுப்போகும். அவனுக்குக் கல்யாணம் செய்துவைத்தது அவன் தாயார். தனக்குப் பிடிக்காதவ

ளாகிய அத்தை மகளை முடிச்சுபோடச் செய்துவிட்டு இறந்துபோனாள். அவனுக்கு அவள் முகமே பிடிக்கவில்லை. அடிக்கடி அடித்துத் துன்பப்படுத்துவான். அதிலும் குடித்துவிட்டு வந்தால் வீடு ஒரே அமர்க்களம்தான். குடியாத நாளில் யாதும் நடக்காது. அவளுக்குக் குடியென்றால் வெறுப்பு. கணவனுக்குப் பலமுறை உபதேசம்செய்து வந்தாள். அதற்குப் பதில் அடிதான் விழும். குடியை தடுக்கிறாள் என்று அவள்மீது மிகவும் அழுக்காறு கொள்ளத் தொடங்கினான். இப்படியிருக்கையில் அரசியலார் குடியை ஒழித்துவிட்டார்கள். அவனுக்கு அதனால் மிகுந்த கவலை ஏற்பட்டது. குடிப்பதற்கு வழியில்லாமல் போனது அவள் தனக்கு மனைவியாகச் சேர்ந்த துரதிர்ஷ்டம் என்று எண்ணினான். அவள் அருகிலே வந்தால் குடியில்லாமல் கெடுத்தவள் என்று அவளைத் திட்டுவான். அதுவே அவனுக்கு ஒற்றைப் பைத்தியம்போல் ஆகி விட்டது. அதுமுதல் அவளை அடிப்பது மிகுதியாகி விட்டது. எங்கு எந்தத் தப்பு நேரிட்டாலும் அவளால் வந்தது என்று அடிப்பான். குடிநின்ற பிறகு தன் ஆபீஸில் பிசகுகள் ஏற்படுவது அதிகம் ஆயிற்று. அதற்கும் அவளே காரணம் என்று சொல்லி நிந்திப்பான். இப்படி இருக்க, அவள் கர்ப்பவதியாக இருக்கையில், படக்கூடாத இடத்தில் அடி பட்டதனால் அவளுக்குக் காயல் அதிகமாகிச் சில நாளில் இறந்துபோனாள். அவனுக்கு இன்னும் அவள்மீதுள்ள துவேஷம் போகவில்லைபோல் இருக்கிறது. ஏனெனில் அவள் பேர் சொல்லவே சீதையை அடித்தான் அல்லவா? இந்தக் கதையைக் கேட்டதும் சீதைக்கு முழுவிவரமும் தெரிந்தது. விரைவில் சீதை உடல் குணமாகிவிட்டது. தகப்பனும் சாந்தம் ஆகிவிட்டான். குடும்பம் எப்போதைப் போல் நடந்தது. ஊருக்குப் போன தமையனும் சில பரிசு

கள் வாங்கிவந்து தங்கைக்குக்கொடுத்தான். சீதை பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியோடு இருப்பதாகக் காணப்பட்டாள்.

ஒருநாள் காலை 9 மணி இருக்கும். வீட்டில் ஒருவரும் இல்லை. தகப்பனும், தமையனும் வேலைக்குப் போய்விட்டார் கள். சீதை வீட்டைச் சாத்திவிட்டுக் குடத்தை ஏந்திக் கொண்டு சிறிது தூரத்தில் இருந்த தெருக்குழாய் அருகில் குடத்தை வைத்து அருகிலே நின்று கொண்டிருந்தாள். மற்றவர்கள் நீர் பிடித்துக்கொண்டிருந்தார்கள். அவளோ அங்கிருந்து கிழக்கே பாதைவழி நடந்துசென்றாள். அதை ஒருவரும் பார்க்கவில்லை. மற்ற எல்லாரும் தண்ணீர் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். சீதையின் குடம் அங்கேயே இருந்தது. அவளைக் காணோம். தண்ணீருக்குப் போன கமலா, சீதையின் குடம் மட்டும் தனியாக இருப் பதைப் பார்த்துவிட்டு அதை எடுத்துக்கொண்டு போய் அவள் வீட்டில் சேர்த்துவிட்டாள். அன்று இரவு ஆகியும் சீதை வரவே இல்லை.

தகப்பன் வீடு வந்ததும், 'சீதா' 'சீதா' என்று கூப்பிட்டுப்பார்த்தான். சீதை அங்கு இல்லை. தமையனும் வந்து பார்த்தான். அவளைப்பற்றி ஒரு செய்தியும் கிடைக்க வில்லை. இரண்டு மூன்று நாள் ஆகியும் செய்தி கிடைக்க வில்லை. சமையலுக்குத் தன் மூத்த மகளை அழைத்துக் கொண்டான் தகப்பன். அவளோ பிள்ளைக்குட்டிக்காரி. இரண்டு நாள் இருந்துவிட்டு வெகு துயரத்துடன் கணவன் வீட்டிற்குச் சென்றாள். தமையனோ உறவுமுறையார் இருக் கும் ஊர்கள் சுற்றிவந்தான். துப்புக் கிடைக்கவில்லை.

தகப்பனுக்கு அப்போதுதான் கருக்கு என்று மன தில் பட்டது. அவள் வீட்டிற்குத் திருமகள்போல் இருந் தாள். இப்போது இல்லாமல் போய்விட்டாள். ஊரில் எல் லாரும் துக்கம் விசாரிக்க வந்தார்கள். அது கேட்கப்

பொறுக்கமுடியவில்லை. இப்போது உணவுக்கே லாட்டரி ஆகிவிட்டது. தான் செய்தது தப்பு என்று அறிந்தான். காரியம் முடிந்து போய்விட்டது. இனி பச்சாத்தாபப்பட்டு என்ன பயன்? இப்போது உண்மையான புத்தி வரத் தொடங்கியது.

ஊரார் பேச்சு பலவிதமாக இருந்தது. அவள் யார் பின்னாலோ ஓடிவிட்டாள் என்று சிலர் தூற்றினார்கள். அவள் குணம் அப்படியல்ல என்று மற்றவர்கள் கூறினார்கள். பலர் தகப்பனைத் திட்டினார்கள்.

கமலாவின் தாயார்மட்டும், தான் சீதை சுரத்தோடு படுத்திருக்கையில் கல்யாணம் செய்துகொண்டால் எல்லாச் சங்கடமும் நீங்கிவிடும் என்று சொன்ன புத்திமதி எங்குப் பலித்துவிட்டதோ என்று சந்தேகப்பட்டு வருந்தினாள்.

எது என்னவானால் என்ன? சீதை வீடுவந்து சேரவில்லை. அவள்வீடு திருமகள் மறைந்து மூதேவி புகுந்த வீடுபோல் இருந்தது.

—

10. யாத்திரா மார்க்கம்

அன்று மாலை ஏழுமணிக்குத்தான் குறிப்பிட்ட புகை வண்டி சென்னை நிலையத்திலிருந்து புறப்பட்டுப் போகிறது, அதுவரையில் என்ன செய்வது என்று யோசித்தாள் மரகதம்மாள். அன்று காலை வண்டியிலேயே சென்னைவந்து சேர்ந்துவிட்டாள். தன் மூட்டை முடிச்சுகளைப் புகைவண்டி நிலையத்திற்கு அடுத்த ஓர் உணவு விடுதியிலே வைத்து விட்டு மயிலை கபாலீசர் கோயிலுக்கும், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலுக்கும் சென்று வழிபாடு செய்து விட்டு விடுதிக்குத் திரும்பினாள். பகல் உணவு அருந்தி விட்டுத் திருவொற்றியூர் சென்றாள். அங்கே படம்பக்க நாதரையும் திரிபுரசுந்தரியையும் நெஞ்சாரத் தொழுது விட்டுக் கடலோரம் பட்டினத்தார் சமாதிக்குச் சென்றாள். 'முற்றுந்துறந்த துறவிகளே, என்னையும் தங்களுடன் சேர்த் துக்கொள்ளுங்கள்; இப்பொல்லா உலகில் இல்லறம் என்பது நல்லறம் ஆகுமா? துறவறமே நல்லறமென்று காட்டினீர்கள் அன்றோ' என்று கண்ணீர் பெருக அழுது தொழுதுவிட்டுப் புகைவண்டி நிலையத்திற்குத் திரும்பினாள். வழியில் கண்ட மனிதக் கும்பல்கள், கடைத்தெருக் கோஷங்கள், ஆடல் பாடல் சாலைகள், விளையாட்டிடங்கள் இவைகள் எல்லாம் அவள் கண்களில் படவேயில்லை. மனதை அரித்துக்கொண் டிருந்த ஓர் ஆழ்ந்த கவலை அவளை விழுங்கிக்கொண்டிருந் தது. 6 மணிக்கே வண்டியடிக்கு வந்துவிட்டாள்.

ஏழுமணிக்குப் புறப்படும் வண்டி ஒரு தனி வண்டி. வடநாட்டுப் புனிதஸ்தலங்களைச் சுற்றிக்காட்டும் யாத்திரா மார்க்க வண்டி. ஒரு கூட்டுச்சங்கத்தார் யாத்திரிகளின் சவுகரியத்திற்காகத் தனிமையாகக் கட்டணங்களை ஏற்படுத்தி யிருந்தார்கள். புண்ணிய ஸ்தலங்களில் வழிபாட்டிற்கு

ஏற்றபடி வேண்டிய நேரம் நிறுத்தி அங்கிருந்து மீண்டும் அதே வண்டி புறப்பட்டுவந்த இடத்திற்கே சேரக்கூடிய வசதி செய்திருந்தார்கள். உணவு, துணை ஆட்கள், வைத்தியம், சங்கீதம், வானொலி முதலிய எல்லா வசதிகளும் அதிலேயே செய்யப்பட்டிருந்தன. மாகதம்மாள் அதில் ஒரு தனியிடம் அமர்த்திக்கொண்டிருந்தாள். நிலையத்திற்கு 6 மணிக்கே சென்று தனக்கு என்று ஏற்படுத்தியிருந்த பெட்டியில் தன் சாமான்களை அமைதியாக வைத்துக் கொண்டு அதில் அமர்ந்தாள். மற்ற யாத்திரிகளும் ஒவ்வொருவராய்த் தங்கள் பெட்டிகளுக்குச் சென்று அமர்ந்தார்கள். அவர்களில் ஆண், பெண், குழந்தைகள் சகிதமாக இருநூறுபேர் ஏறியிருந்தார்கள். சங்கத்தின் அதிகாரி தன் சேவகர்களுடன் ஒரு தனிப்பெட்டியில் ஏறினான். அவன் பெட்டிக்கு அடுத்து இருந்தது அவனுடைய அலுவலகம். பிரயாணிகள் அந்த அறையில் எப்போதும் நிரம்பிய வண்ணமாக இருந்தார்கள். அங்கேதான் வேண்டிய சவுகரியங்கள் செய்து கொடுக்கப்பட்டன.

வண்டியில் இருந்த யாத்திரிகள் எல்லோரும் தமிழ் நாட்டு மக்கள். சிலருக்குத் தாய்மொழி வேறாக இருப்பினும் எல்லோருக்கும் தமிழ் தெரியும். மேலும் பெரும்பாலும் புனிதத் தலம் தரிசிக்கவேண்டும் என்ற கருத்துடனே சென்றவர்கள். ஆகவே, மன ஒற்றுமை இருந்தது. சிலபேர்கள் நாட்டையும், ஊர்களையும் கண்டு மகிழ வேண்டுமென்ற எண்ணமும் கொண்டவர்கள்; சிலபேர்கள் வேறு எண்ணத்துடனும் சென்றிருக்கலாம். மாகதத்திற்கோ அத்தனை பேர்களையும் ஓர் இடத்தில் தரிசித்து, அவர்கள் குணதிசயங்களை அறிந்துகொள்ளும் சமயம் வாய்த்ததே என்ற திருப்திவந்தது. ஆகவே, தன் நெஞ்சுள் எழுந்த புகைச்சலை மறைத்துக்கொண்டு பிரயாணிகளுடன்

தெளிவாக உரையாடவும் இருந்தாள். இரவு புறப்பட்ட வண்டி காலையில் குண்டக்கல் சேர்ந்தது. அங்கே சிற்றுண்டி தரப்பட்டது. பிறகு முற்பகலிலேயே துங்கபத்திரை நதி சென்றது. அங்கே எல்லோரும் இறங்கி அந்த நதியில் நீராடினார்கள். வழிபாடானவுடன் உண்டி அருந்திவிட்டு வண்டி ஏறினார்கள். மறுநாள் காலையில் பண்டரீபுரம் சேர்ந்தார்கள். அங்கே வண்டி இரண்டுநாள் தங்கிற்று. ஆலயத்திற்கு அருகே ஒரு நல்ல விடுதி அமைக்கப்பட்டது. அங்கிருந்து சந்திரபாகா நதியில் நீராடியும் ஆலயத்தில் விடோபா, ருக்மாஜி முதலிய மூர்த்திகளைத் தொழுதுவிட்டும் விடுதியில் தங்கினார்கள். அங்கே மரகதத்திற்குப் பல பேர் நட்பு ஏற்பட்டது. அங்கிருந்த அனாதைக் குழந்தை விடுதியைத் தரிசித்த பிறகு மனதில் துக்கம் மிகுதியும் கொண்டாள்.

'மக்கள் ஒழுக்கத்துடன் இருந்தால் இங்கே ஏன் தம் குழந்தைகளை விடச் சம்மதிப்பார்கள்' என்று மிகவும் கிலேசப்பட்டாள்.

யாத்திரிகளில் ஓர் உபாத்தியாயினி இருந்தாள். வயது 35 இருக்கும். வெகு நன்றாய் அழகுபடுத்திக்கொள்வாள். ஆனாலும் திருமணம் ஆகவில்லை. காரணமும் தெரியவில்லை. தன்னுடைய வேலையைத் தவிர மற்றவர்கள் வேலையில் அவள் நோக்கம் கொள்ளுவதில்லை; பேசுவதும் இல்லை. அவள் பெயர் வள்ளியம்மாள். அதே கோஷ்டியில் இரண்டு தம்பதிகள் இருந்தார்கள். கணவன் வியாபாரி. மனைவி மிகச் சாது. குழந்தைகள் இல்லை. ஆகவே காசி யாத்திரை புறப்பட்டார்கள். அவர்கள் கந்தப்பனும் தெய்வானையும் ஆவார்கள். வெகு அன்போடும் அன்னியோன்னியமாகவும் இருந்தார்கள். அவர்கள் வயது 45-ம் 40-ம் இருக்கலாம். அன்று கோயிலில் எல்லோரும்

தரிசனம் செய்துகொண்டிருக்கையில் கந்தப்பன் வள்ளியம்மையை அடிக்கடி பார்த்துக்கொண்டே இருந்தான். இதனை நமது மரகதம் கண்டுகொண்டாள். 'இதனைத் தெய்வானை காணுமல் இருப்பாளா? கண்டுகொண்டால் என்ன எண்ணுவாளோ?' என்று நினைத்தாள். தெய்வானை அதனைக் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. யாத்திரையாகச் செல்லுகிறவர்கள் மனது பரிசுத்தமாக இருக்கவேண்டும் அல்லவோ? மனது கோணிவிட்டாலும் செய்கை பிசகிவிட்டாலும் யாத்திரையின் பலன் என்ன ஆகும் என்று எண்ணினுள் மரகதம்மாள்.

மரகதம்மாள் 40 வயதானவள். ஒரு பெருத்த வர்த்தகனுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தாள். இருவரும் இளமையின் அழகில் ஈடுபட்டவர்கள்தான். ஆனல் குழந்தைகள் இல்லை. சொக்கலிங்கம் வர்த்தகத்திலே மேலுக்கு மேல் செல்வீகம் பெற்றுவந்தான். தன் மனைவி மரகதத்திற்கும் வேண்டியமட்டும் நகைநட்டு பணம் கொடுத்துவந்தான். வெகு பிரியத்துடன்தான் அவளை நடத்திவந்தான். அவனுக்கு நாற்பத்தைந்து வயதிருக்கும். அவ்வூருக்குப் பரிமளம் என்ற ஒரு டாக்டர் அம்மாள் வந்து வைத்திய சாலையில் வேலைபார்த்தாள். அவள் சொக்கலிங்கத்திற்கும் மரகதத்திற்கும் ஒருவேளை கை பார்க்கவந்தாள். ஏதோ மந்தத்தினுல் வயிறுபோக அதனைப் பார்க்க அழைக்கப்பட்டாள். இருவரும் சௌக்கியம் அடைந்தார்கள். அதுமுதல் சொக்கலிங்கமும் பரிமளமும் அடிக்கடி சந்திப்பதுண்டு. இது ஊரிலேயே பேச்சாகிவிட்டது. மரகதத்தின் காதிற்கும் எட்டிற்று. மரகதம் புகைச்சல் அடைந்தாள். தன் கணவனிடம் கேட்கவும் முயன்றுள். ஆனல் கேட்கவில்லை. சிலநாளில் அவர்கள் சந்தித்ததைத் தான் நேரிலும் கண்டு

விட்டாள். அவளுக்கோ பொறுக்க முடியவில்லை. ஒருநாள் இரவு கேட்டுவிட்டாள்.

'பரிமளம் என்னைவிட இரண்டுவருடம் மூத்தவள். அழகும் இல்லை. அவளிடம் எப்படி நீர் பேசலாம்?'

'பேசினால் என்ன தப்பு? இதை ஏன் நீ கவனிக்க வேண்டும்? உனக்கு என்ன குறைவு?'

'அப்படியா? குறைவு என்பது அல்ல. கற்புள்ளவர்களுக்கு அது அடுக்குமா?'

'இதை யெல்லாம் நீ நினைக்கவேண்டாம், உன் வேலையைப் பார்த்துக்கொள்' என்றான்.

'அது எல்லாம் கூடாது. இன்றுமுதல் அவளோடு பேசக்கூடாது. இல்லாவிடில் விபரீதம் ஏற்படும்' என்று சீறிக்கொண்டு தனியே படுத்துக்கொண்டாள்.

இந்தப் பேச்சைச் சொக்கலிங்கம் பொருட்படுத்தவே இல்லை. சிலநாள் ஆயிற்று. ஊரில் அவர் பேச்சு அதிகம் ஆயிற்று. பரிமளமும் சொக்கலிங்கமும் திரைப்படங்களுக்குச் சேர்ந்தே போகத் தொடங்கினார்கள்.

அதையும் கண்டுகொண்ட மரகதம் இனிப் பலனில்லை. தான் பிரிந்துதான் போகவேண்டும் என்று எண்ணி ஒருநாள் இரவு சொக்கலிங்கத்துடன் சண்டைபிடித்தாள். ஆனால் சொக்கலிங்கம் எது வேணுமென்றால் செய்யட்டும் என்று சொல்லி ஒன்றும் கவனியாதவன்போல் இருந்துவிட்டான்.

தான் ஜீவனும்சம் பெற்றுக்கொண்டு காசியாத்திரை செய்து அங்கே கங்கையில் விழுந்து இறக்கவோ, அல்லது ஹரித்துவாரத்தில் சன்னியாசினியாக ஆகவோ நினைத்தாள். பணம் கேட்டதற்குச் சொக்கலிங்கம் தடையின்றிக் கொடுத்துவிட்டான். அப்போது யாத்திரை மார்க்கம் வண்டி புறப்படுவதாக விளம்பரம் வந்தது. அதில் புறப்படு

வதற்கு ஏற்பாடு செய்துகொண்டு மரகதம் தனியே புறப் பட்டுவிட்டாள்.

அப்படி எண்ணிக்கொண்டு புறப்பட்ட மரகதம் மக்க ளுடைய போக்குகளை நேரில்கண்டு அறிவதற்கு இந்த யாத்திரைக் கோஷ்டிப் புனிதமக்கள் வேண்டிய அனுபவங் களைக் காட்டித் தந்தார்கள். 'தெய்வானை என்ற அழகிய பெண்சாதியை வைத்துக்கொண்டு கந்தப்பன் வள்ளியின் மீது ஏன் ஆவல் கொள்ளுகிறான்?' என்று மரகதம் நினைத் தாள். அதுமுதல் அவர்களின் செயல்களை முற்றும் கவனித்துவந்தாள். கந்தப்பனுடைய லீலைகளைத் தெய்வானை அறிந்தும் சிறிதுமே கோபித்துக்கொள்ளாமலும் மார்ச்சரி யப்படாமலும் அவனைப் பிரியத்தோடும் பாராட்டுகிறாளே என்று வியப்பு அடைந்தாள்.

யாத்திரிகளிலே முருகப்பன் என்ற ஒரு செல்வன் இருந்தான். அவன் மலேயாவிலே மிகுந்த செல்வம் சம்பாதித்துச் சென்னைக்குவந்து வெகு உல்லாச வாழ்க்கை நடத்த எண்ணிவந்தான். ஆள் நல்ல கட்டு உடல் படைத் தவன். இரப்பர் தோட்டத்தில் பண்ணை ஆளாகச் சென் றவன், இருபது ஆண்டுகளாக நன்றாய் உழைத்துப் பெரும் சொத்துச் சேர்த்துக் கொண்டுவந்தான். அவனுடனே மணியன் என்ற நம்பிக்கை ஆள் ஒருவன் இருந்தான். அவனையும் அழைத்துக்கொண்டு காசியாத்திரை செய்ய வந்தான். அவனுக்கு வேண்டிய சௌகரியங்களை வெகு ஒழுக்கமாக மணியன் பார்த்துவந்தான்.

முருகப்பன் வெகு தாராளமாகச் செலவுசெய்துவந் தான். சென்ற இடங்களில் எல்லாம் பிச்சைக்காரிகளுக்கும் ஏழைகளுக்கும் அன்னதானம் செய்வான். வெகு பக்தி யோடு வழிபாடு செய்வான். விசேஷ பண்டிகை நாட்கள்

புனித நாட்கள் வந்தால் தன் கோஷ்டி முழுதிற்கும் விருந்து அளிப்பான். அதனால் அவனைக் கண்டால் எல்லோரும் அவனிடம் சாதாரணமாகப் பேசத் தொடங்கினார்கள். மாரகதமும் அவனிடம் பேசத்தொடங்கினாள். அவனுடைய அந்தரங்கத்தை அறிய விரும்பினாள்.

ஒருநாள் புனாவில் தங்கியிருந்தபோது முருகப்பன் உள்பட எல்லோரும் பார்வதி மலைக்குத் தரிசனம் செய்யச் சென்றார்கள். மரகதத்திற்குச் சிறிது தலைவலி எடுத்தது. தன் விடுதியிலேயே தங்கிவிட்டாள். மணியனோ தன் தலைவனுக்குச் சில சாமான்கள் வாங்கத் தங்கிவிட்டான். இதுதான் உளவு அறிய சமயம் என்று மாரகதம் மணியனிடம் சென்றாள். 'மணியா, சிறிது தலைவலிக்கிறது. அமிருதாஞ்சனம் இருந்தால் கொடு' என்று வினயமாகக் கேட்டாள்.

'அம்மா இதோ எடுத்துக்கொள்ளுங்கள்' என்று சொல்லி ஒரு டப்பி கொடுத்தான். அதை நெற்றியில் தடவிக்கொண்டு, 'அப்பா, இப்போதுதான் சுமாராக இருக்கிறது. உன் தலைவன் வெகு தாராளமாக இருக்கிறானே, அவனுடைய மனைவியை இந்த யாத்திரைக்கு அழைத்து வரக்கூடாதா?' என்றாள்.

'அம்மா, அது தெரியாதா? அவருக்கு இன்னமும் கல்யாணம் ஆகவில்லை.'

'அப்படியா, என்ன வயது? 45 இருக்குமே? அவர் இன்னமும் கல்யாணம் பண்ணிக்கொள்ளவில்லையா?'

'இல்லையம்மா. அவர் சம்பாதிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார். தவிர அவர் இருந்தது மலேயா. அங்கே அவருடைய இனத்தார் இல்லை. பணம் சம்பாதித்த பிறகு இங்கே வந்து திருமணம் செய்துகொள்ளலாம் என்று இருந்தார். இனிமேல் நல்ல இடம் பார்த்துச் செய்து கொள்ளுவார்.'

‘அப்படியானால் வந்ததும் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யாமல் ஏன் காசி யாத்திரைக்குப் புறப்பட்டார்? சம்பிரதாயக் காசியாத்திரைக்குப் பிரதியாக உண்மைக் காசி யாத்திரை செய்கிறாரோ?’

‘அது ஒன்றும் இல்லை. இரகசியம் வேறு.’

‘அப்படி என்ன இரகசியம்?’

‘அதைச் சொல்லுவது சரியல்ல.’

‘இல்லை மணியா, சொல்லு பார்ப்போம். நான் யாரிடமும் சொல்லுவது இல்லை. சத்தியம்.’

ஒரு பெண் சத்தியம்செய்து கேட்கும்போது மணியன் சொல்லாமல் இருக்கமுடியவில்லை.

‘அம்மா ஒருவரிடமும் சொல்லக்கூடாது. முருகப்பன் மலேயாவில் இருந்தபோது ஒரு மலேயாப் பெண்ணை வைப்பாக வைத்திருந்தான். அவளுக்கு நிரம்பப் பணமும் நகையும் சொத்தும் கொடுத்திருந்தான். சென்னைக்கு வந்து இங்கே கலியாணம் செய்துகொண்டு வாழ்வதாக நிச்சயித்தவுடன் அவளுக்கு மீண்டும் பணம் கொடுத்துச் சொத்தும் கொடுத்து விடை பெற்றுக்கொள்ள விரும்பினான். அதற்கு அவள் சம்மதிக்கவில்லை. என்னை அனாதையாக விட்டுச் சென்றால் நீவாழமாட்டாய், மறுமணம் செய்துகொள்வதற்குள் நீ பிணமாவாய் என்று சபித்து விட்டாள்; அவனுக்கோ சாபத்தில் நம்பிக்கை இல்லை. சிரித்துவிட்டுக் கப்பல் ஏறி இங்கு வந்துவிட்டான். இதுதான் செய்தி’ என்றான் மணியன்.

இதைக் கேட்டதும் மிகவும் ஆச்சரியப்பட்டாள் மரகதம்மாள். தன்னை அந்த மலேயா பெண்ணுக்கு ஒப்பிட்டுப் பார்த்தாள். அவள் சபித்தது சரிதான் என்றும் எண்ணினாள். ஆனால் அவள் புருஷன் அவளுக்கோ பணம்

கொடுத்துவிட்டு வந்தான். தானே சன்னியாசினியானுல்' எல்லாம் துறக்க வேண்டும் என்று எண்ணினுள்.

'சரி, பிறகு என்ன ஆயிற்று ? இங்கு வந்ததும் கலியாணம் செய்துகொள்ள ஏற்பாடு செய்தானு?' 'ஆம். முதலில் சோதிடர்களேக் கேட்டான். இப்போது நல்லதிசை இல்லே. ஏதாவது சாந்தி செய்ய வேண்டும்' என்ருர்கள். அவருக்கோ இப்போதுதான் நெஞ்சில் கருக்கு என்று ஆயிற்று. சில ஜோதிடர்கள், 'காசி யாத்திரை செய்தால் தோஷம் போகும் என்ருர்கள். அதனுல்தான் காசி யாத்திரை செய்யப்புறப்பட்டார்' என்று சொல்லி முடித்தான். அவனுடைய தருமம் தாராள விருந்து இவைகளுக்கு இப்போதுதான் பொருள் விளங்கிற்று.

புகைவண்டி பல தலங்களேப் பார்த்துக்கொண்டு சென்றது. பம்பாய், நாசிக், நருமதை முதலிய இடங்களேத் தரிசித்துக்கொண்டு புஷ்கரம் என்ற புனித இடத்திற்குச் சென்றது. அங்கே எல்லாரும் இறங்கி, புஷ்காம் என்ற பெரிய தீர்த்தத்தில் நீராடினுர்கள். தர்ப்பணம் முதலியவைகளேச் செய்தார்கள். தென்னிந்திய மக்கள் நீரில் வெகு ஆழம் செல்லாமல் கரையிலிருந்து கொண்டே சடங்குகளே முடித்துக்கொண்டார்கள். அங்கிருந்த பண்டாக்கள் யாத்திரிகளே எச்சரிக்கை செய்து ஆழத்தில் போகக்கூடாது, போனுல் முதலேகள் கொன்றுவிடும் என்ருர்கள். முருகப்பனே வெகு தைரியசாலி. மலேயாவில் பெரிய நதிகள் குளங்கள் முதலியவைகளில் நீந்திக் குளிப்பான். இந்தப் பெரிய ஏரியைக் கண்டதும் வெகு மகிழ்ச்சியோடு உள்ளே குதித்து நீச்சம் அடிக்கத் தொடங்கினுன். பண்டாக்கள் ஓலம் இட்டார்கள். ஆனுல் அவன் மதிக்கவில்லே. சிறிது தூரம் சென்றதும் ஒரு பெரிய முதலே அவன் காலேக் கவ்விக்கொண்டு ஆழத்திற்கு இழுத்துச் சென்றது. மக்கள்

திடுக்கிட்டார்கள். நீர் மட்டத்தில் இரத்தப் பெருக்கு எடுத்தது. ஆளைக்காணோம். பண்டாக்கள் உடனே பெருங்கற்கள் தடிகள் இவைகளால் நீரைக் கலக்கினார்கள். சிறிது நேரத்தில் முதலைகள் ஓடிவிட்டன. ஆனால் உடலைக்காணோம். மணியன் அழத்தொடங்கினான். யாத்திரிகள் திண்டாடினார்கள். மணியன், செய்தி தெரிந்து பண்டாக்களுக்குப் பணத்தை எறிந்தான். உடனே அவர்கள் இரும்பு வலைகளைக் கொண்டுவந்து துழாவினார்கள். வெகு நேரம் தேடின பிறகு முருகப்பனுடைய உடல் கிடைத்தது. உடலில் ஒரு பகுதியும் இரண்டு கால் சதைகளும் தின்னப்பட்டிருந்தன. அன்று ஒரு பெரிய துக்கநாள் ஆயிற்று.

'மலேயா பெண்ணின் சாபம் பலித்தது' என்று மணியன் அறிந்தான்; மரகதமும் அவ்வுண்மையை அறிந்தாள். மற்ற ஆள்களுக்குத் தெரியவில்லை.

முருகப்பனுக்கு அங்கேயே சாமக்கிரியைகள் செய்யப்பட்டன. யாத்திரிகளிடம் வெகு அன்னியோன்னியமாக அவன் இருந்ததினால் எல்லாரும் துக்கம் பாராட்டி அவனுடைய கிரியைகளுக்கு வந்திருந்தார்கள். அவன் உடல் எரியும்போது எல்லாருடைய கண்களிலிருந்தும் கண்ணீர் தாரை தாரையாகப் பெருகிற்று.

மரகதம் அந்தக் கூட்டத்தில் முதலிலிருந்து இறுதி வரையில் இருந்தாள். அவளுடைய நெஞ்சு அடைந்த கலவரத்தை என்ன என்று சொல்வது? மற்ற எல்லா யாத்திரிகளைவிட அவளுக்கு முருகப்பனுடைய அந்தரங்கச் செய்திகள் அதிகம் தெரியும். மலேயாப் பெண் கொடுத்த சாபம் பலித்தது சரியென்று ஒருபுறம் கருதுவாள். அவன் ஏன் அவளைப் புறக்கணிக்க வேண்டும் என்பதே அவள் கேள்வி? ஆனால் மற்றொரு புறம் என்னமாக இருந்தாலும் அவளுக்கு வேண்டிய வசதிகள் செய்துவிட்

டுத்தானே வந்தான். இவனுக்கு இத்தனை கொடிய தண்டனையா? என்று கண்ணீர் விடுவாள்.

தகனம் நடந்தபோது சுற்றிலும் இருந்த யாத்திரிகளைப் பார்த்தாள். ஒவ்வொருவர் முகத்திலும் திகிலும் அச்சமும் தோன்றிற்று. கந்தப்பனைப் பிடித்துக்கொண்டு தெய்வயானை நின்றுகொண்டிருந்தாள். கந்தப்பனும் அவளைத் தாங்கிக்கொண்டிருந்தான். வள்ளி தனியாகத் தொலைவில் மிகுந்த அச்சத்தோடு நின்று கொண்டிருந்தாள். கந்தப்பனுடைய ஒழுங்கீனம் தெரிந்திருந்தும் தெய்வானை அவனை விடாமல் போற்றுகிறாளே என்று மரகதம் ஏங்கினாள். 'இவ்விதம் இருப்பதனால் இருவருக்கும் தைரியமும் திருப்தியும் உண்டாகிறதல்லவா? இருவரையும் கண்டால் நான் செய்தது தப்பு என்றும் தோன்றுகிறதே? எனது கணவன் வேறொரு பெண்ணை இச்சித்தால் எனக்கென்ன? நான் மாச்சரியம் கொண்டது வீண் அல்லவா?' என்றும் எண்ணத் தொடங்கினாள். முருகப்பனுடைய துர்மரணம் அவளுடைய நெஞ்சின்போக்கையே மாற்றத் தொடங்கியது.

மறுநாள் புகைவண்டி புறப்பட்டது. பல தலங்களையும் சுற்றிக்கொண்டு காசி யடைந்தது. அங்கே எல்லாரும் கங்காநதியில் குளித்துவிட்டு விசுவநாதரை வழிபட்டு நின்றார்கள். ஒருநாள் எல்லோருமாகக் கங்கையில் பிதிர்த் தர்ப்பணம் செய்தார்கள். தம்பதிகளாக வந்தவர்கள் தம்பதி சமேதராக அச்சடங்குகளைச் செய்தார்கள். கந்தப்பனும் தெய்வானையும் உடன் பிரியாது ஒருமித்து அந்தச் சடங்கைச் செய்வதை மரகதம் கவனித்தாள். வள்ளியைப் பற்றி அவர்கள் நினைக்கவே இல்லை. அவளோ தனிமையில் சடங்கு செய்தாள். மரகதமும் தர்ப்பணம் செய்யவேண்டி வந்தது. அதைத் தனியே செய்யவே அவள் மனம் வெறுத்தது. தனக்கு ஒரு கணவன் இருந்தும் இவ்வாறு உலக

நீதியை அனுசரித்துத் தனியே செய்யவேண்டி இருக்கிறதே என்று மனம் நொந்தாள். நான் ஏன் இதுவரை நடந்ததை மறந்து கணவனிடம் சேர்ந்து சுகத்துடன் வாழக்கூடாது ? என்றும் எண்ணினுள். கங்கையில் கண்ட காட்சி அவள் மனதைத் திருப்பிவிட்டது. நீராடினதும் எல்லோரும் கோயிலுக்குச் சென்றுர்கள். மாகதமும் சென்றுள். அங்கே இறைவன் முன்னிலையில் மனஉறுதி செய்துகொண்டாள். ‘ என்ன எப்படிப்பட்ட செயல்கள் நடந்தாலும் தன் கணவனை விட்டுப் பிரிகிறதில்லை ’ என்றும் உடனே ஊருக்குத் திரும்பிக் கணவனுடன் சேர்ந்து இல்லறம் நடத்துவதென்றும் உறுதி எடுத்துக்கொண்டாள்.

மறுநாள் உடனே தன் கட்டணத்தை ரத்து செய்து கொண்டு நெல்லைக்குப் புறப்பட்டாள். புறப்படும் முன்னரே தான் ஊருக்குத் திரும்புவதாகவும், தன் குற்றத்தை மன்னித்துவிட்டுத் தன்னை ஏற்றுக்கொள்ளும்படிக்கும் தாழ்ந்த வணக்கத்துடன் தன் கணவனுக்கு ஒரு நிருபம் எழுதி விசுவநாதர், விசாலாட்சி, அன்னபூரணி அர்ச்சனை பிரசாதத்துடன் அனுப்பினுள். அது முதல் முகம் மலர்ச்சி அடைந்தாள். வெகு மகிழ்ச்சியுடன் ஊர் திரும்பினுள்.

——

11. கொலுவில் திருட்டு

பத்மாவதி அம்மாள் அந்தச் சிற்றூரிலே நிரம்பப் பணக்காரி. அவளுக்கு மாரி என்ற நம்பிக்கை உள்ள ஒரு வேலைக்காரி உண்டு. பத்மாவதி திருமணம் செய்துகொண்டு இந்த ஊருக்கு வந்தது முதற்கொண்டே மாரியும் அவளுடனே வந்துவிட்டாள். ஒரு மணப்பெண்ணுக்குச் சீதனச் சொத்துக்கள் உடன்வருவதுபோல் அவளும் ஒரு சொத்தாக வந்தாள் என்று ஊரில் சொல்லுவார்கள். தன் தலைவியின் மனம் கோணாமல் வெகு அன்போடு அவளுக்கு வேண்டிய வேலைகள் முற்றும் செய்வாள். இப்படி இருக்கையில் அச்சிறு குடும்பம் வெகு அமைதியாகவும் நன்றாகவும் நடைபெற்றது என்றால் மிகை அல்ல.

பத்மாவதி ஒவ்வொரு ஆண்டிலும் நவராத்திரியின் போது வெகு அழகாகக் கொலுவு வைப்பாள். மிக அருமையான விக்கிரகங்கள் பொம்மைகள் முதலியவைகளை நன்றாகச் சோடித்து ஒரு பெரிய அறையில் கொலு வைப்பாள். ஒன்பது நாளும் நாளுக்கு ஒருவிதமாகச் சோடனை செய்வாள். ஊரார் எல்லோரும் ஆண், பெண், குழந்தை முதற்கொண்டு தவறாமல் வந்துபார்த்து மகிழ்வார்கள். அக்கம் பக்கத்து வெளியூர்க்காரர்களும் நடந்துவந்தும் பார்த்து மகிழ்வார்கள் என்றால் அதன் பெருமை சொல்லவும் வேண்டுமா ?

பத்மாவதியின் கொலுவில் மற்றொரு சிறப்பு இருந்தது. ஒவ்வொருநாளும் ஒவ்வொரு தின்பண்டம் செய்து வைத்துப் பார்க்கவருபவர்களுக்கு அவற்றை வழங்குவாள். அதற்காக எல்லா மக்களும் பூசை முடியும்மட்டும் இருந்து விட்டு, பிரசாதம் வாங்கிக்கொண்டு போவார்கள். ஒருநாள் கடலைச்சுண்டல், மறுநாள் பச்சைப்பயிற்றுச் சுண்டல், மறு

நாள் சீடை இவ்விதமாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான பலகாரம் கிடைக்கும். ஆகவே, பத்மாவதி கொலுவு என்றால் சிற்றூரைச் சுற்றிலும் வெகு கிராமங் களில் அது மிகப் புகழ்பெற்று விளங்கிற்று.

பெரிய குடும்பங்களிலே கொலுவு வைக்கிறதென்றால் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொருவிதமாகப் புதுப்புது பொம் மைகளை வாங்கிவைப்பார்கள். கொலுவைக் கலைக்கும்போது பாதிப்பொம்மைகள் காணமல்போய்விடும். ஆனால் பத்மாவதி யின் கொலு அப்படிப்பட்டதல்ல. சாமான்கள் அருமையான வைகள். அவைகளை மிக அருமையாக அவள் பாதுகாத்து வந்தாள். கொலு முழுவதும் அவளும் மாரியும் அருகிலேயே இருந்து கொண்டு எவரும் எதையும் தொடாதபடி ரோந்து பார்ப்பார்கள். ஒரு கொலுவிலும் ஒரு சிறு துரும்பும் காணு மல் போனதில்லை. மேலும் தன் சாமான்களுக்கு ஒரு பட்டி எழுதிவைத்துக்கொண்டு அந்தப் பட்டியின்படி எல்லாம் இருக்கிறதா என்று வெகு சாக்கிரதையாகக் கணக்குப் பார்ப்பாள். கொலு வைக்கும்போதும் எடுக்கும்போதும் இந்தப்படிக் கணக்குப் பார்ப்பதற்கே ஒரு நாள் பிடிக்கும். முழுதும் கொலு வைக்கத் தொடங்கினது முதல்கொண்டு எதுவும் இழக்கவில்லை என்று பெருமை பேசிக்கொள்வாள்.

எப்போதைப்போல இந்த ஆண்டும் பத்மாவதி கொலுவு வைத்தாள். ஊரார் எல்லோரும் வந்து பார்த்துத் தின்பண்டங்களை வாங்கி உண்டுவிட்டு அவளைப் புகழ்ந்து விட்டு வீடு சென்றார்கள்.

ஒன்பதுநாள் கொலுவு முடிந்ததும் பத்தாநாள் விஜய தசமி யன்று நன்றாகப் பூசைசெய்து வணங்கிவிட்டுப் பதி னொன்றுநாள் கொலுவைக் கலக்கி எடுத்தாள். வழக்கம் போல் பொம்மைகளை வரிசையாக எடுத்துப் பட்டியுடன் ஒத்துப்பார்த்து, பெட்டிகளில் வைத்துப் பூட்டத்தொடங்கி

ளுள். பத்மாவதியும் மாரியும் இவ்வேலை செய்துகொண்டிருந்தார்கள். அப்போது சுப்பி என்ற அவ்வூர் வண்ணாத்தி சலவை கொண்டுவந்தாள்.

'என்னடி வேலையில் இருக்கும்போது வந்தாய்' என்று சுளித்தாள் பத்மாவதி.

'இல்லை அம்மா! தாங்கள் வேலையில் இருப்பது தெரியாது. தொந்தரவு செய்யவில்லை, இங்கே வைத்துவிட்டுச் செல்லுகிறேன்' என்று சொல்லிவிட்டுச் சற்றுநேரம் பொம்மைகளை எடுப்பதைப் பார்த்துவிட்டுத் தன் வீட்டிற்குச் சென்றாள். பத்மாவதியும் மாரியும் வெகு கவனமாகப் பொம்மைகளை எண்ணி வைத்துக்கொண்டே இருந்தார்கள்.

அப்படி இருக்க, எலிக்குட்டிகளிலே ஒன்று இருக்கவில்லை. திரும்பியும் எண்ணினாள்; ஒன்று குறைவாக இருந்தது.

'மாரி, எலிக்குட்டிகளை எண்ணிப்பார். ஒன்று குறைகிறதே' என்றாள்.

'அம்மா, உண்மையா, அது போகக் காரணம் இல்லையே?'

'பாரடி, எனக்கும் விளங்கவில்லையே?'

இருவரும் மறுபடியும் முழுதும் தேடினார்கள். உண்மையில் எலிக்குட்டி ஒன்று காணவில்லை. இருவருக்கும் அடக்கமுடியாத கவலை ஏற்பட்டது.

அப்படி அதன்விலை பிரமாதமாக இல்லை. அந்தப் பித்தளை எலிக்குட்டி இரண்டு அணா இருக்கும். விலையைப் பற்றிப் பத்மாவதிக்குக் கவலை இல்லை. ஆனால் என்றைக்கும் நடக்காத அபவாதம் நடந்துவிட்டதே என்ற கவலையே மிகுதி. தன் வீட்டின் பெரும் புகழுக்கு இழுக்கு நேரிட்டதே! யார் இதனைத் திருடுவார்கள்? ஒருவரும் வீட்டிற்கு வரவில்லையே! வண்ணாத்தி ஒருத்தி மட்டும் வந்தாள்.

அவளும் திருடி அல்ல. சென்ற பத்து ஆண்டுகளாக வெகு நன்ருகத் துவைப்பாள். ஓர் உருப்படியும்கூடப் போட்டது இல்லை. அவளைப்பற்றி எவருக்கும் சந்தேகம் இல்லை. அவளும் சில விநாடிகளுக்குள் சென்றுவிட்டாள். ஆகவே எப்படி அவள்மீது சந்தேகம் ஏற்படும். ஆயினும் கவலையோ போகவில்லை. அது மிகுந்தது.

பத்மாவதி வீட்டில் ஏதோ அதிசயமாகப் பேச்சு வார்த்தை முழங்கியதை அறிந்தார்கள் அடுத்தவீட்டார்கள். அவர்களும் ஒவ்வொருத்தியாகத் தத்தம் ஜன்னல் கதவுகளைத் திறந்து எட்டிப் பார்த்தார்கள்.

'பத்மாவதி அம்மா, என்ன விசேஷம் வீட்டிலே?' என்று கேட்டாள் குமுதவல்லி.

'ஒன்றுமில்லை. கொலுவுச் சாமானில் எலிக்குட்டி காணேம்.'

'அதெப்படி காணுமற்போகும்? நீங்கள் வெகுஜாக்கிரதையாக இருப்பீர்களே!' என்று கேட்டாள் பங்கஜம்.

'அதுதான் தெரியவில்லை. நானும் மாரியும் எண்ணினேம். எலிக்குட்டி இல்லை.'

'சரி. அப்போது யார் யார் இருந்தார்கள்?' என்று மீண்டும் கேட்டாள் குமுதவல்லி.

'நானும் மாரியும் இருந்தோம். வண்ணுத்தி சுப்பி சலவை வைத்துவிட்டுப்போனுள்.'

'சரி. சுப்பி நல்லவள்தான். சமீபத்தில் துணிகளைக் கூடப் போடத்தொடங்கிவிட்டாள்.'

'அப்படியா, அவள் எடுத்திருப்பாளா?'

'என்ன சந்தேகம்?'

இவ்வாறு பேச்சுக்கள் கிராமமெங்கும் முளைத்தன. நடுப்பகலுக்குள் ஊர்வம்பு பெருகிவிட்டது. 'பத்மாவதி

வீட்டுக் கொலுச்சாமான் முழுதும் திருட்டுப்போய்விட்டது, சுப்பி வண்ணாத்தி திருடிவிட்டாள்' என்று வம்பு வளர்ந்து விட்டது.

தொட்டியிலே துணி துவைத்துக் கொண்டிருக்கும் சுப்பியின் காதில் இது எட்டாமல் இருக்குமா? அப்போது பாதி வேலையில் இருந்த அவள் ஒரே புகைச்சல் கொண்டு பத்மாவதி வீட்டுக்குள் நுழைந்தாள்.

'அம்மா! என்ன அநியாயம்? ஏன் இந்தப் பழி சாத்தவேண்டும். நானா உங்கள் எலியைத் திருடினது?' என்று கத்தினான்.

'சுப்பி, யார் உன்மீது பழி சுமத்தினார்கள். நீ எடுக்கா விட்டால், எடுக்கவில்லை என்று சொல்லித் தொலையேன். ஏன் இப்படி இரைந்து கொட்டுகிறாய்' என்றாள் பத்மாவதி.

'ஆமாம், இது நல்ல வேலே. ஊர்பூரா நான்தான் திருடி விட்டதாகப் பழி சுமத்துகிறது. நீங்கள் சொல்லாமல் இப்படி ஆகுமா? நான் என்ன திருடியா? இரண்டு தம்பிடி பொறுமான எலிக்குட்டியை நான் ஏன் திருட வேண்டும். ஒரு கைக் குட்டைத் துவைத்தால் இரண்டு அணா கிடைக்கிறதில்லையா? என்மீது வீணாகப் பழிசுமத்திப் பாவத்திற்கு ஆளாக வேண்டாம்' என்று கத்திவிட்டு வீடு சென்று தன் தொழிலில் மீண்டும் புகுந்தாள்.

மறுநாள் காலை மணியக்காரன் தண்டல்காரனை அனுப்பினான். அவன் சுப்பியை வினயமாக அழைத்தான். அவளோ ஒரு குமறல் குமறிவிட்டு வரமுடியாது என்று அவனைத் துரத்திவிட்டாள்.

அவன் போய் தவால் சேவகனோடு வந்தான். சுப்பி மறுக்கமுடியவில்லை. மணியக்காரன் வீட்டிற்குச் சென்றாள்.

'ஏன் என்னை அழைத்தீர்கள்? நான் என்ன திருடியா? போயும் போயும் இரண்டணா எலியையா திருடுவார்கள்?' என்று கூப்பாடு போட்டாள்.

'சுப்பி! உன்னைத் திருடி என்று யார் சொன்னார்கள்?'

'ஊரார் பழி தூற்றுகிறார்களே? இப்போதே என் வீட்டைச் சோதனை போடுங்கள். எலிப்பொம்மை இருந்தால் என்னைத் தூக்கில் இடுங்கள். நான் என்ன குழந்தையா எலிப்பொம்மையோடு விளையாடுவதற்கு அல்லது எனக்கென்ன குழந்தை இருக்கிறதா?' என்று கத்தினாள்.

'வீணாக இரைச்சல் போடவேண்டாம். தப்பித் தவறி உன் வீட்டில் அது வந்து சேர்ந்திருந்தால் எடுத்துக் கொடுத்துவிடு என்று சமாதானம் சொல்லத்தான் அழைத்தேன். ஒத்துக்கொள்ளாவிட்டால் சும்மா போ' என்று சாவதானமாகச் சொன்னான்.

அதைக் கேட்டதும் வீடு திரும்பினாள். ஊர் மட்டும் அல்ல; மணியக்காரனும் தன்னையே திருடி என்று நினைக்கிறான். இந்தப் பழியை எப்படிப் போக்குகிறது? என்று மீண்டும் யோசித்தாள். அவளுக்கோ வேலையும் ஓடவில்லை; தூக்கமும் வரவில்லை.

தன் வீட்டிலே திருட்டுப் போனது மிகப் பெரிய அபவாதமாக எண்ணின பத்மாவதி அந்தப் பழியைப் போக்கடிக்கப் பல முறைகளும் தேடினாள். மாரியும் தூபம் இட்டாள்.

'இன்று எலி பொம்மை, நாளை கிண்ணம், அடுத்த மாதம் சேலை, பிறகு நகை. எல்லாம் களவு போகுமே! பிழைப்பே அம்பலமாகிவிடும்' என்றாள் மாரி.

'சரி. மாரி என்ன செய்கிறது?'

என்ன செய்யவா? காசும் வீசமும் பார்க்கப்படாது. மந்திரக்காரன் வெங்கிட்டன் இருக்கிறானே அவனுக்குக்

காணிக்கை வைத்தால் மைபார்த்துத் திருட்டுக் கண்டு பிடிப்பான்.

உடனே அவன் அழைக்கப்பட்டான். பூசை போட ஒரு ரூபாய் கொடுக்கப்பட்டது. அன்று இரவு பூஜை போட்டான். மறுநாள் காலை பத்து மணிக்கு அஞ்சனத்துடன் பத்மாவதி வீடு வந்து சேர்ந்தான்.

அங்கே வெகு ஆடம்பரத்துடன் மந்திரம் சொல்லி பூஜை செய்து ஒரு சிறு பையனை மை பார்க்கச் சொன்னான். அதில் ஓர் அனுமான் வந்து எலிக்குட்டி இருந்த இடத்தைக் காட்டிற்று. பத்மாவதியின் வீட்டுப் புறவடையில் எலுமிச்சைச் செடிப் பாத்தியில் அது புதைக்கப்பட்டது என்று அந்த அனுமான் சொல்லிற்று.

உடனே பத்மாவதி, மாரி, வெங்கிட்டன் எல்லாரும் புறவடை சென்றார்கள். எலுமிச்சைச் செடிப் பாத்தியிலே தோண்டிப் பார்க்க எலிப்பொம்மை அதில் இருந்தது. பத்மாவதிக்கும், மாரிக்கும் ரொம்ப சந்தோஷம். வெங்கிட்டனுக்கு ஒரு ரூபாய் பழுத்துவிட்டது.

'என்ன என்று நினைத்தீர்கள். என் அனுமாரால் கண்டு பிடிக்க முடியாத திருட்டு உண்டோ? இராமபிரானுடைய சேவகன் அல்லவா? இராவணன் கோட்டையை அழித்தவன் அல்லவா? அவரால் கண்டு பிடிக்காத திருட்டு இந்த நாட்டிலேயே இல்லை' என்று பெருமை பேசிவிட்டு வந்தனம் சொல்லிவிட்டு வீடு சேர்ந்தான்.

எலிப்பொம்மை அகப்பட்ட செய்தி ஊர் எங்கும் பாவிவிட்டது. சுப்பிக்கு வெகு சந்தோஷம். நான் சொல்லவில்லையா, அது பொய்யாக இருக்காது. வீணாக என்மீது பழி சுமத்தினார்கள் என்று பேசினாள். ஆனால் ஊரார் அவள் பேச்சை நம்பினார்களா? எலி திருட்டுப் போகாமல் செடிப் பாத்தியிலே இருக்குமா? தோண்டியல்லவோ

எடுத்தார்கள். யாராவது ஒருவர் புதைக்காமல் பொம்மை மண்ணுக்குள் எப்படிப் போகும் ? என்று வாதித்தார்கள்.

மந்திரவாதி வெங்கிட்டன் தந்திரவாதியேயன்றி மந்திரவாதியல்ல. வெகு சுலபத்தில் திருட்டைக் கண்டுபிடித்துத் திருடனிடமிருந்து திருட்டுப் பொருளை வாங்கி ஓர் இடத்தில் புதைத்து வைத்துப் பின்னால் மை பார்த்துத் தருவதாகப் பாசாங்கு செய்வது அவன் தொழில் என்று மக்கள் சொல்லிக்கொண்டனர்.

அதைப் பின்பற்றிச் சுப்பியின்பேரில் சந்தேகம் பலப்பட்டது. அவளும், வெங்கிட்டனும் பணம் பிடுங்குவதற்காகச் சதிசெய்து பத்மாவதியை ஏமாற்றிவிட்டார்கள் என்றே மக்கள் பேசிக்கொண்டார்கள் !

இப்பழிச் சொல் சுப்பியின் காதில் பட்டது. அவள் என்ன தர்க்கம் செய்தும் பொதுமக்களைத் திருப்தி செய்ய முடியவில்லை.

சுப்பிக்கோ சொல்ல முடியாத துக்கம். அந்தத் துக்கத்தில் தன் தொழிலைச் சரியாகச் செய்யாதிருந்தாள். துணிகளையும் அடிக்கடி ஆற்றில் விட்டு விடுவாள். மற்ற வண்ணாத்திகள் அவள்மேல் பழி தூற்றினார்கள். அவளுக்குத் துணி போடுவதையும் ஊரார் நிறுத்திவிட்டார்கள்.

பசித்துன்பம் பொறுக்க முடியவில்லை. பிச்சை எடுக்கத் தொடங்கினாள். மற்ற ஊர்ப் பிச்சைக்காரர்களுடன் சேர்ந்தாள். நோய் ஒட்டிக்கொண்டு எலும்பும் தோலும் ஆனாள். அவளைப் பத்மாவதி ஒருநாள் கண்டாள். மருந்தும், துணியும், ஆகாரமும் கொடுத்தாள். தினமும் கொடுக்கமுடியுமா?

நோய் பலப்பட்டுச் சாவடியில் கிடந்தாள். ஒருநாள் பனிக்காலத்தில் அனாதையாய்த் தெருத்திண்ணையில் இறந்து கிடந்தாள். பத்மாவதி ஒருத்திதான் அச்செய்தி கேட்டுத் துக்கித்தவள்.

12. துணைவியின் துறவு

சித்தையன் நிம்மதியாக வாழ்கிற ஒரு குடியானவன். ஊரில் ஒரு வீடும், ஊர் வெளியே அரைக்கல் தொலைவில் ஒரு தோட்டமும் உண்டு. ஆண்டு முழுவதும் பருவம் அறிந்து பயிர் செய்து யாதொரு கடனும் இன்றி ஒழுங்காக வாழ்ந்து வந்தான். அவனுக்குத் தக்கபடி ஒரு குணவதி வாழ்க்கைத் துணைவியாக அமர்ந்தாள். குடும்பத்தின் வருவாயை அனுசரித்து அவள் அதைச் சிக்கனமாகவே நடத்திவந்தாள். அந்தக் காரணத்தினுல் அக்குடும்பத்தின்மீது ஊராருக்கு மதிப்பு இருந்தது. சித்தையன் எந்த வம்புக்கும் செல்ல மாட்டான். ஆகவே, பொது மக்களிடம் அவன் மிகுந்த மரியாதை பெற்ருன். அவன் இல்லறம் நடத்தி வந்ததில் இரண்டு ஆண்மக்களும் ஒரு பெண்மகளும் தோன்றினுர்கள். அவர்களைச் செவ்வையாகப் போற்றிவந்தான்.

சித்தையனுடைய இளமைக்காலத்தில் நாட்டுப்புறங்களில் பாடசாலைகள் இல்லை. திண்ணைப் பள்ளிக்கூடங்கள் மட்டும் சில ஊர்களில் இருந்தன. சித்தையனுக்கு வெறும் எழுத்துவாசனை மட்டும் இருந்தது. ஆனுல் ஓய்வுநேரங்களில் சில நண்பர்களுடன் சேர்ந்து சில்லறை நூல்களைப் படிக்கத் தெரிந்து கொண்டான். நாளாவட்டத்தில் சித்தர் பாடல், தாயுமானவர், பட்டினத்தார், இராமலிங்க அடிகள் முதலியவர்களின் சில பாடல்களைத் தெரிந்துகொண்டான். இந்தப் படிப்பே அவனை ஊரில் சிறந்த படிப்பாளியாக்கி விட்டது. வேலை இல்லாமல் சும்மா இருக்கும்போது இந்தப் பாடல் நூல்களைக் கையில் வைத்துக்கொண்டு தனக்கு வந்த இசையில் பாடிக்கொண்டிருப்பான். ஆகவே, அவனைப் பெரும் பண்டிதனுக ஊர்மக்கள் பாவித்து அவனிடம்

வெகு மரியாதையாக நடந்து கொள்வார்கள். பூவோடு சேர்ந்த நாருக்கும் மணம் தட்டுமன்றோ? நாளாவட்டத்தில் அவனுடைய வாழ்க்கைத் துணைவியான சுப்பம்மாளுக்கும் சில பாடல்கள் மனப்பாடம் ஆயிற்று. அவ்வூர்ப் பெண்மணிகளுள் சுப்பம்மாள் ஒரு பண்டிதையாக விளங்கினாள்.

இப்படியிருக்க, அவ்வூருக்குச் சிலகல் தொலைவில் இருந்த ஓர் ஊரில் ஒரு துறவி ஒரு மடத்தை ஏற்படுத்தினார். அம் மடத்தில் வாரந்தோறும் சமயப் பேச்சுக்கள் நடத்தி வந்தார். சுற்று வட்டாரங்களிலிருந்து மக்கள் அம்மடத்திற்குச் சென்று அங்கு நடக்கும் வழிபாட்டில் கலந்து கொண்டு பேச்சுக்களைக் கேட்டுச் செல்வார்கள். மடத்திற்குக் காணிக்கைகளும் சேர்ந்தன. சொத்தும் பெருகிற்று. உபந்யாசங்கள் தவறாமல் நடந்துவந்ததனால் மடத்திற்கு மக்கள் மிகுதியாகச் செல்வது இயல்பாகிவிட்டது. சிறிது படிப்பு வாசனை பெற்றவர்கள் எல்லாம் மடத்துச் சீடர்கள் ஆகிவிட்டார்கள். ஆகவே, சித்தையனும் சீடன் ஆகிவிட்டான். இருக்க இருக்கப் பெண்மக்களும் அங்குச் செல்லத் தொடங்கினார்கள். சுப்பம்மாளும் சிஷ்யை ஆகிவிட்டாள். மடத்தின் புகழ் அந்த நாடெங்கும் பரவிவிட்டது. சித்தையன் மடத்துச் சீடன் ஆனபிறகு அந்த மடத்துச் சொற்பொழிவுகளைத் தவறாது கேட்டு வந்தான். அங்கிருந்த நூல்களையும் படிக்க முயன்றான். சமய நூல்களை ஒருவாறு கேட்கத் தொடங்கினான்.

சித்தையன் வயது ஏறஏற மடத்தின் பிரதம சீடர்களில் ஒருவன் ஆகிவிட்டான். சுப்பம்மாளும் சிஷ்யை ஆகி இருந்த போதிலும் தன் கணவனைக் குடித்தனத்தை விட்டு விலகாமல் கட்டிப் பிடித்துக்கொண்டு இருந்தாள். ஆகவே குடித்தன நிலைமை கெடவில்லை. பிள்ளைகளும் பெரியவர்களாகத்

தொடங்கினர்கள். அவர்களும் குடித்தனத்தில் ஈடுபடத் தொடங்கினர்கள். நல்லகாலம் இருக்கும் வரையில் எந்தக் குடும்பமும் கெட்டுப்போகாது அல்லவா? சுப்பம்மாள் உலக அனுபவம் மிகுதியும் பெற்று இருந்தாள். ஆகவே, அந்தக் குடும்பத்தில் நல்லகாலம் ஏன் ஏற்படாது? கணவனே பிள்ளைகளோ சிறிது சோம்பலாகவோ பிற விஷயங்களில் அதிகக் கவனம் செலுத்தவோ தொடங்கினல், உடனே அதனைக் கண்டித்து நல்ல ஒழுக்கத்திற்கு மீட்டுக்கொள்ளு வாள். இப்படிப்பட்ட ஓர் அனுபவசாலி இருக்குமட்டும் எந்தக் குடும்பமும் சீர்கேடு அடையாது அல்லவா? இந்த வகையில் மடத்துக் கவர்ச்சி எத்தனை இருந்தபோதிலும் சித்தையனுடைய குடும்பம் நடுநிலைமையிலேயே விளங்கிக் கொண்டிருந்தது.

தக்க வயது வந்தவுடன் பிள்ளைகள் குடித்தனப் பொறுப்பைத் தாங்கத் தொடங்கினர்கள். சித்தையனுக்கு ஓய்வு மிகுதியாகக் கிடைத்தது. அடிக்கடி மடத்திற்குச் செல்வதில் பெரியவர்கள் செய்யும் உபன்யாசங்களைக் கேட்டுத் தானும் துறவியாகப்போகலாமா என்றும் எண்ணு வான். ஆனல் சுப்பம்மாளைக் கண்டவுடனே அந் நினைவு ஓடிவிடும். இந்தப்படி இரண்டுங் கெட்டானக வெகு ஆண்டுகள் கழிந்தன. ஒருமுறை சில சீடர்கள் திவ்விய தேச யாத்திரை போகப் புறப்பட்டார்கள். சித்தையனும் அவர்க ளோடு சேர்ந்து யாத்திரை செல்ல நினைத்தான். ஆனல் சுப்பம்மாள் அதை விரும்பவில்லை. ஆகவே யாத்திரை நின்றுவிட்டது. ஆனலும் சித்தையனுக்கு அந்நினைவு இருந்துகொண்டே இருந்தது.

சித்தையனுக்கு வயது 50க்கு மேல் ஆகிவிட்டது. அப் போது சில சீடர்கள் திருக்கோயில் யாத்திரை செல்லத் தீர் மானித்தார்கள். இந்தத் தடவையாகிலும் செல்வதென்று

நினைத்தான். சுப்பம்மாளிடம் அனுமதி கேட்டான். அவளும் உடன் வருவதாகச் சொன்னாள். சரி, ஆகட்டும் என்று சொல்ல வேண்டிவந்தது. இருவரும் சேர்ந்து மற்ற யாத்திரிகர்களுடன் புறப்பட்டார்கள். தென் இந்தியக் கோயில்களைச் சுற்றிப்பார்த்தார்கள். ஆனால் இந்த யாத்திரை அவர்களுக்குப் பிடிக்கவில்லை. நோய்வாய்ப் பட்டாள் சுப்பம்மாள். ஆகவே இருவரும் யாத்திரையை ரத்துசெய்துவிட்டு ஊர் திரும்பினார்கள். மூன்றும் முறையும் ஒரு யாத்திரைக் கோஷ்டிவடக்கேசெல்லப்புறப்பட்டது. சித்தையன் அனுமதி கேட்க சுப்பம்மாள் உடனே ஒப்புக்கொண்டாள். அவன் வடநாடு செல்லப் புறப்பட்டான். சித்தையன் வடக்கே காசி, அயோத்தி, டெல்லி முதலிய ஊர்களைத் தரிசித்துவிட்டு இறுதியில் ஹரித்வார இரிஷிகேசம் போய்ச் சேர்ந்தான். அங்கே தென்னாட்டுத் துறவி ஒருவர் தவம் செய்துகொண்டிருந்தார். அவரிடம் நட்புப் பூண்டு சிலநாள் தங்கி இருந்தான். தானும் துறவி ஆகவேண்டும் என்ற எண்ணத்தைவெளியிட்டான். துறவியார் சித்தையனுக்குக் காஷாயம் கொடுத்துச் சித்தானந்த சுவாமிகள் என்ற தீட்சா நாமமும் தந்தார். அங்கேயே சிலமாதங்கள் இருந்து வந்தார். இமயமலை அடிவாரத்தில் கங்கைக் கரையில் சுவர்க்காலயத்தில் ஒரு குடியில் இருந்து தவம்புரிந்தார். இப்படி இருக்க ஒருநாள் தன் ஊர் நினைவு வந்தது. ஊருக்கு நடந்ததை எழுதி அனுப்பிவிட்டுப் புறப்பட்டார். வழியில் பல தலங்களையும் தரிசித்து விட்டுக் கடைசியில் தன் ஊருக்கு வந்து சேர்ந்தார்.

சுப்பம்மாளுக்குக் கணவன் செய்தது பிடிக்கவில்லை. தான் அனுமதி கொடுத்திருக்கக் கூடாது என்று தன்னையே நொந்து கொண்டாள். ஆனால் ஆனது ஆகிவிட்டது. இனி நடப்பதைப் பார்த்துக்கொள்ளுவோம் என்று எண்ணிப்

புதுச் சாமியாருக்கு வரவேற்புத்தர உத்தேசித்தாள். சாமி யார் ஆனபிறகு குடும்பத்தில் இருத்தல் சரியல்ல என்று எண்ணி அவருக்குத் தனியாக ஓர் ஆசிரமத்தைத் தோட்டத் திலே கட்டிவைத்தாள். ஊரார் ஒருங்குகூடி சுவாமி யாருக்கு வரவேற்பு அளித்தார்கள். சுவாமியாரும் புது ஆசிரமத்தில் தங்கினர். வடக்கே சென்ற பிறகு சுவாமி யாருக்கு வாக்கு வல்லமையும் வந்துவிட்டது. தன்னை ஆசிரியித்து வரும் மக்களுக்கு உபதேசம் செய்வார். தவிர மாலே நேரங்களில் வடநாட்டுப் பிரபாவங்களைப் பற்றிப் பிர சங்கமும் செய்வார். வந்த மக்களுக்கு விபூதிப் பிரசாதம் கொடுப்பார். வந்தவர்கள் தொழுதுவிட்டுச் செல்வார்கள். சம்பிரதாயப்படி சுப்பம்மாள் கணவனுடன் பேசக்கூடாது ; நெருங்கவும் கூடாது. வேளா வேளையில் சிற்றுணவு அனுப்பிவிட்டுத் தன் வீட்டில் மக்களுடன் வாழ்ந்து வந் தாள். நாளாவட்டத்தில் சித்தானந்த சுவாமிகளின் மகிமை நாடெங்கும் பாவிற்று. ஆண்மக்களே யன்றிப் பெண்மக்க ளும் சாமியாருக்குச் சேவைபுரிய வந்தார்கள். அவருடைய பிரசங்கங்களைக் கேட்கத் திரளாக மக்கள் வந்தார்கள். சிலபேர் தனிமையில் உபதேசம் பெறவும் வந்தார்கள்; சில யுவதிகளும் வரத்தொடங்கினர்கள். பெரியவர்கள் வருவது குற்றமில்லை. யுவதிகள் வரத்தொடங்கினல் நாட்டில் பழிச் சொல் வரும் அல்லவா ? சாமியார் வயதுவந்தவர்தான். ஆனல் பழிச்சொல்லை யார் தடைசெய்ய முடியும் ? ஊர் வம்பு மிகக்கொடியது அல்லவா ? இச் சொல் சுப்பம்மாள் காதிலும் பட்டது ; துடித்தாள். ஆனல் அடக்கிக் கொண்டாள்.

தன் குடும்பமோ மிகவும் கண்ணியமான குடும்பம். அதன் பெயர் கெட்டுவிடக் கூடாது. இச் சொல் சரியா என்று அறியவேண்டும் ? உண்மையானல் பழியை அகற்ற

வேண்டும் என்று எண்ணினுள் அப் புனிதவதி அம்மை யார்.

தோட்டத்தில் மேல்பார்வை பார்ப்பது போலச் செல்வாள். மரங்களின் ஒதுக்குகளில் நின்று ஒற்றுப் பார்ப்பாள். சில யுவதிகள் வந்துபோவது உண்மை எனத் தெரிந்தது. ஒருநாள் ஒரு பெண் ஆசிரமத்திலிருந்து வெளியே வந்தாள். சட்டென்று சுப்பம்மாள் அவள் எதிரே சென்று 'அம்மா எங்கே வந்தாய்' என்று கேட்டாள்.

'பாட்டி, சுவாமிகளிடம் சென்றேன், உபதேசம் பெற்றுக்கொண்டு வருகிறேன்.'

'அம்மா, நீ தனியாய் இருந்தாயா, மற்றப் பெண்கள் இருந்தார்களா ?'

'தனியாய்த்தான் உபதேசம் பெற்றேன். உபதேசம் பெறும் காலத்தில் பிறர் இருப்பது சரியல்லவாம்.'

'அப்படியா, போய் வா அம்மா' என்று சொல்லி விட்டு வீடு திரும்பினுள்.

அவளுக்கோ வெளியே சாந்தம், உள்ளே புகைச்சல். 'இதற்கு என்ன செய்வது ? என்ன உலகம் ! மணந்து வாழ்ந்த பெண்சாதி நெருங்கக் கூடாது. பிற பெண்கள் நெருங்கலாம். இந்த விதமான துறவு நல்ல துறவுதான். இதனைச் சீர்திருத்துவேன்' என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு யோசித்தாள்.

ஒரு நல்ல நாள் பார்த்தாள் ; தானும் துறவியாவதாக மக்களிடம் சொன்னுள். மக்களை அழைத்துச் சொத்துக்களை அவர்களே இனிமேல் பார்த்துக்கொள்ள வேண்டியது என்று சொல்லிவிட்டு வந்தாள். தான் துறவி ஆவதாகவும் அதற்குத் தகுந்த ஆசிரியன் தன் கணவனே என்றும் சொல்லிக் குறித்த நேரத்தில் வருவதாகச் சொல்லி அனுப்பினுள். ஊராருக்குத் தகவல் கொடுத்து விட்டாள்.

ஊராரும் துறவியாகும் சடங்கு காண வந்துவிட்டார்கள். சித்தானந்த சுவாமிகள் என்ன செய்ய முடியும்? நடத்த வேண்டியவற்றை நடத்தித்தான் ஆகவேண்டி வந்தது. சுப்பம்மாளுக்குக் காஷாயம் கொடுத்தார். அவளைத் தன் சிஷ்யையாக வைத்துக்கொள்ள வேண்டி வந்தது. அவளும் காஷாயம் அணிந்துகொண்டு அருகிலே சிறு குடிலைக் கட்டிக்கொண்டு அதில் இருந்தாள். சுவாமிக்குத் தானே சிஷ்ருஷை செய்யத் தொடங்கினாள். உலகத்தின் போக்குப் பாருங்கள்.

அது முதல் தனியான உபதேசங்கள் நின்றுவிட்டன. மாலை உபன்னியாசங்கள்தான் நடைபெற்று வந்தன. பழி சொல்வார் எவரும் இல்லை. ஆசிரமத்து மதிப்பும் புகழும் எங்கும் பரவிற்று.

பண்டைக் காலத்தில் இல்லறத்தில் இருந்து களைத்த மக்கள் நேராகத் துறவறம் எடுத்துக்கொள்வதில்லை. இடையில் வானப் பிரத்தம் என்ற காட்டுவாசம் செய்து வந்தார்கள். அதிலே தம்பதிகளோடு வாழ்ந்தார்கள். நோன்புகளை நோற்றார்கள். அதில் முற்றின பிறகுதான் முழுத் துறவு கொண்டார்கள். இந்த நிலைமை பாரதத்தில் கூறியிருக்கக் காண்கிறோம். யுதிட்டிரனுக்குப் பட்டாபிஷேகம் ஆனபிறகு திருதராட்டிரனும் காந்தாரியும் வானப்பிரஸ்த வாழ்விற்கு வனத்திற்குச் சென்றார்களாம். அதுவே சரியான வழி என்று சுப்பம்மாளுடைய கூரிய அறிவு காட்டிற்று. அதனை நிரூபிக்கவே தானும் துறவு பூண்டு, தன் தலைவராகிய சித்தானந்தரிடம் இருக்கத் தொடங்கினாள். தம் அறத்தின் நிலையை வானப்பிரஸ்த வாழ்வு என்று அவள் வியாக்கியானம் செய்தாள். அவளுடைய அனுபவ அறிவே அறிவு என்று உலகம் போற்றத் தொடங்கிற்று.

13. இயல்பான வாழ்க்கை

முத்தம்மாள் வெகு நல்லவள். ஒருவருக்கும் தீங்கு செய்ய மனதார நினையாள். படிப்புக் குறைவு. இளமை முதற்கொண்டே பழகின இடமும் ஒரு மாதிரிதான். ஏனெனில் பிறந்த இடம் பணக்கார இடம். அக்கால வழக்கத்தின்படி பணக்காரப் பெண்கள் வீட்டைவிட்டு வெளியே செல்லுவதில்லை. உலகமக்களிடம் பழகி அறியமாட்டார்கள். வயது வந்த மாதர்களே வீட்டைவிட்டு வெளியே போகாவிட்டால் குழந்தைகள் போக முடியுமா? ஆகவே, குழந்தைகளுக்கும் வீட்டுப் பணிப்பெண்களே கூட்டாளிகள். அதிலும் முத்தம்மாள் பிறந்த வீட்டிலே அவள் ஒரே பெண்பிள்ளை; மற்றவர்கள் ஆண்மக்கள். ஆகவே, கூடவிளையாடத் தோழிகளும் இல்லை. பணியாட்களின் பிள்ளைகளும் கிழவிகளுமே தோழிகளாக இருப்பார்கள். ஆகவே, அந்த வர்க்கத்து மக்களின் பழக்கவழக்கங்களே இளமைதொட்டு நெஞ்சில் ஊறிவிடும் அல்லவா? இந்த வகையில்தான் அவள் பழகின இடமும் ஒருமாதிரி என்று கூறப்பட்டது.

முத்தம்மாள் நல்ல உடல்கட்டு வாய்ந்தவள். பாடசாலைக்கு நேரத்துக்கு அனுப்பப்பட்டாள். வீட்டுப் பணிப்பெண்களோடு விளையாடி அவர்களை மேய்த்துக்கொண்டிருந்தவளுக்குப் பள்ளிப்படிப்பு எப்படி ஏறும்? நான்காவதற்கு மேல் அவள் படிப்பு ஏறவில்லை. ஒருநாள் பள்ளிக்கூட உபாத்தியாயினி அவளை மிரட்டினாள். முத்தம்மாளோ 'இவள் என்ன என்னை மிரட்டுவது?' என்று எண்ணினாள்.

'பெண்ணே ஏன் இன்று படித்துக் கொண்டுவரவில்லை?' என்றாள் உபாத்தியாயினி.

'படிக்காவிட்டால் நீ என்ன கேட்கிறது?' என்ருள் முத்தம்மாள்.

'என்ன பிள்ளை, இத்தனைக் குறும்பு.'

'குறும்பு, கிறும்பு என்று சொல்லவேண்டாம். உன் வேலையை நீ பார்.'

உபாத்தியாயினிக்குக் கோபம்வந்தது. பிரம்பு எடுத்தாள். அவள் அடிப்பதற்கு முந்தியே முத்தம்மாள் பிரம்பைப் பிடுங்கி அவளையே ஓர் அடி அடித்தாள். மற்றப் பிள்ளைகள் வெருண்டு போனுர்கள். இச்செய்தி ஊரில் பரவிவிட்டது. பெற்ருேர் காதிற்கும் எட்டியது. முத்தம்மாளின் படிப்பு அதனுடன் நின்றுவிட்டது.

இத்தனைச் செல்லத்தோடு வளர்ந்த முத்தம்மாளின் செயல்களைக் கூறவும் வேண்டுமா? தோழிப்பெண்கள் விளையாட்டில் மீறி ஏதாவது தப்பு செய்தால், உடனே கண்டிப்பாள். வாத்தியார் அடைந்த சீர் உனக்கும் வேண்டுமா என்று கேட்பாள். தோழிகள் நடுங்கிக் கீழ்ப்படிவார்கள். இவ்வாறு அவள் தோழிப்பெண்களுக்கு அரசியாக, அவர்களிடை முடிசூடாத இளவரசியாக வளர்ந்தாள்.

நாளடைவில் முத்தம்மாள் மணப்பருவம் அடைந்தாள். தகுந்த இடத்தில் ஒரு படித்த செல்வாக்குப் படைத்த வீட்டுப் புதல்வனுக்கு வாழ்க்கைப்பட்டாள். அவனே செல்வனுக இருந்தபோதிலும், அடக்க ஒடுக்க முள்ளவன். பிதிரார்ச்சிதச் சொத்து இருந்தபோதிலும் தானே உழைத்துப் பிழைக்கவேணும் என்ற கொள்கை கொண்டவன். டாம்பிகம் சிறிதுமில்லாமல் மக்கட் சேவையில் ஈடுபட்டவன். இவ்விரு தம்பதிகளுக்கும் இடையில் வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்று சொல்லவா வேண்டும்?

ஒருமுறை குடும்பத்தார்கள் எல்லோரும் வேறோர் ஊருக்கு ஒரு திருமணத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். முத்தம்மாளும் அவள் இளமைக் கணவனும் சென்றிருந்தார்கள். ஒரு வீட்டிலே பெண்கள், மற்றொரு வீட்டிலே ஆண்கள் தங்கி இருந்தார்கள். முத்தம்மாளும் அவள் தோழிகளும் தங்கள் விடுதியில் உல்லாசமாக விளையாடிக்கொண்டிருந்தார்கள். அவள் கணவனும் அவன் தோழன் ஒருவனும் உள்ளே நடப்பது அறியாமல் அவ்வீட்டுக்குள் சென்றார்கள். அதை அறிந்ததும் முத்தம்மாள் ஒரே கூச்சலாகப் 'பெண் பிள்ளைகள் விடுதியில் ஆண்பிள்ளைகளுக்கு என்ன சோலி?' என்று கத்தினாள். 'இதென்னடா விபரீதம்!' என்று எண்ணிக் கணவனும் தோழனும் விலகிப்போய் ஓடிவிட்டார்கள். இவ்வாறு சின்னஞ்சிறு சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுவதுண்டு.

திருமணம் ஆனபின் சில ஆண்டுகள்வரை முத்தம்மாள் அதிகாரம் மிகுதியாகச் செல்லவில்லை. வீட்டில் மாமனார், மாமியார் இருக்கையிலே என்ன செய்யமுடியும்? அவளுக்கு ஏதாவது பிணக்கு ஏற்பட்டால் சாக்குச் சொல்லிக்கொண்டு தாயார்வீட்டில் நீண்டகாலம் இருந்துவிடுவாள். குழந்தைகளும் உண்டாயின. அவர்களைப் போற்றுவதில் அவளுடைய நேரம் முழுவதும் கழிந்துவிடும். ஆகவே, சீறுடுவதில் அவள்நினைவு செல்ல வழியில்லை. கூடியமட்டிலும் கணவனும் அவளுடைய எண்ணங்களுக்கு மாறுபடாமல் நடந்துகொள்ளுவான். சிறிது மிகுதியாகச் சிறுவாட்டுப் பணம் கொடுத்துவிட்டால் எப்படிப்பட்ட பிழைகளும் மறைந்துபோகும் அல்லவா? இதனை அறிந்து கணவனும் கவலை இல்லாமல் காலம் கழித்தான்.

வீட்டில் உடன் பிறந்தார்களுக்குள் பிரிவினை ஏற்பட்டு அவள் கணவன் தனிக்குடித்தனம் நடத்தத் தொடங்கினான்.

அதுமுதல் குடும்பத்திற்குத் தானே ஒப்பற்ற மங்கையர்க் கரசி என்று எண்ணினுள். வேலையாட்களை வைப்பதும் விலக்குவதும், வீட்டுச்சாமான்களைச் சேகரிப்பதும் செல வழிப்பதும் தனது அதிகாரம் என்று எண்ணி வெகு மும் முரமாக அமுல்நடத்தினுள். பாவம், கணவனுக்கு அங்கு வேலையே இல்லை. ஒரு சிறிதளவு சிக்கனமோ செட்டுத் தனமோ சொல்லத் தொடங்கினுல், அன்று முழுதும் வீடு அமர்க்களம்தான். ஒத்தைக்கிரட்டையாக அளந்தால்தான் அவள் ஊடல் தீரும். இந்த நிலைமையில் வீண் செலவும் செய்யமாட்டாள். 'பக்கத்து வீட்டுச் சீதை நிறைய நகை போட்டிருக்கிருள். 1000 ரூபா கையிருப்புச் சேர்த்திருக் கிருள். நானே பெயருக்குப் பணக்காரர்வீட்டில் வாழ்க்கைப் பட்டேன். உண்மையில் கையில் காசே இல்லை' என்று கிழவிமார்களுடனும் வேலையாட்களுடனும் பேசிக்கொள் வாள். நகைசெய்வதும் அதனை அழிப்பதும் வேறுவித நகை செய்வதும் அதனைக் கூடப்போடுவதும் இதிலேயே காசு தொலைப்பாள். சிலசமயங்களில் மந்திரவாதிகளுக்கும் பூசாரிகளுக்கும் காசு இறைப்பாள். இந்த விதத்தில் காசு மிகுதியாகப் போக்கடிப்பாள். ஆனுல், கணவன் இவைகளைக் குறித்துச் சட்டைசெய்வதில்லை.

வயதாக ஆக சின்னஞ்சிறு சேதிகளுக்கெல்லாம் பிர மாதமாகச் சினந்துகொள்ளத் தொடங்கினுள்; இது உல கிலே சகஜம்போல் இருக்கிறது. கணவன் வேலையினின் றும் நீங்கி ஓய்வுபெற்றுக்கொண்டான். மக்களுள் சம்பாதிப் பவர்கள் தனியே போய்விட்டார்கள். மற்றவர்கள் குடும் பத்தில் இருந்தார்கள். வரும்படி இல்லாத காலத்தில், பிரிவினையால் சொத்துக் குறைந்துபோகும் காலத்தில், வீட்டுத் தலைவி சிக்கனமாக இருக்கவேண்டும் அல்லவா? அந்த உண்மை முத்தம்மாள் அகாதியில் இல்லை.

எப்போதும்போல் டம்பாச்சாரித்தனம் செய்ய முயன்றாள். அது கணவனுக்குப் பிடிக்கவில்லை. என்றாலும், சிறிதேனும் வெளிக்குக் காட்டாமல் கொடுத்துக்கொண்டுதான் வந்தான்.

நமது தமிழ்நாட்டுக் குடும்பங்களில் பிச்சைக்காரர்கள் வந்தாலும் 'இல்லை' என்று சொல்லமாட்டார்கள். இல்லை என்றால், திருமகள் போய்விடுவாளாம்! மூத்தாள் குடி கொள்ளத் தொடங்குவாளாம்! ஆகவே, வீட்டில் ஏதும் இல்லாவிட்டால் 'நாளை வா' என்றுதான் சொல்லுவார்கள். அல்லது 'அடுத்த வீடு பார்த்துக்கொள்' என்றுதான் காட்டிவிடுவார்கள். இதுதான் வெகுநாளைய சம்பிரதாயம்.

நாட்டுமக்களிடம் பழகியறியாத முத்தம்மாளுக்கு இந்தச் சம்பிரதாயம் எப்படி விளங்கும்? வயது ஏற ஏற 'இல்லை' என்ற சொல்லே வாயில் எப்போதும் முன் நிற்கும். காலை எழுந்தவுடனே கணவனிடம் 'இன்றைக்குப் பருப்பு இல்லை' என்பாள். 'நேற்றுத்தானே ஒருமாதத்திற்கு ஆகிறாப்போலப் பருப்பு வாங்கும்படிப் பணம் கொடுத்தேன்?' என்பான் கணவன். 'ஒரு மாதமா! அது பத்து நாட்களுக்குத்தான் வரும்; பின் என்ன பண்ணுகிறது? பால் வேண்டாமா?' என்பாள். 'அதற்கு இல்லை என்று சொல்லவேண்டும்? அது அபவாத மொழி அல்லவா?' 'ஆமாம், உங்களுக்கு நான் எது சொன்னாலும் தப்புதான்' என்று முகத்தைச் சுளிப்பாள். கணவன் உடனே பணம் அளக்கவேண்டி வரும். தனியே கேட்டால் பரவாயில்லை. பத்துப்பேர் நடுவிலும், வேலையாள் இருக்கும்போதும் 'இல்லை' என்றால் கணவனுக்குப் பிடிக்காது. பல தடவை எச்சரித்துப் பார்த்தான் சீர்திருத்த முடியவில்லை. வீட்டில் எத்தனைச் சாமான் இருந்தாலும் 'இல்லை' என்ற சொல்லே அவள் வாயிலிருந்து வரும்.

ஒருநாள் கணவன் தனது நண்பர்களுடன் வார்த்தை யாடிக்கொண்டிருக்கையில் மூத்தம்மாள், 'அரிசி இல்லை. வாங்குவதற்குப் பணம் கேள்' என்று சமையல்காரனை அனுப்பினுள். அந்தப் புத்திசாலிமடையன் (சமையல்காரன்) அந்தப்படியே, இடம் யாது என்றும் பார்க்காமல் எல்லோர் எதிரேயும், 'அரிசி இல்லை, பணம் வேணும் என்று அம்மாள் சொல்லுகிறார்கள்' என்றான். கணவனுக்கோ கோபம், பொறுக்கமுடியாத கோபம். ஆனாலும் சகித்துக்கொண்டு, 'பின்னால் வா' என்று சொல்லி அனுப்பினான். உண்மையில் அன்று காலையில்தான் அரிசி வாங்கப்பட்டது. அன்று கணவன் பட்ட துக்கத்திற்கு அளவில்லை. இந்த மனைவியாலே எத்தனை சகிக்கமுடியாத அவமானம் என்று எண்ணினான். ஆனால், இதைச் சொல்லி என்ன பயன்? காலமெல்லாம் இந்தவிதமாகவே கழிந்தது.

சில மக்கள் தங்கள் மனைகளில் செல்வம் இல்லாமல் போனபோதிலும் 'இல்லை' என்று சொல்லிக்கொள்ள மாட்டார்கள். நிரம்ப இருப்பதாகவே காட்டிக்கொள்ளுவார்கள். ஆனால், மூத்தம்மாள் வீட்டிலோ அந்த நினைவு அவளுக்கு இல்லவே இல்லை. யார் வந்தாலும் தன் குறைகளையும் தங்கள் வீட்டுக் குறைகளையும் அளப்பதே தொழில். 'மாதர்க் கணிகலம் மௌனம் சாதித்தல்' என்பது அவள்மாட்டு இல்லை. கணவன் பலதடவை தன் குடும்பக் கௌரவத்தைப் பாதுகாக்கவேண்டும் என்று சொன்ன மதியெல்லாம் விழலுக்கிரைத்த நீராயிற்று. அதை நினைத்தால் அவனுக்குத் துக்கம் வரும். அவளோ அதை உணரவில்லை.

இவ்வாறு குடும்பம் நடந்துவருகையில் ஒருநாள் ஒரு சம்பவம் நடந்தது. மூத்தம்மாளுக்கு நகைகளை அணிவதில் விருப்பம் என்று கூறப்பட்டது அல்லவா? தலை நரைத்துப் போயும் அணிகளை மாட்டிக்கொள்வதை அவள் நிறுத்த

வில்லை. தன் சகபாடிகளில் எவள் எந்தப் புதுத்தினுசு அணிந்துகொண்டாலும் அதன்படி ஒன்று செய்து மாட்டிக் கொள்ளத் துணிவாள். புதிதாக நகைகளைக் கடையில் வாங்கமாட்டாள். பழைய நகைகளையே அழித்துப் புதுநகை செய்து போட்டுக்கொள்ளுவாள். இந்த வகையில் செலவு குறைவு அல்லவா? தட்டானுக்குக் கூலிதான் ஆகுமே யன்றிப் பொன்னுக்கும் கல்லுக்கும் விலை கொடுக்கவேண் டியதில்லை அல்லவா? இந்த வகையில் சிக்கனம் ஆனாலும், மொத்தமாக ஒரு புதுநகை கொள்ளும் கூலி, கடைநகையை விட எத்தனையோமடங்கு ஆகிவிடும். அதை அந்த அம்மாள் அறியாள்; அறிவித்தாலும் ஒத்துக்கொள்ளாள். ஆனால் ஒரு செயலில் மிகுந்த எச்சரிக்கையோ டிருப்பாள்.

'ஒட்டாக ஒட்டியும் காப்பொன்னின் மாப்பொன் உபாயமதாய்த்
தெட்டா திரான் பணிசெய்யாதிரான் செம்பொன் மேருவினைக்
கட்டாகக் கட்டிக் கடுகளவாய் நிறை காட்டவல்ல
தட்டானுக் கஞ்சியன்றோ அணிந்தான் சிவன் சர்ப்பத்தையே'

என்ற பாட்டின் கருத்தை அறிந்து தன் வீட்டிலேயே தட் டானை வைத்துப் புதுநகை செய்துகொள்ளுவாள். இதில் குற்றம் என்ன?

ஒருநாள் ஒரு புதுமாதிரி மூக்குத்திச் செய்யச் சொல்லி, தெரிந்த தட்டானை நியமித்தாள். அவன் மூன்று நாள் வீட்டுக் கொட்டத்தில் தன்னுடைய கும்மட்டியை ஊதிக் கொண்டிருந்தான். முத்தம்மாள் அங்கேயே காவல் இருந் தாள். காவல் என்றால் அவளுடைய உடம்பு, நாவசைப்பு இருந்ததேயொழிய மனதும் கைகளும் வேறு வேலையில் ஈடு பட்டிருந்தன. கைகள் பூத்தொடுத்துக்கொண் டிருந்தன; மனது ஊர்வம்புகளில் நுழைந்துகொண்டிருந்தது; நாவோ அவ்வம்புகளுக்கு இசையத் தாளம் போட்டுக்கொண்டிருந் தது. இது எப்படிப்பட்ட காவல்? சொல்லவேண்டுமா!

அடிக்கடி குளிக்கவும் பூஜைசெய்யவும் சாப்பிடவும் போய் விடுவாள். அப்போது அந்தரங்க வேலைக்காரிதான் காவல். நடுப்பகல் வேளையில் தட்டானின் மனைவி சோறு கொண்டு வருவாள். அவளோ அம்மாள் இல்லாதபோதே வந்து விட்டுப் போவாள். மூன்றுநாள் அம்மாள் விரலில் போட்டிருந்த வைர மோதிரம் காணவில்லை. அதை எங்கு வைத்தாள், அது எப்படிப் போயிற்று? என்று அவளுக்கு உண்மையில் தெரியாது. நன்றாகத் தேடாமலேயே மோதிரம் காணோம் என்று அலறத்தொடங்கினாள். வேலைக்காரியும் தட்டானும் சமையல்காரன்மீது பழிபோட்டார்கள். முன்னொருநாள் வேலைக்காரிக்குச் சமையல்காரன் காய்கறி பரிமாறவில்லை என்ற கோபம் இருந்தது. எப்போது பழிவாங்கலாம் என்று இருந்தாள். இந்தச் சமயத்தில் தீட்டிவிட்டாள். அதில் தட்டானும் சேர்ந்துகொண்டான்.

வீடு முழுதும் ஒரே அலறல். சமையல்காரன் அந்தப் பழிப்பேச்சுக்கு அஞ்சி வேறிடத்தில் வேலைக்குச் சேர்ந்து விட்டான். அவன்மீது சந்தேகம் வலுத்துப்போய்விட்டது. கணவனிடம் சொல்லி அவனைச் சிறையில் வைக்கும்படி ஏவினாள். அது முடியாத காரியம் என்று அவனுக்குத் தெரியும். மேலும், ஒரு சில்லறை நகைக்காகக் கச்சேரி ஏறுவது பெரிய குடும்பத்திற்குத் தகுதி அல்ல என்று நிராகரித்துவிட்டான். ஆனால் முத்தம்மாள் வெறுமனே இருக்கவில்லை. தன் சொந்தக்கார வழக்கறிஞரிடம் சொன்னாள். அவருடைய புத்திமதி அவள் காதில் ஏறவில்லை. பிறகு சோதிடன் மந்திரவாதி முதலியவர்களுக்குப் பணம் கொடுத்தாள். ஒருவன் மைபார்த்து அதே சமையல்காரன் தான் மோதிரம் திருடினான் என்று கூறினான். சமையல்காரனைத் தேடியும் அவன் அகப்படவில்லை. இப்படி ஒரு வாரம் வேறு வேலையிலேயே காலம் தள்ள வேண்டிவந்தது.

ஒருநாள் இரவில் முத்தம்மாளுக்குத் தூக்கமே வரவில்லை. இரவில் விளக்கு ஏற்றிப்பார்த்தாள். படுக்கையில் ஒன்றிரண்டு மூட்டைப்பூச்சிகள் ஓடின. மறுநாள் காலையில் வேலையாளை அழைத்துப் படுக்கையை உதறச் சொன்னாள். பத்துப்பதினைந்து நாளாக உதறாமல் சுருட்டியே வைத்திருந்தாள் வேலைக்காரி. அதுதான் வேலைக்காரிகளின் இயல்பு அல்லவா? வேலைக்காரி தன் தலைவியின் எதிரில் படுக்கையை நன்றாக உதறினாள். தலையணையை எடுத்தவுடனே அதன்கீழ்க் காணாமற்போன மோதிரம் இருந்தது. உதறும்போது அம்மோதிரம் கீழே விழுந்தது. அதனை வேலைக்காரி தன் தலைவியின் கையில் கொடுத்தாள். தலைவிக்கு ஏற்பட்ட ஆனந்தத்திற்கு அளவில்லை. சந்தோஷத்தினால் வேலைக்காரிக்கு மிட்டாயும் வழங்கினாள். ஆனால் மாலை ஆக ஆகக் கவலை ஏற்பட்டது. இவ்வளவு நாள் காணாத இந்த மோதிரம், தலையணைக்குக் கீழ் எப்படி வந்தது என்று யோசித்தாள். வேலைக்காரி முதல்கொண்டு புதிய சமையல்காரன் வரையில் இதே விசாரத்தில் பேசினார்கள்.

இறுதியில் வேலைக்காரி ஒரு கதையை இணைத்து வைத்தாள். புதிய சமையல்காரனும் அதை ஆமோதித்தான். 'ஓடிப்போன சமையல்காரன்தான் எடுத்திருக்கவேண்டும்; மையில் கண்ட சேதி உண்மைதான்; மை எப்படிப் பொய் சொல்லும்? மந்திரவாதிக்குப் பணம் கொடுத்துச் செய்வினை செய்யச்சொன்ன சேதி அந்தச் சமையல்காரத் திருடனுக்குத் தெரிந்திருக்கும்; தெரிந்ததும் தனக்குக் கேடு வந்துவிடும் என்று பயந்து எவர்க்கும் தெரியாமல் இந்தத் தலையணையின்கீழ் வைத்துவிட்டுச் சென்று இருப்பான்' என்றாள். இதைக் கேட்ட முத்தம்மாள் அக்கதையை உண்மையென்றே நம்பினாள். மந்திரக்காரனுக்கு வெகுமதியும் கொடுத்தனுப்பினாள்.

முத்தம்மாளின் படுக்கையறை எப்போதும் பூட்டப் பட்டிருக்கும். அவளும் வீட்டைவிட்டு மிகுதியாக வெளியே செல்வதில்லை. இப்படி இருக்கத் திருட்டுச்சமையல்காரன் எப்படி அறைக்குள் புகுந்து மோதிரத்தைத் தலையணைக்குக் கீழ் வைத்தான் என்று அவள் ஆராயவே இல்லை. தானே மறதியில் தலையணைக்குக் கீழ் மோதிரத்தை வைத்திருக்க லாகாதோ என்றும் அவள் எண்ணவே இல்லை. அவ்வாறு எண்ணுவதற்கு அவள் அகந்தை உள்ளம் இடம் கொடுக்குமா ?



14. எங்கே போனேம்?

நாங்கள் எங்கே போனேம்? எனக்கே புரியவில்லே. அதை நினேக்க நினேக்கப் பெரும் மகிழ்ச்சி; கூறமுடியாத எழுதமுடியாத ஓர் இன்பம்; அதனை எப்படி அடைந்தேன்! நான் கண்ட காட்சிகள் சந்தித்த ஆட்கள் பேசிய பேச்சுக்கள் எல்லாம் வியப்பையே தருகின்றன. உண்மையோ அன்றே என என்னையே கேட்டேன். அவைகள் எல்லாம் நிமிடங்கள் செல்லச் செல்ல மறைகின்றன. மறதியின் வல்லமை அத்தனே என்பேன். ஆகவே, உடனே சில குறிப்புக் களேக் குறித்துக்கொண்டேன். என்றாலும் பல பகுதிகள் மறந்துவிட்டேன். நான் அடைந்த மகிழ்ச்சியை எவ்வாறு எழுதுவது? அது முடியவே முடியாது. கண்ட காட்சி களே மட்டும் ஓரளவு வரைய முடியும். அதனே மட்டும் கடிதத்தில் தீட்டுகிறேன். ஓவியம் வரையத்தெரிந்திருந் தால் நன்ருக வரைந்திருப்பேன். தெரியாதே. அது ஒரு பெருங் குறை அல்லவா?

பகல்வேளே, விரிந்த கடல்; ஆனல் அலேகளோ இல்லே. ஒருவேளே கதிரவனர் மறைவுத்திருநாளன்று தனுக் கோடியில் கண்ட கடலோ? அசைவற்று இருக்க மூன்றடி நீரில் அழகாகக் கைகளே விரித்துக்கொண்டு ஆயிரக்கணக் கான பேர்கள் ஆண்பெண் உட்பட நீந்தினதுபோல நாங் கள் நீராடினேம். அன்று அருகிலே ஓர் அந்தண வாலிப னும் அவன் இளேய மனேவியும் வெகு களிப்புடன் நீராடின அந்தக் காட்சியின் நினேவோ? அல்ல. நான் சென்ற கடல், அலேகள் இல்லா ஆழ்ந்த கடல். எங்கும் அமைதியே நிறைந்திருந்தது. 'நாங்கள் மூன்றுபேர் சென்றேம். நானும் எனது மகனும் மற்ருெரு துணேவனும். அவன் அயலான். யாரென்று நான் அறியேன். எங்களே அழைத்துக்

கொண்டு வெளிநாடு செல்கிருன். எப்படிப் போகிறோம்? ஏன் போகிறோம்?' என்று என்னுல் சொல்லமுடியாது. நாங்கள் சென்ற விதமும் விசித்திரமே. அந்தத் துணைவன் எங்களுக்கு இலேசான பை போன்ற ஓர் உடையைத் தந்தான். அதில் நாங்கள் புகுந்துகொண்டோம். அது கழுத்துவரை மூடிக்கொண்டது. பாடசாலையில் சாக்குப் பந்தயம் ஆடும் பிள்ளைகள் போன்று அந்த உடையில் திகழ்ந்தோம். அவனும் அதில் ஒன்றை அணிந்துகொண் டான். அத்துடன் கடலில் சென்றோம். கழுத்துவரை நீருக் குள்ளும், தலைமட்டும் நீரின்மேல் இருக்கவும் மிதந்தோம். நீரில் நின்றுகொண்டே கைவீசிச் சென்றோம். நாங்கள் வெகு விரைவில் சென்றோம். வானூர்தி போல் மணிக்கு 200, 300 மைல் இருக்கலாம். ஆனுல் அவ்விரைவை நாங்கள் உணரவில்லை. வானஊர்தியில் இலங்கைக்கரை மேல் செல்லுகையில், எவ்வாறு பறக்கிறோம் என்றுகூட உணராமல் சென்றோமோ அப்படியே நாங்கள் விரைந்து சென்றோம். கடலில் எங்கள் மூவரைத் தவிர வேறு எவரும் இருக்கவில்லை. அந்தத் துணைவர் எங்களை முன்னே இட்டுக்கொண்டு சென்ருர்.

ஏதோ வெளிநாட்டிற்குச் செல்லுகிறோம் என்ற உணர்ச்சியைத் தவிர வேறென்றும் இருக்கவில்லை. எந்த நாடு என்று எங்களுக்குத் தெரியவில்லை. அங்கே எந்த சோலிக்குச் செல்லுகிறோம் என்ற எண்ணமும் இல்லை. ஆனுல் அந்தப்பயணம் வெகுமகிழ்ச்சியைத் தந்தது. நாங் கள் பேசிக்கொண்டு சென்றோமோ, மௌனமாகச் சென் றோமோ தெரியவில்லை. ஆனுல், அது வெகு இன்பத்தைத் தந்தது என்று மட்டும் கூறுவேன். இவ்வாறு வெகு தொலைவு சென்றவுடனே சில பாறைகள் தெரிந்தன. அவை களின் அருகே சென்றுகொண்டிருந்தோம். பிறகு சிறிது

தூரத்தில் ஒரு மணல் திடல் தெரிந்தது. அது யந்திரக் கப்பல்கள் மண்ணை அகழ்ந்து இட்ட திடல்போலத் தெரிந் தது. கொச்சித் துறைமுகத்தில் வில்லிங்டன் தீவு உண்டாக் கின வேலையைப்போல் அது தெரிந்தது. ஆனல் அது அல்ல இது என்று உணர்வேன். அந்த மணல்திடலைக் கடந்து சென்றோம்.

செல்லச் செல்ல இரண்டு நீர்மூழ்கிகளின் இடையே செல்கிறதைப்போல் தோன்றிற்று. நீர்மூழ்கிகள் இரும் பால் ஆக்கப்பட்ட பெரிய மிதப்புகள். இருபுறங்களிலும் அவைகள் தாழ்ந்த மதில்கள்போலத் தெரிந்தன. உற்றுப் பார்க்கையில் அவைகள்மேல் வரிசையாகப் புகைப்போக்கிக் குழாய்கள் இருந்தன. அவைகள் நீராவிப்படகுகளில்அமைந் திருக்கும் குழாய்கள்போல் விண்ணைநோக்கிக் கொண்டிருந் தன. இரண்டு குழாய்களுக்கும் நடுவே சிறுமட்டைச் சாய்ப் புக்கள் இரண்டுபக்கங்களிலும் இருந்தன. ஒவ்வொன்றி லும் ஒவ்வொரு ஆள் உட்கார்ந்திருந்தான். இவைகள் நீரில் மூழ்கிச் செல்லும்போதும் வெடிகள் போடுகையிலும் இந்த ஆட்கள் எங்கே போவார்கள் என்று எண்ணினேன். உடன் வந்த துணைவன் இவர்கள் அந்தச் சமயத்தில் வெளியே ஒதுங்கிச் செல்வார்கள் என்றான். அந்த அபாயமான நீர் மூழ்கிகளைக் கண்டாலும் அச்சமாக இருந்தது. சிறிது தள்ளி மேலும் சென்றோம்.

நீர்மட்டத்திற்கு ஓர் அடி உயரத்தில் அரண்போல அமைந்த திடல் ஒன்று கண்டோம். அதன்மேலே ஏறி நடந்தோம். சில தொழிலாளிக் குடும்பங்கள் அங்கே இருந்தன. ஆண்மக்களைக் காணவில்லை. பெண்கள் குழந்தை களோடு குடிசைபோன்ற இடத்தில் இருந்தார்கள். சமைய லுக்கு ஒருத்தி மசால் அறைத்துகொண்டிருந்தாள். ஆட் களைக் கண்டால் எங்கள் இனத்தைப்போல் தோன்றிற்று.

ஒருத்தி அம்மை வார்த்த முகம். இங்கே வேலைமித்த மாக முன்னமே வந்திருந்ததாகச் சொன்னாள். சிறிது எட்டிப்பார்த்தேன். அங்கே ஒரு மண்வழி போய்க்கொண் டிருந்தது. அது மலையாள காட்டிலே ஆற்றின் கடவி லிருந்து மேலே சாய்வாக ஏறும் வண்டிப்பாதை போலத் தோன்றிற்று. இருபுறமும் தென்னை முதலிய மரங்கள் இருந்தன. சில முதிய பெண்கள் அங்கே வணங்கிக் கொண்டிருந்தார்கள். உற்றுப் பார்க்க அவர்கள் ஆதி ஆந்திரச் சக்கிலியர் போலத் தோன்றினார்கள். அவர்கள் செயலைப் பார்க்கவே மிகுந்த அருவருப்புத் தோன்றியது. அங்குச் செல்லவும் வெறுப்புக்கொண்டு முன்சென்ற இடத் திற்கே திரும்பினேன்.

மற்றொரு குடும்பம் அங்கே வசித்துக்கொண்டிருந்த தைக் கண்டேன். அவர்கள் முகத்தைப் பார்த்தேன். அவர் கள் எனக்கு அறிமுகம் ஆனவர்களாக இருந்தார்கள். அவர் களுடன் பேசினேன். சில மாதங்களுக்கு முன்னே அங்கே வேலைக்கு வந்ததாகச் சொன்னார்கள். எப்படி வந்தீர் கள் என்றேன். 'நாங்கள் தெரிந்தவர் ஒருவர் மூலமாக அனுமதிச்சீட்டுப் பெற்றுக்கொண்டு வந்தோம். இங்கே வேலை கிடைக்கிறது. சுகமாக இருக்கிறோம்' என்றார்கள். 'அனுமதிச்சீட்டு என்னத்திற்கு' என்று கேட்டேன். அனுமதிச்சீட்டு இல்லாவிடில் இங்கே விடமாட்டார்கள். இருக்கமுடியாது. உங்களுக்கு அனுமதிச் சீட்டு இல்லையா' என்று கேட்டார்கள்.

'நாங்கள் அனுமதி பெறவில்லையே; அந்த எண்ணமே இல்லை' என்றேன்.

'அப்படியானால் சீக்கிரம் பெற்றுக் கொள்ளுங்கள்; இல்லாவிடில் மேலே செல்லமுடியாது' என்று எச்சரிக்கை செய்தார்கள்.

அதைக் கேட்டதும் அனுமதிச்சீட்டைப்பற்றி எண்ணமே இல்லாதிருந்த எனக்கு ஏக்கம் பிறந்தது.

உடனே என்னை அழைத்துவந்த துணைவனைத் தேடிச் சென்றேன்.

அவன் நீர்மூழ்கியிலே இரும்புத்தட்டுத் தொட்டியிலே இருந்தான். தண்ணீரிலே ஆழத்தில் நின்றுகொண்டு சிற்றுண்டி அருந்திக்கொண்டிருந்தான். அந்த நிலையில் அவன் இருப்பதைக் கண்டு வியப்படைந்து அவனிடம் பேசத் தொடங்கினேன்.

‘இங்கேவர, அனுமதிச்சீட்டு வேண்டுமாம். இல்லாவிடில் இங்கும் இருக்கக்கூடாதாம். மேலேயும் செல்லலாகாதாம்’ என்றேன்.

‘அது எல்லாம் என் பொறுப்பு. உங்களுக்கு என்ன கவலை’ என்று சொல்லிவிட்டுக் கவலையின்றி உண்டி அருந்திக்கொண்டிருந்தான்.

எனக்கு ஏக்கம் குறையவில்லை. மீண்டும் அதே நினைவு வந்தது. அனுமதிச்சீட்டு இல்லாவிட்டால் சிறையும் உண்டு என்று கேள்விப்பட்டேன். அந்த அனுபவம்பெற எனக்கு விருப்பம் இல்லை. ஆகவே மேலும் சென்றேன்.

மேலே வளைந்து செல்ல ஒரு வில்லைக் கூடம் தெரிந்தது. அதன் வழியே செல்லப் பல பெண்கள் தான்யங்களை முறங்களால் தூவிக்கொண்டிருந்தார்கள். தானியங்கள், உளுந்து, காராமணி, பச்சைப்பயிறு முதலியன இருந்தன. அரிசி இல்லையோ என்றேன்? இந்த ஊரிலுள்ளவர்கள் அரிசி உண்பதில்லை. இவைகளைத்தான் சாப்பிடுவார்கள் என்றார்கள். மிகுந்த ஆச்சரியத்துடன் பின்னும் சென்றேன். அங்கே ஓர் அறையிருந்தது. அங்கே இரண்டு மூன்றுபேர் நாற்காலிகளில் உட்கார்ந்திருந்தார்கள். இவர்களைக் கேட்டால் தெரியும் என்று அருகில் சென்றேன். அவர்களில் இருவருடைய

முகங்கள் தெரிந்தவைபோல் தோன்றின. பேசத் தொடங்கினேன். அவர்கள் என்னைக் கண்டு மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

எதிரே ஒரு திறந்த மா அலமாரியில் புத்தகங்கள் இருந்தன. தலைப்புக்களைப் படித்தேன், 'திருவள்ளுவரும் தற்காலமும்' முதலிய பெயர்கள் அவைகளின் அட்டைகளில் வெள்ளை எழுத்தால் அச்சடித்திருந்தன. வெகு மகிழ்ச்சியுற்றேன். நானும் என்னுடைய புது நூல்களை இங்கே கொண்டுவந்து வைத்திருக்கலாம் என்று நினைத்தேன்.

திடீரென்று கண்பிசைந்தேன். இந்த இன்பகரமான காட்சி முழுவதும் மறைந்தது. என்னுடைய படுக்கையிலே படுத்துக்கொண்டு புரண்டுகொண்டிருந்தேன்.

என்ன, இத்தனை உவப்பைத் தந்த காட்சிகள், பயணம், கடல்நீச்சம், நீர்மூழ்கி, நண்பர், கூலிப்பெண்கள், உணவுப் பொருள்கள், இறுதியில் நூல் அலமாரி இவைகள் எல்லாம் எங்கே என்று கண்பிசைந்து எண்ணி எண்ணிப் பார்த்தேன். அடடா இவைகள் எல்லாம் கனவோ என்று திகைத்தேன்.

இவ்விதம் அருமையான கனவுகள் அடிக்கடி வருவது இல்லை. வந்தாலும் நிற்பதில்லை. சில விநாடிகளில் மறைந்து விடுகின்றன. அப்போது கிழக்கு வெளுத்திருந்தது. என்ன விடியற்காலைக் கனவோ? இதன் பலன் என்னவோ? என்று எண்ணி உடனே விளக்கு அமிழ்த்தி ஒரு கடிதத்தில் எஞ்சி நின்ற இடத்தில் கனாக்காட்சியைக் குறித்துவைத்தேன். அதற்குள் சில மறந்துபோய்விட்டன. நினைவு இருந்தவைகளை மட்டும் குறித்துப் பின்னர் இந்தக் கட்டுரையாக எழுதினேன். முழுவதையும் கனவில் கண்டிருக்கலாகாதா என்று துயரப்பட்டேன்.

15. கத்தியும் கதை கற்பிக்கிறது

நாட்டுப்புறத்தான் ஒருவன் ஒரு நகரத்திற்குச் சென்றான். அங்கே கடைத்தெரு வழியாகச் செல்லுகையில், ஒரு கடையிலே பலவிதமான புதுக் கத்திகள் வைத்திருக்கக் கண்டான். அக்கத்திகளைக் கண்டதும் அவைகளின்பேரில் அவனுடைய நோக்கம் சென்றது. ஒரு கத்தியை வாங்கினால் தன் குடித்தனத்திற்குப் பல வகைகளிலும் பயன்படும் என்று எண்ணினான். உடனே ஒரு கத்தி வாங்க எண்ணி ஒன்றைப் பொறுக்கி அதன் விலையைக் கேட்டான். கடைக்காரன் அதன் விலை இரண்டு ரூபாய் என்று சொன்னான். குறைத்துக் கேட்டுப்பார்த்தான். கடைக்காரனோ ஒரே பிடிவாதமாக இருந்தான். அவ்வளவு தொகை கொடுக்க விருப்பம் இன்றி நாட்டுப்புறத்தான் அக்கத்தியை வாங்காமல், மேலும் அத்தெருவழியே சென்றான். ஆனால் கத்தி ஒன்றை வாங்கவேண்டும் என்ற எண்ணம் அவன் மண்டையைவிட்டு நீங்கவே இல்லை.

சிறிது தொலைவு சென்றவுடனே பழைய சாமான் விற்கும் கடை ஒன்று தென்பட்டது. அக்கடையில் பழைய கத்தி ஒன்று வைத்திருந்தது. அதன் விலையைக் கேட்டான். கடைக்காரன் அதன்விலை ஒரு ரூபாய் என்று சொன்னான். கத்தி பழையதானபோதிலும் விலை குறைவு அல்லவா ? அதுவும் தனக்குப் பயன்படுமே என்று எண்ணி வெகு மகிழ்ச்சியுடன் ஒரு ரூபாய் கொடுத்து அப்பழைய கத்தியை வாங்கினான். வெகு மகிழ்ச்சியோடு அதனைப் பார்த்துப் பார்த்து மெச்சிக்கொண்டு வீடு சேர்ந்தான்.

வீட்டுக்குச் சென்றவுடன் தன் மனைவிக்கு அதனைக் காட்டி அவளுடைய சம்மதத்தைப் பெறவேண்டும் என்று வெகு ஆவலுடன் அதனை அவளுக்குக் காட்டினான்.

அவளோ அதனைக் கையில் வாங்கி இதென்ன பழைய கத்தியாக இருக்கிறதே? இதற்கேனோ காசுபோட்டீர்கள்? புதுக்கத்தி நகரத்தில் கிடைக்கவில்லையோ என்று முகத்தைச் சுளித்துக்கொண்டு பேசினாள். இந்தச் சொல்லை நாட்டுப் புறத்தான் எதிர்பார்க்கவில்லை. தன் செய்கையைக் குறித்து மெச்சுவாள் என்றிருந்த அவனோ இச் சொல்லைக் கேட்ட வுடன் ஆத்திரப்பட்டு, "இது பழைய கத்தியானாலும் வலுவுள்ளது. நமக்கு வலுவுள்ளதுதானே வேண்டும்? எதையும் நன்றாக அறுக்கும்" என்று மன்றாடினான்.

"'கெட்டதானாலும் கைப்பிடி நிறையவேண்டும்' என்ற போக்கிலே நீங்கள் பேசுகிறீர்கள். இதோ பாருங்கள். இந்தக் கத்தியின் பிடி எப்படியிருக்கிறது? தேய்ந்துபோய் அழுக்கேறிக் கிடக்கிறது. இதை ஒருபொருள் என்று வாங்கினீரே" என்று கேலி செய்தாள்.

நாட்டுப்புறத்தானுக்கோ இந்தப் பேச்சைக் கேட்கச் சகிக்கக்கூடவில்லை. 'மறுமுறை நகரம் செல்லும்போது அந்தப்படி கேலிக்கிடம் கொடுத்த பிடியை மாற்றிவிட வேண்டும்' என்று நினைத்தான்.

சிலநாட்களுக்குள்ளாக நகரத்திலே ஒருவேலை ஏற் பட்டது. அதே சாக்கில் கத்தியின் நினைவும் வர அதனை எடுத்துக்கொண்டு நகரம் சென்றான். தான்சென்ற வேலை முடிந்ததும் கடைத்தெருவிற்குச் சென்றான். அங்கே கத்திகள் விற்கும் கடைக்குச் சென்றான். பிடி வேண்டும் என்று கேட்டான். கடைக்காரன் ஒரு நல்ல புதுப்பிடியாகக் கொடுத்தான். விலை கேட்டதற்கு ரூபாய் ஒன்று என்று சொன்னான். அதைப்பெற்றுக்கொண்டு பழைய பிடியை எடுத்துவிட்டுப் புதுப் பிடிபோட அரை ரூபாய் கூலியும் கொடுத்துவிட்டு வெகு மகிழ்ச்சியோடு ஊர் திரும்பினான்.

தன் மனைவியிடம் இப்போது நல்வாக்குக் கிடைக்கும் என்று வெகு ஆவலுடன் வந்தான்.

வீடு வந்து சேர்ந்ததும் மனைவிக்குப் புதுப் பிடியைக் காட்டினான். அவள் அதனை வாங்கிச் சோதித்தாள். "அடடா, வெகு சாமர்த்தியசாலி. பழைய பிடிக்குப் பதிலாகப் புதுப்பிடி போட்டால் போதுமா? இதோ பாருங்கள், பாவாடை புதிது, இரவிக்கை பழையதுபோலத் தெரிகிறது. இப்படியும் ஆண்பிள்ளைகள் போக்கும் போகிறதே. இந்தப்படி சீர்கேடு செய்யாமல் சும்மா இருக்கலாகாதோ" என்று எரிந்துவிழுந்தாள்.

"நீதானே பிடி நன்றாக இல்லை என்றாய்? கத்தியைப் பற்றிக் குறை சொல்லவில்லையே? இன்றைக்கு என்ன புத்தி மாறிவிட்டதோ" என்றான்.

"உங்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான். இந்தக் கத்தியின் தற்போதைய நிலையைக் கவனித்துப் பாருங்கள். பிடி புதியது; கத்தி பழையது. கொஞ்சமேனும் பொருத்தமாக இருக்கிறதா? இருந்தால் இரண்டும் புதிது; இல்லாவிட்டால் இரண்டும் பழையதாய் இருக்கவேண்டும். திருப்பதி நாவிதன் க்ஷவரம் செய்ததுபோல் இருக்கிறதே" என்றாள்.

இச்சொல்லைக் கேட்டவுடன் தலை குனிந்துகொண்டு அவன் வெளியே போய்விட்டான். மறுமுறை நகரம் எப்போது போவோமோ என்று எண்ணிக்கொண்டே இருந்தான். சில நாட்களில் நகரத்தில் மற்றொரு வேலைவந்தது. அக்குடியானவன் வெகு எச்சரிக்கையுடன் அக்கத்தியை எடுத்துக்கொண்டு நகரம் சென்றான். தன்வேலை முடிந்ததும் கத்திக்கடைக்குச் சென்றான். புது இரும்புப் பகுதி கேட்டான். அது கிடைத்தது. அதன் விலையோ ஒன்றரைரூபாய். அதனை மாட்டவோ அரைரூபாய். ஆக இரண்டுரூபாய் தந்துவிட்டுப் புது இரும்பை மாட்டிக்கொண்டு வெகுமகிழ்ச்சி

யோடு ஊர்போய்ச் சேர்ந்தான். இப்போது தன் மனைவி சம்மதம் தருவாள் என்று வெகு ஆர்வத்துடன் வீடுசேர்ந்தான்.

வீடுசேர்ந்ததும் அவன் செய்த முதற் காரியம் தன் மனைவிக்குத் தன் கத்தியைக் காட்டினதுதான். அவள் அதனை நன்கு சோதித்துப் பார்த்தாள்.

"கத்தியோ புதிது. முன்னிருந்தபடி பழையது அல்ல. புதிதான பகுதிகளால் ஆக்கப்பட்டது. ஆனால் புத்தம் புதிதான கத்தியைப்போல் ஒரே கையால் ஆக்கப்படவில்லை. புதுக்கத்தியைவிட வலிவு குறைவுதான்" என்றாள். 'இது என்ன, இவளைத் திருப்திசெய்ய முடியாது போலிருக்கிறதே' என்று எண்ணினான். அவள் விடவில்லை. மேலும் சொன்னாள். 'இந்தக் கத்திக்கு ஒட்டுச்செலவு என்ன ஆயிற்று' என்று கேட்டாள். அவனோ பதில் சொல்லக் கூசினான். அவளோ சும்மாயிருப்பாளோ ? அவன் பொய்சொல்லவும் முடியவில்லை. ஏனெனில் அவளுக்குப் படிப்படியாக நடந்ததெல்லாம் தெரியும் அல்லவா ?

'மொத்தம் 4½ ரூபாய்' என்றான்.

'இதே மாதிரி புதுக்கத்தியின் விலை என்ன ? விசாரித்திருப்பீர்களே ?' 'ஆம். இரண்டு ரூபாய்.'

'அப்படியானால் புதிதே வாங்கித் தொலைத்திருக்கலாமே? பழையது வாங்கி இரட்டத்தனைக்குமேல் செலவழித்துப் பின்னால் இந்தப் பழிச்சொல் ஏன் பெறவேண்டுமோ' என்று கடிந்தாள்.

'சரி. மோசம் போயிற்று ; இனிமேல் புத்தி வந்தது' என்று சொல்லவும் வாய் எடுத்தான். 'இனி என்ன பச்சாதாபப்பட்டுப் பயன் இல்லை. நீள்செவியன்போல் நடக்காமல் இந்தப் படிப்பே போதும்' என்று இருந்தான். 'போதும்' என்று சொல்லி அடுப்பங்கரைக்கு அவளும் சென்றாள். இந்தப் பட்டிக்காட்டான் போல் நாமும் தினமும் நடந்து

கொள்வதில்லையா ? பல சமயங்களில் பழைய சாமான் களைக்கண்டு சலீசானது என்று வாங்கி ஏமாறிப்போகிறோம். பின்னால் செப்பனிடுவதற்கு இரட்டத்தனை செலவு செய்கிறோம். அனுபவம் வந்தும்கூட மறுபடியும் செய்வதில்லையா? ஆனால் மற்றொரு காரணமுமுண்டு. பழையசாமான் தேடிச் செல்வது சலீசுமட்டும் அல்ல. கையில் காசு இல்லாத குறையும் சேர்ந்ததனால் அல்லவா! ஆகவே, பட்டிக்காட்டானிடம் குற்றம் என்ன இருக்கிறது ? சற்றுக் கவனியுங்கள்.

நான் சென்னையில் படித்துக் கொண்டிருந்தபோது என்னுடன் ஒரு மாணவன் சேர்ந்து வாசித்தான். அந்த வகுப்பிற்கு வருடம் ஒன்றுக்குச் சம்பளம் ரூபாய் 100 இருந்தது. ஆனால் மாதா மாதம் கட்டும் பட்சத்தில் மாதம் ஒன்றுக்கு 10 ரூபாய் ஆகும். அப்படிக் கட்டிப் படிப்பவர்களுக்கு ரூ. 120 ஆகும். அம் மாணவன் மாதந்தோறும் கட்டுவான். அந்த வகையில் அவன் என்னைவிட 20 ரூபா அதிகமாகக் கட்டுவான். இதை அறிந்தபோது எனக்கு அவ்வப்போது வியப்பாக இருக்கும். நீ ஏன் அதிகமாகக் கட்டவேண்டும் ? என்னைப்போல் ஒரே தடவையில் கட்டி 20 ரூபாய் மிச்சம் ஆக்கக்கூடாதா ? என்று கேட்டேன். அதற்கு அவன் சொன்ன பதில் திருப்தி தந்தது. என் அறியாமையைக் கண்டு துயருறுகிறேன்.

அவனுடைய குடும்பம் சாதாரணக் குடும்பம். அவன் தகப்பனுருக்கு அரசியலில் மாதச் சம்பளம் வந்தது. அது குடும்பத்திற்குப் போதிய அளவே இருந்தது. அதில் தன் மகனுடைய சம்பளத்திற்கு மாதம் மாதம், கட்ட முடியுமேயன்றி மீதிவைத்துச் சேகரம் செய்ய வகையில்லை. ஆகவே, இறுதியில் சிறிது கூடுதலாக இருந்தபோதிலும் மாதா மாதம் அவன் கட்டுவது எளிதாக இருந்தது. இவ்வகையில் ஏழ்மையே சில சம்பவங்களுக்குக் காரணமாக இருக்கிறது.

உலகத்தில் பல சமயங்களில் இந்த நிலைமையைக் காண்கிறோம். புதிதாகச் சாமான் வாங்குவது நல்லதுதான். ஆனால் புதிதான சாமானுக்கு நிரம்பப் பணம் வேண்டும். கையில் பணம் இருக்காது. பழைய சாமான் ஒன்றை இருக்கிற பணம் கொண்டு வாங்கமுடியும். அந்தக் காலத்திற்கு அதனால் பலன் அடையமுடியும். ஆனால் அந்தப் பலன் நெடுந்தொலைவுக்கு வராது. அப்படிப்பட்ட பழைய சாமானை அடிக்கடி செப்பனிடவேண்டி வரும். அதனால் பணம் செலவு ஆகும். மொத்தத்தில் பார்த்தால் பழைய சாமான் விலையோடு செப்பனிட்ட செலவைச் சேர்த்தால் புதிய சாமான் விலையைவிட அதிகம் ஆகலாம். ஆனால் ஏழை என்ன செய்யமுடியும்? புதிய சாமானை ஒரே காலத்தில் வாங்க முடியாமல் திகைப்பான். பழைய சாமானை வாங்கிப் பயன் அனுபவித்துக் கொள்வான். பிறகு செப்பனிடுவான். அதையும் அவன் செய்ய முடியும். ஆகவே, மொத்தத்தில் அதிகம் ஆனாலும் இறுதியில் தான் அடையக்கூடிய பயனை அவன் அடைவதில்லையா?

இதுபோல்தான் பட்டிக்காட்டானுக்கும் கையில் காசு இருக்காது. மனமும் இருக்காது. புதுச் சாமான் வாங்க முடியவில்லை. பழைய சாமான் வாங்கினான். பின்னர் செப்பனிட வகை இருந்தது. ஒருதடவை இரண்டு ரூபாய் இல்லாமல் போகச் சில்லறையாக ஒன்று ஒன்றரை செலவு செய்ய வகையிருந்தது. மனைவியின் கேலியே அவ்வாறு செய்வித்தது.

மனைவியின்நிலையும் சிலசமயங்களில் சரி, சிலசமயங்களில் தப்பு. கணவன் கஞ்சன் ஆனால் அவள் செயல் சரி. அவன் ஏழையானால் அவள் செயல் தப்புதான். இந்தவகையில் பட்டிக்காட்டான் கதை ஒரு படிப்பினையைத் தருவதில்லையா?

———

16. குடும்பம் கோஷம்

எப்போதைப் போலவே நான் இன்று காலையும் குளக் கரைமீது உலாவப் போனேன். சூரியன் உதயமாகவில்லை. போக்குவரத்து விசைவண்டி (பஸ்) நிற்கும் இடத்தின் பக்கமாகச் சென்றேன். சிறிது முன்தான் மழை வந்து நின்றிருந்தது. இந்த ஆண்டில் இந்தப் புரட்டாசி மாதத் துக் கடுமை அறிந்ததே. எத்தனைக் குடும்பங்கள் மழை யால் துன்பம் அடைந்தன? ஆகவே, மழை என்றால் யாருக் குத்தான் பயமாக இருக்காது? நல்லகாலமாக மழை நின்று விட்டது. தார் இட்ட பாதையில் நீர் அங்கங்கே தங்கி இருந்தது. ஜாக்கிரதையாக நடந்து சென்றேன். எதிரே வண்டி வரும்போதெல்லாம் என் வேட்டியைத் தூக்கிக் கொள்ள வேண்டி வந்தது. மழை நீர் தெரித்தால் வேட்டி என்ன ஆகும் என்று கூறவேண்டியதில்லை.

விசை வண்டிக்காக ஒரு குடும்பம் காத்துக்கொண் டிருந்தது. பாவம் எத்தனை நேரம் காத்துக்கொண்டிருந் தார்களோ அறியேன்? அவர்களுடைய முகங்களைப் பார்த்த அளவில் ஒரு மணி நேரமாகவாவது அவ்வாறே வண்டியை எதிர் பார்த்திருக்க வேண்டும் என்று தோன்றிற்று. தகப் பனுக்கு 35 வயதிருக்கும். தாய்க்கு 30 வயதிருக்கும். மூன்று ஆண்பிள்ளைகளும் மூன்று பெண்பிள்ளைகளும் இருந் தார்கள். கையில் இருந்த குழந்தைக்கு 2 வயதிருக்கும். பெரிய பிள்ளைக்கு 12 வயதிருக்கும். மற்றவர்கள் படிப் படியாக இவ்விரண்டு வயதிற்கு மேற்பட்டவர்கள் என்று கூறலாம். வேக்பீல்ட் பாதிரி (Vicar of Wakefield) இவர்களுக்குத் தோற்றிடுவார் சமகாலத்தில் பிரஜா உற் பத்தி செய்வதிலே. நின்றவர்களுடைய நடை யுடை பாவனையால் நடுத்தரமான அந்தஸ்து அல்லது அதைவிட

ஒருபடி குறைந்தவர்கள் என்று கூறவேண்டும். பொதுவாக குமாஸ்தா சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும்.

வெகு நேரம் நின்றிருக்கச் சலித்துப்போய் ஒரு குழந்தை நிலத்தில் உட்கார்ந்தான். 'வண்டி வந்துவிடும் நில்லடா' என்றுள் தாய். அவனுல் நிற்க முடியவில்லை. பாவம் பிள்ளைகளுக்கு அன்று ஏதும் வயிற்றுக்குக் கொடுக்கப்படவில்லை போலும்! தகப்பனுர் முகத்தைப் பார்த்தேன். மிகவும் கோபமாக இருந்தது. தாயோ மறு புறம் திரும்பிக்கொண்டு துயரத்தோடு நின்றுள். தண்ணீர் ததும்புவதுதான் பாக்கி. அவள் வெகு பரிதாபமாக இருந்த தன் கைக்குழந்தையைப் பார்ப்பாள். தன் கண வன் குழந்தையைப் பார்க்க அஞ்சினுற் போல நின்றுன். அவனுடைய கோபக்குறி மாறவில்லை. வண்டி வரும் பாதையை நோக்கினுன். வண்டி எப்போது வருமோ என்று அதனைக் கோபித்துத் திட்டும் நிலையில் நின்றுன். அவனுக்கும் பசி போலத் தோன்றுகிறது. இவன் கோபத் திற்கும் அவள் துயரத்திற்கும் என்ன காரணம் என்று ஊகித்தேன்? "வண்டி ஒரு மணிநேரமாகியும் வரவில்லையே? ஏன் இவ்வளவு விரைவில் எங்களை அழைத்து வந்தீர்கள்? காலையில் ஏதாவது சாப்பிட்டுப் பிள்ளைகளுக்கும் ஊட்டி விட்டு வந்திருக்கலாமே" என்று மனைவி கூறியிருக்கவேண் டும். அவனே, "நாம் இருந்தது உறவினர் வீடு. அவர்களை அதிகாலையில் தொந்தரவு கொடுத்துச் செலவழிக்கச் செய் வது நியாயமா? வண்டி எந்த நேரத்திற்கு வரும் என்று யார் கூறமுடியும்? ஒன்று தப்பினுல் மற்றென்று வருவ தற்கும் ஒரு மணி நேரம் ஆகும். கிடைக்காவிட்டால் வீடு சேர்ந்து கச்சேரிக்கு எப்படிப் போகமுடியும்?" என்று கடு கடுத்துப் பேசியிருக்கக் கூடும். இதைக் கேட்க அந்த மனைவி துயரத்துள் ஆழ்ந்திருக்க வேண்டும். "இப்படிப்

பட்ட பெருங் குடும்பத்தை இப்பேதைகளுக்கு ஏன் படைத்தவன் தந்தானோ" என்று அவனை நொந்து கொள்ள வேண்டி வந்தது.

ஒரு வண்டி வரும் ஓசை கேட்டது. பிள்ளைகள் எல்லாம் மிகுந்த ஆவலுடன் பார்த்தார்கள். ஒரு பிள்ளை முன்னால் ஓடவும் முயன்றான். உடனே தகப்பன் அவனைப் பிடித்து இழுத்து ஓர் அடியும் போட்டான். 'அது இராணுவ எமன். சிறிது தப்பினால் பிள்ளை மீது ஏறியிருக்கும். அப்பாடா தப்பினோம்' என்று பெருமூச்சுவிட்டாள் தாய். மறு வண்டி வந்தது. அது ஒரு தனிகனுடைய விசை வண்டி. ஒரு பெண் அதனைப் பார்த்து இவ்வண்டி நமக்குக் கிடைக்காதா என்று ஆவலுடன் பார்த்தாள். அத்தனைச் சொகுசு நமக்குக் கடவுள் கொடுக்கவில்லை என்று பெரிய பையன் அவளைக் கண்டு கூறும் வகையில் நின்றான். மறுபடியும் ஒரு திருவல்லிக்கேணி வண்டி வந்தது. 'தரித்திரம், இதனை யார் வரச் சொன்னார்கள்' என்று தகப்பனார் எண்ணினார் போல் அதனை வெறுப்புடன் பார்த்தார். இவ்வாறு பல வண்டிகள் வந்து வந்து போயின. மயிலாப்பூர் வண்டி கடைசியில் வந்தது. வெகு ஆவலுடன் அதில் ஏறிப் போனார்கள். ஏறுவதற்குச் சிறிது நேரம் ஆயிற்று. சீட்டுக் கொடுப்பவனுக்குக் கோபம் வந்துவிட்டது. 'எத்தனை நேரம் ஏறுவது' என்று கடுகடுத்தான். 'இவனிடமும் வசைபடவேண்டுமோ, என்ன பாவம் செய்தோமோ?' என்று தாய் தன்னையே நொந்துகொண்டாள். இவ்வாறு அக்குடும்பத்தார் வண்டி ஏறிச் சென்றார்கள்.

நான் அவர்களைக் கண்டபோது கீழே உட்கார்ந்த சிறுவனின் முகத்தைக் காணுகையில் அவன் சிறிய மூளையில் என்ன ஓடிக் கொண்டிருக்கும் என்று ஊகித்தேன். காலையில் விடியலுக்கு முன் எழுந்து வண்டி நிலையத்திற்கு

வந்தார்களல்லவா? இத்தனை தூரமும் நடந்தே வந்திருக்க வேண்டும். 'அம்மா நாம் செல்லும் மயிலாப்பூர் வந்துவிட்டதா? நடக்க வேண்டியதெல்லாம் நடந்துவிட்டோமா?' என்று பரிதாபமாகக் கேட்பதுபோல் இருந்தது. இல்லை என்று அறிந்ததும் அவன் களைப்பினால் கீழே உட்கார்ந்திருக்கவேண்டும் என்று எண்ணினேன். அப்போது நளனுடைய சிறு குழந்தைகள் நகர்விட்டு நீங்கும்போது பெற்றோரைப் பார்த்து, 'வழியான வெல்லாம் கடந்தோமா' என்று பரிதவித்துக் கூறியது நினைவுக்கு வந்தது. இந்தக் குடும்பத்தாரின் பிரயாணத்திற்கும்,

"சந்தக் கழற்றா மரையும் சதங்கையணி
பைந்தளிரும் நோவப் பதைத்துருகி—எந்தாய்
வடந்தோய் களிற்றாய் வழியான வெல்லாம்
கடந்தோமா என்றார் கலுழ்ந்து"

என்ற புகழேந்திப் பாடல் மிகப் பொருத்தமாக இருந்தது அல்லவா?